விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 சித்திரை 03 செவ்வாய்க்கிழமை (16.04.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 118

## தீக்காயங்களுடன் சிகிச்சை பெற்று வந்த யுவதி மரணம்

(கரணவாய்)

தீக்காயங்களுடன்யாழ்போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த யுவதி ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். கடந்த சனிக்கிழமை இமை 24☛

## பிரதமர் பதவிக்கு ஐ.தே.கட்சியில் ரணிலே தகுதியானவர் – ரவி கருணாநாயக்க


(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் ஒரு தலைவர் தான் இருக்கின்றார். அவர் ரணில் விக்கிரமசிங்க மட்டும் தான் என அமைச்சர் ரவிகருணாநாயக்க தெரிவித்துள்ளார். 23☛

### ஜனாதிபதித் தேர்தலில் தேசிய இனப்பிரச்சினைக்கு

# தீர்வு தர உத்தரவாதம் வழங்குவோருக்கே ஆதரவு

## சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் விடயத்தில் உரிய உத்தரவாதத்தை வழங்குவோருக்கே நாம் ஆதரவளிப்போமென முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## ராஜபக்ஷ ஆட்சிக்கு வருவதை தமிழ் மக்கள் விரும்பவில்லை



### சிவஞானம் சிறிதரன்

(கொழும்பு)

இலங்கை தலைவர்கள் எவரும் தாங்கள் செய்த குற்றங்களை எந்த வேளையிலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதுவும் ராஜபக்ஷ குடும்பத்தினரிடம் அதனை துளியளவேனும் எதிர்பார்க்க முடி 23☛

### தமிழர்களின் பிரச்சினைகளுக்கு

## தீர்வைப் பெற்றுக்கொடுப்பதே அரசாங்கத்தின் நோக்கம்

### அமைச்சர் ரவி கருணாநாயக்க




(மட்டக்களப்பு)

வடக்கு - கிழக்குத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை இலங்கைக்குள் பெற்றுக்கொடுப்பதே அரசாங்கத்தின் நோக் 23☛

### எதிர்வரும் நாட்களில்

## சுழற்சி முறையில் மீண்டும் மின்வெட்டு!



(கொழும்பு)

இலங்கையில் தொடரும் கடும் வரட்சி காரணமாக மின்சார உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக மின்வலு எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. இதன் காரணமாக சீராக மின்சார விநி 23☛

## மானிப்பாயில் இடம்பெற்ற வாள்வெட்டுடன் தொடர்புடைய 8 பேர் ஒரே இரவில் கைது

### ஒருவர் தலைமறைவு : பல ஒளிப்படங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற வாள்வெட்டு வன்முறைகளுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் ஒரே இரவில் 8 பேர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாள்வெட்டுக் குழுவில் 8 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் ஒருவர் தலைமறைவாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் 3 வாள்கள், ஒரு சுழியோடிக் கண்ணாடி மற்றும் 2 மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டன. 23☛

## தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் – விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டணியாக செயற்பட வேண்டிய தேவைப்பாடு தற்போது ஏற்பட்டுள்ளதாக தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும், வட மாகாண முன்னாள் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் வழங்கிய விசேட செவ்வியின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ம-3)

## தேர்தல் நடத்தப்பட்டவுடனே அரசில் பாரிய மாற்றம்

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

தேர்தல் நடத்தப்பட்டவுடனே அரசாங்கத்தில் பாரிய மாற்றம் ஏற்படும் என எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 23☛

## புதுவருடத்தில் இடம்பெற்ற கைகலப்பு, விபத்து காரணமாக

### 110 பேர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதி

(பனிக்கன்குளம்)

புதுவருடத்தில் இடம்பெற்ற கைகலப்பு மற்றும் விபத்துக்கள் காரணமாக காயமடைந்த 110 பேர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், 8 பேர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுவருட தினமான நேற்று முன்தினம் காலை 6.00 23☛

## உழவு இயந்திரம் தடம்புரண்டதில் இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

### துணுக்காய் சந்தியில் சம்பவம்



(துணுக்காய்)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த உழவு இயந்திரம் தடம்புரண்டதில் இளம் குடும்பஸ்தர் உயிரிழந்ததுடன் மூவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனு

### நாடு தழுவிய ரீதியில் சுற்றி வளைப்பு

## 29,461 பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

### 941 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கடந்த நான்கு நாட்கள் பொலிஸார் மேற்கொண்ட அதிரடி சுற்றிவளைப்பில் 941 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மது அருந்தி விட்டு வாகனத்தை செலுத்திய குற்றத்திலேயே குறித்த சாரதிகள் அனை 24☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

# விபத்தில் படுகாயமடைந்த கனடா பிரஜை மரணம்

(யாழ்ப்பாணம்)

பூநகரி விபத்தில் படுகாயமடைந்த கனடா நாட்டுப் பிரஜை சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இலங்கையில் இருந்து சென்ற செ.சுந்த ரேஸ்வரன் (வயது66) கனடா நாட்டுப் பிரஜா வுரிமை பெற்றவரே இவ்வாறு உயிரிழந்த வராவார்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதா வது, கடந்த 28ஆம் திகதி விசுவமடுவில் உள்ள தனது காணியைப் பார்க்கவென மோட்டார் சைக்கிளில் சென்று திரும்பும் வேளை பூநகரிப் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட் டார் சைக்கிள் வீதியோரக் கால்வாயினுள் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் படுகாயமடைந்த நபர் பூநகரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந் நிலையில் குறித்த நபர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.(ம-10)

**கார், வான் வாடகைக்கு தேவை**

கார்கள், வான்கள் மாதாந்த குத்தகைக்கு ஒப்பந்த அடிப்படையில் தேவை.

**071 093 8967**

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும்

கடந்த (18.03.2019) திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு



**அமரர் பெரியதம்பி தம்பிநாதர்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.04.2019) செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலையிலும் நடைபெற்று வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண நிகழ்வு நாளை மறுதினம் (18.04.2019) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வற்றாப்பளை,
முள்ளியவளை.

(சி-6100)

தகவல்: குடும்பத்தினர்
077 558 8543

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் நாகலிங்கம் சந்திரசேகரன்**

எமது சிற்றி லயன்ஸ் கழகத்தின் பொருளாளர் லயன்.ச.சிறிகாந் அவர்களின் அன்புத் தகப்பனார் அமரர் நாகலிங்கம் சந்திரசேகரன் அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் எங்கள் நண்பன் குடும்பத்தினருக்கும் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**யாழ் சிற்றி லயன்ஸ் கழகம்
யாழ்ப்பாணம்.**

(C-6098)

# கண்ணீர் அஞ்சலி

**எமது பாடசாலையின் ஸ்தாபகர் முருகேசு சந்திரகுமார் அவர்களின் தந்தையார்**

## அமரர் கணபதி முருகேசு

அவர்கள் நேற்று முன்தினம் (14.04.2019) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.



ஆற்றல்கள் பொதிந்த அழகிய திருவாய்
மாற்றங்கள் படைத்த மாண்பே...
அன்பான உறவாய் பண்பான செயல்கள்
பணியோடு புரிந்து அயராத உழைப்பால்
அகிலத்தில் நிமிர்ந்து – இன்று
காலனின் அணைப்பிற்குள்
கண்மூடித் துயிலும் தூயவரே!
உங்கள் ஆத்மாவின் இளைப்பாறலிற்காய்
கண்ணீரால் நனைக்கின்றோம்
கனத்த எம் மனங்களை!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(சி-6093)

**பாடசாலைச் சமூகம்,
கிளி/விவேகானந்த
வித்தியாலயம், அம்பாள்குளம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிலிருந்து முழுமையான படைவிலக்கல் சாத்தியமில்லை

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் உறுதி



(கொழும்பு)

**வடக்கு மாகாணத்திலிருந்து முழுமையான படைவிலக்கல் சாத்தியமில்லை என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

போர் முடிவுக்கு வந்து 10 ஆண்டுகளாகியுள்ள நிலையில், வடக்கில் படை விலக்கம் தொடர்பாக அரசியல் ரீதியான ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கூறியிருந்தார்.

இதுதொடர்பாக, கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவிடம் கருத்துக் கேட்ட போது,

"தேசிய பாதுகாப்பு, எல்லைக் கட்டுப்பாட்டுக் காரணங்களால், முப்படைகள் மற்றும் பொலிஸ் துறையினரை தமது இடங்களிலிருந்து ஏனைய இடங்களுக்கு செல்லுமாறு கேட்க முடியாது.

இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதால் தமக்கு அச்சுறுத்தல் இருப்பதாக அந்தப் பிரதேச மக்கள் உணர்வார்களேயானால், அரசாங்கம் சம்பந்தப்பட்ட நபர்களுடன் கலந்துரையாடி எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான ஒரு முடிவுக்கு வரும்.

அவ்வாறான நபர்கள் மற்றும் குடும்பங்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றுவதே இந்தப் பிரச்சினைக்கு ஒரு சாத்தியமான தீர்வாக இருக்கும்.

எவ்வாறாயினும், தேசிய பாதுகாப்பு நலன்களைக் கருத்தில் கொண்டு இப்போது குறிப்பிட்ட இராணுவத் தளங்களை வேறு இடத்துக்கு மாற்றவோ, வடக்கிலிருந்து படைகளை முற்றாக விலக்கவோ முடியாது.

இந் நிலைமையில் பொருத்தமான சாத்தியமான கொள்கை குறித்து கலந்துரையாடி அரசாங்கம் பரிந்துரை ஒன்றை முன்வைக்க வேண்டும். எதிர்காலத்தில் அந்தக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# அரசாங்கம் கூறினாலும் படைவிலக்கல் நடக்காது

## இராணுவப் பேச்சாளர் திட்டவட்டம்



(கொழும்பு)

வடக்கிலிருந்து படைகளை முழுமையாக விலக்கும் கோரிக்கையை அரசாங்கம் முன்வைத்தாலும் அதனை நடைமுறைப்படுத்த முடியாது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

வடக்கிலிருந்து படையினரை நடத்துவதாக இருந்தாலும் அந்த உத்தரவையும் நாங்கள் பின்பற்றுவோம்.

எவ்வாறாயினும் வடக்கு மாகாணத்திலிருந்து படையினரை முழுமையாக விலக்கும் கோரிக்கையை ஒருபோதும் செயற்படுத்த முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# சட்டமா அதிபர் திணைக்களத்தில் தேங்கிக் கிடக்கும் ஆவணங்கள்

## 17,600 இற்கும் அதிகம் எனத் தகவல்

(கொழும்பு)

2017 ஆம் ஆண்டு இறுதிப் பகுதி முதல், தற்போதுவரை சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான 17 ஆயிரத்து 600 இற்கும் அதிகமான ஆவணங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தில் தேங்கிக் கிடப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் வருடாந்த அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையானது இந்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

2017 ஆம் ஆண்டு சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் 161 பேர் சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

சிறுவர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் விடயங்கள் தொடர்பான வழக்குகளைத் தீர்ப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதும் அவை வெற்றியளிக்காமைக்கு பல்வேறு காரணங்கள் தாக்கம் செலுத்துவதாக சட்டமா அதிபர் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த ஆவணங்களிலுள்ள குறைப்பாடுகள் இதற்குப் பிரதான காரணமாகும்.

அவற்றுள் பெரும்பாலான வழக்குகள் 16 வயதிற்கும் குறைந்த சிறுவர்கள் ஏற்படுத்திக் கொண்ட அநாவசியமற்ற தொடர்புகளினால் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமானவையாகும்.

குறித்த சம்பவங்கள் தொடர்பில் சாட்சியமளிப்பதற்கு சம்பந்தப்பட்ட சிறுவர்கள் முன்வராமையே, குறித்த வழக்குகளைத் தீர்ப்பதில் தாக்கம் செலுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இறுதி யுத்தம் தொடர்பான புகைப்படங்களுக்குத் தடை

## அ.தி.மு.கவின் தேர்தல் பிரசார உத்தி பிசுபிசுப்பு

(சென்னை)

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தம் தொடர்பான புகைப்படங்கள் அடங்கியவாறு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள தேர்தல் பிரசார விளம்பரங்களை இந்தியத் தேர்தல் ஆணையகம் தடை செய்துள்ளது.

இந்திய ஊடகமொன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் ஒரு தசாப்தத்திற்கு முன்னர் இடம்பெற்ற இறுதி யுத்தம் தொடர்பில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது குற்றம் சுமத்தியும் அதன் ஊழல்கள் தொடர்பிலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தால் மூன்று விளம்பரங்கள் ஊடாக தேர்தல் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டத் துறை பிரிவினரால் இந்தியத் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த விளம்பரங்களின் ஊடாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினால், திராவிட முன்னேற்றக் கழகம் மீது அடிப்படையற்ற விவாதத்தில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, குறித்த மூன்று தேர்தல் பிரசார விளம்பரங்களையும் இந்தியத் தேர்தல்கள் ஆணையகம் தடை செய்துள்ளதாக அந்நாட்டு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

இரு குழுக்களுக்கிடையே மோதல்

# இரண்டு பெண்கள் உட்பட 9 பேர் மீது அசிட் வீச்சு!



(மாத்தறை)

மாத்தறை - கம்புறுபிடிய - ஓமாரஹென பிரதேசத்தில் இரு குழுக்களுக்கு இடையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற மோதலின் போது மேற்கொள்ளப்பட்ட அசிட் வீச்சுத் தாக்குதலில் இரண்டு பெண்கள் உட்பட 9 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீடு ஒன்றில் நடந்த நிகழ்வு ஒன்றின் போது ஏற்பட்ட கருத்து முரண்பாட்டினைத் தொடர்ந்து மோதல் நிலைமையில் அசிட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வீட்டிற்குத் தீ வைக்கப்பட்டதனை தொடர்ந்து அங்கிருந்த வாகனம் ஒன்றின் மீதும் தீவைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாண்ட்யா அதிரடி; மும்பை வெற்றி


அரைச்சதம் அடித்த பெங்களூரின் டி வில்லியர்ஸ்

ஐ.பி.எல்., தொடர் லீக் போட்டியில் ஹர்திக் பாண்ட்யாவின் விளாசல் கைகொடுக்க மும்பை அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பெங்களூர் அணி 7ஆவது தோல்வியை பெற்றது.

இந்தியாவில், 12ஆவது ஐ.பி.எல்., கிரிக்கெட் தொடர் நடக்கிறது. மும்பையில் உள்ள வான்கடே மைதானத்தில் நடந்த லீக் போட்டியில் மும்பை, பெங்களூர் அணிகள் மோதின. மும்பை அணியின் அல்ஜாரி ஜோசப், தோள்பட்டை காயத்தால் ஐ.பி.எல்., தொடரில் இருந்து விலகினார். இவருக்கு பதிலாக வேகப்பந்துவீச்சாளர் ல்சித் மலிங்க சேர்க்கப்பட்டார். பெங்களூர் அணியில் மாற்றம் செய்யப்படவில்லை. நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணித் தலைவர் ரோகித் சர்மா, களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**ஹோலி ஏமாற்றம்**

பெங்களூர் அணிக்கு அணித் தலைவர் விராத் ஹோலி (8) ஏமாற்றினார். பெஹ்ரன்டர்ப் வீசிய 5ஆவது ஓவரில் ஒரு சிக்சர், 3 பவுண்டரி அடித்த பார்த்திவ் (28), ஹர்திக் பாண்ட்யாவிடம் சரணடைந்தார். ஹர்திக் பாண்ட்யா, மலிங்க பந்தில் தலா ஒரு சிக்சர் விளாசிய டி வில்லியர்ஸ், 41 பந்தில் அரைசதம் கடந்தார்.

**டி வில்லியர்ஸ் அபாரம்**

பெஹ்ரன்டர்ப் வீசிய 16வது ஓவரில் 2 சிக்சர், ஒரு பவுண்டரி விளாசிய மொயீன் அலி, 31 பந்துகளில் அரை சதமடித்தார். மூன்றாவது விக்கெட்டுக்காக 95 ஓட்டங்களைச் சேர்த்த போது மலிங்க 'வேகத்தில்' மொயீன் (50) ஆட்டமிழந்தார். மார்கஸ் ஸ்ரொய்னிஸ் (0) ஏமாற்றினார். பும்ரா வீசிய 19வது ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரி விரட்டிய டி வில்லியர்ஸ் (75) 'ரன் அவுட்' ஆனார். மலிங்க வீசிய கடைசி ஓவரில் அக்ஸ்தீப் நாத் (2), பவான் நேகி (0) ஆட்டமிழந்தனர்.

20 ஓவர்களில் பெங்களூர் அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களை எடுத்தது. மொஹமட் சிராஜ் (0), உமேஷ் யாதவ் (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்துவீச்சில் மும்பை அணி சார்பில் மலிங்க 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

ஐ.பி.எல்., தொடர் லீக் போட்டியில் ஹர்திக் பாண்ட்யாவின் விளாசல் கைகொடுக்க மும்பை அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பெங்களூர் அணி 7ஆவது தோல்வியை பெற்றது.

**நல்ல ஆரம்பம்**

மும்பை அணிக்கு அணித் தலைவர் ரோகித் சர்மா, குயின்ரன் டி கொக் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. உமேஷ் வீசிய 3வது ஓவரில் 2 பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார் குயின்ரன். மறுமுனையில் அசத்திய ரோகித் நவ்தீப்சைனி, மொஹமட் சிராஜ் பந்தில் தலா ஒரு சிக்சர் பறக்க விட்டார். மொயீன் அலி வீசிய 8ஆவது ஓவரில் ரோகித் (28), குயின்ரன் (40) ஆட்ட மிழந்தனர்.

**ஹர்திக் அபாரம்**

பவான் நேகி வீசிய 9ஆவது ஓவரில் தொடர்ச்சியாக 2 சிக்சர் அடித்த இஷான் கிஷான் (21), யுவேந்திர சகால் 'சுழலில்' சிக்கினார். சூர்யகுமார் யாதவ் (29) ஓரளவு கைகொடுத்தார். குர்னால் பாண்ட்யா (11) நிலைக்கவில்லை. அபாரமாக ஆடிய ஹர்திக் பாண்ட்யா, நேகி வீசிய 19வது ஓவரில் 2 சிக்சர், 2 பவுண்டரி விளாசி வெற்றியை உறுதி செய்தார்.

மும்பை அணி 19 ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஹர்திக் பாண்ட்யா (37 ஓட், 16 பந்து) ஆட்டமிழக்காமல் இருந்தார். பெங்களூர் சார்பில் சகால், மொயீன் அலி தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

## கார்த்திக் வாய்ப்பு; ரிஷப் மறுப்பு

# இந்திய அணி அறிவிப்பு


தினேஷ் கார்த்திக்

உலக கிண்ண தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டது. தமிழகத்தின் தினேஷ் கார்த்திக், விஜய் சங்கருக்கு வாய்ப்பு கிடைத்தது. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ரிஷாப் பன்டுக்கு இடம் கிடைக்கவில்லை.

இங்கிலாந்தில் ஐ.சி.சி., உலக கிண்ண கிரிக்கெட் தொடர் எதிர்வரும் மே 30ஆம் திகதி ஆரம்பமாகிறது. 'நடப்பு சம்பியன்' அவுஸ்திரேலியா, இந்தியா, இங்கிலாந்து உள்ளிட்ட 10 அணிகள் பங்கேற்கின்றன. ஒவ்வொரு அணிகளும் மற்றைய அணிகளுடன் 'ரவுண்ட் ரொபின்' முறையில் தலா ஒரு முறை மோதும். முடிவில் புள்ளிப்பட்டியலில் 'ரொப்-4' இடம் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

இதற்கான இந்திய அணி தேர்வு நேற்று மும்பையில் நடந்தது. பிரசாத் தலைமையிலான தேர்வுக்குழுவினர் வீரர்களை தேர்வு செய்த னர். அணி விபரம் வெளியானது.

மூன்றாவது முறையாக உலக கோப்பை தொடரில் களமிறங்கும் ஹோலி (2011, 2015, 2019) இம்முறை தலைவராக செயற்படுகிறார். ஷிகர் தவான், ரோகித் சர்மாவுடன் மூன்றாவது ஆரம்ப வீரராக லோகேஷ் ராகுல் சேர்க்கப்பட்டார். 'நடுத்தர வரிசையில்' ஹோலிக்கு அடுத்து நான்காவது இடம் யாருக்கு கிடைக்கும் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது.

அம்பதி ராயுடு சமீபத்திய போட்டிகளில் ஏமாற்றிய நிலையில் 'சகலதுறை வீரர்' விஜய் சங்கர் தேர்வு செய்யப்பட்டார். இவருடன் கேதர் ஜாதவ், லோகேஷ் ராகுலும் 4வது இடத்தை கவனித்துக் கொள்வர்.

**கார்த்திக் வாய்ப்பு**

இரண்டாவது விக்கெட் காப்பாளர் இடத்தில் ரிஷாப் பன்ட்டை பின்தள்ளி, தினேஷ் கார்த்திக் தேர்வு செய்யப்பட்டார். 91 போட்டிகளில் பங்கேற்ற அனுபவத்தின் அடிப்படையில் இவருக்கு வாய்ப்பு கிடைத்தது. அடுத்து 'சீனியர்' தோனி, நான்காவது முறையாக உலக கிண்ண தொடரில் பங்கேற்க உள்ளார். 'சகலதுறை வீரர்' ஹர்திக் பாண்ட்யாவுடன், ஜடேஜாவும் இடம் பிடித்தனர்.

**மூன்று 'வேகம்'**

பந்துவீச்சில் மொஹமட் ஷமி, பும்ரா, புவனேஷ்வர் குமார் என மூன்று வேகப் பந்து வீச்சாளர்கள் இடம் பெற்றனர். பாண்ட்யா, விஜய் சங்கர் இணைந்து நான்காவது வேகப்பணியை கவனிக்க உள்ளனர். சுழற்பந்து வீச்சில் குல்தீப், சகால் என இருவருக்கு இடம் கிடைத்தது.

நவ்தீப் சைனி, கலீல் அகமட் இருவரும் தேர்வாகவில்லை என்றாலும் இங்கிலாந்து செல்வர். யாருக்காவது காயம் எனில் மாற்று வீரராக சேர்க்கப்பட உள்ளனர்.

**அணி விபரம்**

ஹோலி (அணித் தலைவர்), ரோகித் சர்மா, ஷிகர் தவான், லோகேஷ் ராகுல், தோனி, தினேஷ் கார்த்திக், ஜாதவ், ஹர்திக் பாண்ட்யா, ஜடேஜா, விஜய் சங்கர், குல்தீப், சகால், பும்ரா, புவனேஷ்வர், ஷமி.







# லொய்டுக்கு ராசியான லோர்ட்ஸ்


வெற்றிக் கிண்ணத்துடன் லொயிட்

முதலாவது உலக கிண்ண கிரிக்கெட் தொடர் 1975 இல் இங்கிலாந்தில் நடந்தது. போட்டிகள் 60 ஓவர்கள் கொண்டதாக நடந்தன. பாரம்பரிய வெள்ளை நிற உடையில் வீரர்கள் பங்கேற்றனர்.

சிவப்பு நிற பந்துகள் பயன்படுத்தப்பட்டன. இந்தியா, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், மே.தீவுகள், நியூசிலாந்து, இலங்கை, கிழக்கு ஆபிரிக்கா என 8 அணிகள் பங்கேற்றன.

இவை இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவிலும் முதலிரண்டு இடங்களைப் பிடித்த அணிகள் அரையிறுதியில் மோதின.

வெங்கட்ராமன் தலைமையிலான இந்திய அணி 'ஏ' பிரிவில் மூன்றாவது இடம் பெற்று அரையிறுதி வாய்ப்பை இழந்தது.

லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்த இறுதிப் போட்டியில் மே.தீவுகள் - அவுஸ்திரேலிய அணிகள் மோதின. இதில் அணித் தலைவர் கிளைவ் லொயிட் சதம் கடந்து கைகொடுக்க மே.தீவுகள் அணி 60 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 291 ஓட்டங்களை எடுத்தது.

பின் களமிறங்கிய அவுஸ்திரேலியா 58.4 ஓவர்களில் 274 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்ந்தது. மே.தீவுகள் அணி முதலாவது உலகக் கிண்ணத்தை தட்டிச் சென்றது.

**ஆமை வேக ஆட்டம்**

ரி20 போட்டிகளின் வரவால் தற்போது டெஸ்டில் கூட துடுப்பாட்ட வீரர்கள் அதிவிரைவாக ஓட்டங்களைச் சேர்க்கின்றனர். ஆனால் முதலாவது உலகக் கிண்ண தொடரில் இந்தியாவின் கவாஸ்கர் ஆமை வேகத்தில் ஓட்டங்கள் எடுத்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான லீக் போட்டியில் இவர் 174 பந்துகளில் வெறும் 36 ஓட்., (ஒரு பவுண்டரி) மட்டுமே எடுத்தார். இதனால் இந்திய அணி பரிதாபமாக வீழ்ந்தது.

## இந்தியன் பிறிமியர் லீக் - 2019
## புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை சுப்பர் கிங்ஸ் | 8 | 7 | 1 | 14 |
| 2 | டில்லி கப்பிட்டல்ஸ் | 8 | 5 | 3 | 10 |
| 3 | மும்பை இந்தியன்ஸ் | 8 | 5 | 3 | 10 |
| 4 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 8 | 4 | 4 | 8 |
| 5 | கிங்ஸ் XI பஞ்சாப் | 8 | 4 | 4 | 8 |
| 6 | சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | 7 | 3 | 4 | 6 |
| 7 | ராஜஸ்தான் றோயல்ஸ் | 7 | 2 | 5 | 4 |
| 8 | பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 8 | 1 | 7 | 2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

## அமரர். செல்வி வசந்தி பத்மநாதன்

மண்ணில்
1961 - 01 - 15

விண்ணில்
2019 - 03 - 07



கடந்த 07.03.2019 வியாழக்கிழமை சிவபதமெய்திய எமது மகள் அமரர் செல்வி வசந்தி பத்மநாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 16.04.2019 இன்று செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். மற்றும் சபிண்டீகரண கிரியைகள் எதிர்வரும் 20.04.2019 அன்று சனிக்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து பலாலி வீதி உரும்பிராய் கற்பக விநாயகர் கலாசார மண்டபத்தில் மதியம் 12 மணியளவில் நடைபெறும். மதிய போசன நிகழ்வில் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். 077 404 8838

(8453)

குடும்பத்தினர்
வே.பத்மநாதன் (கிச்சி)


# பயங்கரவாத ஒழிப்புப் பொலிஸாரால் பிரித்தானியாவில் கைது செய்யப்பட்ட இலங்கையர்களிடம் தீவிர விசாரணை

(லண்டன்)

பிரித்தானிய விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்ட நான்கு இலங்கையர்களிடம் தொடர்ந்தும் தீவிர விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

தடைசெய்யப்பட்ட அமைப்பு ஒன்றின் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே அவர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த நான்கு இலங்கையர்களும் பெட்ப்வேச்சர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

லண்டன், லூட்டன் விமான நிலையத்தில்வைத்தே குறித்த நான்கு இலங்கையர்களும் பிரித்தானிய பயங்கரவாத ஒழிப்புப் பொலிஸாரால் அண்மையில் கைதுசெய்யப்பட்டனர்.

2000ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு இணங்க குறித்த அமைப்பு தடைசெய்யப்பட்டுள்ளதால் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, துருக்கியின் மேற்கு பகுதியிலுள்ள ஏடன் பகுதியின் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கு செல்ல முற்பட்ட 558 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான், மொரோக்கோ, ஈரான், ஈராக் பாலஸ்தீனம், எகிப்து மற்றும் டினிசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் உள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் 51 சிரிய நாட்டவர்களும், 37 ஆப்கானிஸ்தானியர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிரியாவில் உள்நாட்டுப் போர் ஆரம்பித்துள்ளமையே ஐரோப்பிய நாடுகளுக்கு பிரவேசிக்கும் சட்டவிரோத குடியேற்றவாசிகளின் அதிகரிப்புக்கு காரணம் என கூறப்படுகின்றது.

கைதுசெய்யப்பட்ட 558 பேரிடமும் விசாரணைகள் இடம்பெறுவதாக அந்த நாட்டுப் பாதுகாப்புத்துறை அறிவித்துள்ளது. விசாரணைகளின் பின்னர், அவர்கள் தொடர்பான மேலதிக விடயங்கள் முன்னெடுக்கப்படும் என துருக்கிப் பாதுகாப்புதுறை அறிவித்துள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டில் இவ்வாறு துருக்கி ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கு பயணித்த இரண்டு இலட்சத்துக்கும் அதிகமானோர் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பெரும்பாலான பகுதிகளில் இன்று மழை எதிர்பார்ப்பு

(கொழும்பு)

இன்று நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மாலை நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் உயர்வாகக் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அந்த வகையில் நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அந்தத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, நேற்றுக் காலை 8.30 மணி வரையான கடந்த 24 மணித்தியாலங்களில் கொழும்பு மாவட்டத்தின் கோட்டை பகுதியில் நாட்டின் அதிகூடிய மழைவீழ்ச்சியாக 23.5 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வவுனியாவில் ஆகக் கூடுதலாக 37.9 பாகை வெப்பநிலை பதிவாகியுள்ளதோடு, ஆகக் குறைவாக நுவரெலியாவில் 8.8 பாகை வெப்பநிலை பதிவாகியுள்ளது. மத்திய, சப்ரகமுவ, ஊவா, மாகாணங்களிலும், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் பல இடங்களில் இன்று பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சப்ரகமுவ, மத்திய, தென், ஊவா, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அநுராதபுரம் மாவட்டத்திலும் சில இடங்களில் 100 மி.மீ.அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பிரதேசங்களில் பலத்த மின்னல் தாக்கத்திற்கும் சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, எதிர்வரும் 24 மணித்தியாலத்தில் காங்கேசன்துறையிலிருந்து புத்தளம், காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக மட்டக்களப்பு வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு ஊடாக மாத்தறை வரையான கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடுவதுடன் நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றானது தென்கிழக்கு அல்லது மாறுபட்ட திசைகளிலிருந்து வீசக்கூடும்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 15-25 கிலோ மீற்றர் வரை காணப்படும். இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற்பிரதேசங்கள் கொந்தளிப்பாகவும் காணப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-7)


# 31 ம் ஆண்டு நினைவலைகள்

## அமரர். கணபதி வைத்திலிங்கம்

அன்னை மடியில்
1942 - 06 - 22

ஆண்டவன் அடியில்
1988 - 04 - 16



ஆண்டுகள் முப்பத்தொன்று ஆனாலும்
எங்கள் துயரம் ஆறவில்லை
நீங்கள் எம்மீது வைத்த அன்பு, பரிவு,
பாசம் என்றும் மறக்க முடியாது
எங்கள் மனங்களில் நீங்கள் என்றும்
வாழ்ந்து கொண்டேயிருப்பீர்கள்

7ஆம் வட்டாரம்
நயினாதீவு.

உங்கள் நினைவுடன்
அன்பான மனைவி
வை.பார்வதி

| | | | | |
|---|---|---|---|---|
| இன்பநாயகம் | செல்வநாயகம் | அருள்ராஜா | யோகேஸ்வரன் | கணேசவேல் |
| புவனேஸ்வரி | ஞானேஸ்வரி | இன்பராணி | ஆனந்தி | கம்ஷா |
| தானுகா | லஜிந்தன் | ஜிந்துஜன் | ஜஷாக் கிரிஷ்ரி | |
| டர்ஷிகா | டிலோசினி | | ஜெனிஸ்ரீன் | |
| யுகேஸ் | விவேதினி | | பிறஸ்லீன் | |

(8418)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பரெலியவில் மோசடி திட்டத்தில் உள்வாங்கிய வீதியை நீக்கியது ஏன்?

## பரு.பிரதேச சபை உறுப்பினர் கேள்வி

(யாழ்ப்பாணம்)

கம்பரெலிய திட்டத்தின் கீழ் வீதிப் புனரமைப்பில் சபையால் தெரிவு செய்யப்பட்ட வீதியின் பெயரை நீக்கி பதிவில் இல்லா வீதியின் பெயரைப் பருத்தித் துறை பிரதேச செயலகம் மாற்றி அமைத்து விட்டதாகப் பிரதேச சபை உறுப்பினர் கி.ஜெயபாலன் குற்றம் சாட்டியுள்ளார்.

பருத்தித்துறைப் பிரதேச சபைப் பதிவிலுள்ள ஜே/ 413, 6 ஆம் வட்டாரத்தில் சாரகிரி வீதிப் புனரமைப்புக்காக பிரதேச சபையின் அங்கீகாரத்துடன் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதும் குறித்த வீதியின் பெயரை நீக்கிவிட்டு பிரதேச சபையில் பதிவில்லாத சாஸ்திரியார் வீதி எவ்வாறு அபிவிருத்தியில் இணைக்கப்பட்டது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அரசாங்கத்தால் கிராமங்களை முன்னேற்றும் செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்படும் கம்பரெலிய நிதி ஒதுக்கீட்டை சிலர் தமது வங்குரோத்து அரசியலுக்காகப் பயன்படுத்துகின்றனர்.

பிரதேச சபையால் சிபார்சு செய்யப்பட்ட வீதிகளின் பெயர் விபரங்களை சபைக்கோ உறுப்பினர்களுக்கோ தெரியாமல் மாற்றுவது அப்பகுதி மக்களுக்குச் செய்யும் துரோகமாகும்.

எனவே குறித்த விடயம் தொடர்பில் நீதி வேண்டி ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5-10)

# ஒரு மரம் தறிக்க வேண்டுமானால் மூன்று மரங்கள் நாட்ட வேண்டும்

## தவிசாளர் தர்சன் உத்தரவு



(யாழ்ப்பாணம்)

வலி.தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் மரம் ஒன்றைத் தறித்தால் மூன்று மரங்களை நாட்ட வேண்டுமென தவிசாளர் தர்சன் கடுமையான உத்தரவினைப் பிறப்பித்துள்ளார்.

இது தொடர்பாக வலி.தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் க.தர்சன் தெரிவிக்கையில், தமது பிரதேச சபை எல்லைக்குள் கட்டட அனுமதிக்கு வருகின்ற பலர் கட்டடங்களை கட்டுவதற்காக தமது வளவுகளில் உள்ள மரங்களை தறித்து அழிக்கின்றனர்.

இதனை கட்டுப்படுத்தும் நோக்கிலும் இயற்கை சமநிலையை பாதுகாக்கவும் கட்டட அனுமதிக்கான விண்ணப்பதாரர்கள் கட்டட அமைவுக்காக தமது வளவினுள் ஒரு மரத்தினை தறித்தால் அந்த வளவினுள் மூன்று மரக்கன்றுகளை நாட்டினால் மட்டுமே கட்டட அனுமதி வழங்கப்படும் என கடந்த சபைக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இத்தீர்மானம் கட்டட அனுமதியின் போது அமுல்படுத்தப்படும். மேலும் மரங்கள் வளர்ப்பதற்கான இடவசதி இல்லாமல் கட்டடம் கட்ட முனைவோருக்கு அதற்கான அனுமதி வழங்கப் படமாட்டாது.

அதுமட்டுமன்றி கட்டட அனுமதிக்காக மரக்கன்றுகளை நட்டுவிட்டு பின் அவற்றை அகற்றினால் கட்டடம் கட்டிய பின்னால் வழங்கப்படுகின்ற அமைவுச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது என்பதோடு கட்டட அனுமதிக்கு முரணாக நடந்து கொண்டதற்காக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.

பிரதேச சபையில் எடுக்கப்படுகின்ற தீர்மானம் சட்டவலுவுள்ளது என்பதால் கட்டடம் எமது பிரதேச சபை எல்லைக்குள்ளான கட்டட அனுமதிக்கான நடைமுறையின் போது இத்தீர்மானத்தினை நடைமுறைப்படுத்துமாறு கட்டட அனுமதியில் தொடர்புபட்ட திணைக்களங்களான நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் சுற்றுச் சூழல் அதிகார சபை ஆகியவற்றிற்கும் இத்தீர்மான வரைபு அனுப்பப்படும் எனவும் தவிசாளர் க.தர்சன் தெரிவித்துள்ளார். (5-89)

# தமிழ்த் தாய் மன்றத்தின் இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

அமரர் முக.சின்னையா சௌபாக்கியவதி (பாக்கியம்) நினைவாக தமிழ்த் தாய் மன்றம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை போயா தினத்தில் இல.31, புதிய செங்குந்த வீதி, சட்டநாதர் வீதியிலுள்ள மாற்றம் பணிமனையில் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் விருந்தினராக வடமாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். சற்குணராஜா கலந்து கொள்வார்.

இதில் நீரிழிவு பரிசோதனை (Blood Sugar,) இரத்த அழுத்த பரிசோதனை (Blood Pressure) என்பன இடம்பெறும்.

யாழ். மாநகர சபை ஆயுர்வேத வைத்தியர்கள் இலவசமாக நோயாளிகளைப் பரிசோதனை செய்து மருந்துகள் வழங்கவுள்ளனர். டாக்டர் எம்.லாசகன் (இயற்கை வைத்தியர்) சகல நோய்களுக்குமான இயற்கை வைத்திய ஆலோசனைகளையும் வழங்கவுள்ளார்.

போதைப்பொருள் விழிப்புணர்வு கருத்தரங்கை DASCO இன் செயற்றிட்டப் பணிப்பாளர் ஜெ. கோகுலவாசன் வழங்குவார். (5)

தமிழ் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, நுணாவில் மேற்கு அம்பாள் சனசமூக நிலையத்தில் இயங்கும் 'அம்பாள் மழலையர் பூங்கா'வில் கல்வி பயிலும் சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்களை நுணாவில் மேற்கைச் சேர்ந்த க.மயில்வாகனம், ம.பிரகாஷ் மற்றும் உமாச் சந்திரா பிரகாஷ் (கொழும்பு மாநகரசபை உறுப்பினர் ஆகியோர் வழங்கினர். (படங்கள்: சாவகச்சேரி செய்தியாளர்)



# இராசி பலன்

**மீனம்:** அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், ஆரோக்கியம் சீராகும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

**மேடம்:** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர்.

**இடபம்:** எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும் நாள்.

**மிதுனம்:** உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**கும்பம்:** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், சுபநிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.

| | | | |
|---|---|---|---|
| சுக்<br>புத | சூரி | செவ் | ராகு |
| | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அவிட்டம், சதயம் | | |
| | | | சந் |
| சனி,<br>குரு,<br>கேது | | | |

**16.04.2019**

சித்திரை 03, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

துவாதசி முன்னிரவு 11.22 மணிவரை

பூரம் முன்னிரவு 11.53 மணிவரை

சுபநேரம் 10.34-12.04 மணிவரை

இராகுகாலம் 3.04-4.34 மணிவரை

சித்தாமிர்தம்

வளவன்

**கடகம்:** தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் திருப்தி தரும்.

**மகரம்:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கௌரவக் குறைவான நாள்.

**சிம்மம்:** குடும்பத்தில் சுகங்களும் பொறுப்புக்களும் வந்து சேரலாம், திடீர் பயணங்கள் ஏற்படலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசனசுகமுண்டு.

**தனுசு:** வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், சாதுர்யமாகப் பேசி சாதனை படைக்கும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள்.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், ஆரோக்கியமான நாள்.

**துலாம்:** செல்வநிலை உயரும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொலைதூரப் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**கன்னி:** சுபகாரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் திருப்பதி

அருள்மிகு பத்மாவதி தாயார் கோதை நாச்சியார் உடனுறை

ஸ்ரீ வேங்கடேஸ்வரர் ஆலய

**வசந்தோற்சவ விழா விஞ்ஞாபனம்- 2019**

**17.04.2019 தொடக்கம் 20.04.2019 வரை**

நிகழும் மங்களகரமான விகாரி வருடம் சித்திரைத் திங்கள் 04 ஆம் நாள் (17.04.2019) புதன்கிழமை முதல் ஆரம்பமாகி சித்திரைத் திங்கள் 06 ஆம் (19.04.2019) வெள்ளிக்கிழமை சித்திரை பௌர்ணமியும் கூடிய நாளில் நிறைவுறத் தெய்வத் திருவருள் கூடியுள்ளது.

**கிரியா விபரம்**

**விகாரி வருடம் சித்திரை 03 ஆம் நாள் (16.04.2019) செவ்வாய்க்கிழமை**

மாலை 5.00 மணி முதல் விஷ்வக்ஷேன ஆராதனை புண்யாகவாசனம் , பெரிய பெருமாள், பெரிய பிராட்டியார் அனுமதி பெறல், மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், திருமஞ்சக் கிணற்றில் இருந்து சப்த நதிகளையும் ஆவாகித்து ஆராதனை, புனித கலசத்திற்கான புனித நீர் எடுத்தல்.

**விகாரி வருடம் சித்திரை 04 ஆம் நாள் (17.04.2019) புதன்கிழமை**

காலை 6.30 மணிக்கு ஸ்ரீதேவி, பூதேவி சகிதம் உற்சவ ஸ்ரீநிவாசர் கருவறையில் இருந்து நந்தவனத்திற்குப் புறப்பாடு, காலை 8.00 மணிமுதல் யாகபூசை, ஸ்ரீநிவாசர் மகாதிருமஞ்சனம் விஷேட திரவிய ஹோமம், ரக்ஷாபந்தனம், கும்பஸ்தாபனம்.

மாலை 4.30 மணிமுதல் யாகபூசை , ஸ்ரீநிவாசர் திருமஞ்சனம், தீபாராதனை, விசேட சாற்றுமுறை, உபசாரம், திவ்ய பிரபந்தம் ஓதல், ஸ்ரீநிவாசர் கருவறை திருப்புதல்.

**விகாரி வருடம் சித்திரை 05ஆம் நாள் (18.04.2019) வியாழக்கிழமை**

காலை 6.30 மணிக்கு ஸ்ரீநிவாசர் புறப்பாடு

காலை 8.00 மணி முதல் யாகபூசை, ஸ்ரீநிவாசர் மகா திருமஞ்சனம், விஷேட திரவிய ஹோமம்

மாலை 4.30 மணிமுதல் யாகபூசை, விசேட திரவிய ஹோமம் , ஸ்ரீ நிவாசர் மகா திருமஞ்சனம், விசேட உபசாரம், சுவாமி கருவறை திரும்புதல்.

**விகாரி வருடம் சித்திரை 06ஆம் நாள் (19.04.2019) வெள்ளிக்கிழமை சித்திரை பூரணை விரதம்**

காலை 6.30 மணிக்கு ஸ்ரீநிவாசர் கருவறையில் இருந்து நந்தவனம் புறப்பாடு, யாகபூசை, விசேட திரவிய ஹோமம், ஸ்ரீநிவாசருக்கு 81 கலச மகா திருமஞ்சன தீர்த்தவாரி, துளசி அலங்காரம், சாற்றுமுறை, தீபாராதனை, விசேட உபசாரம்.

மாலை 4.00 மணிமுதல் யாகபூசை, மகா பூர்ணாகுதி, பெருமாள் திருவாராதனை, புஷ்பயாகம், விசேட சாற்றுமுறை, ஸ்ரீநிவாசர் கருட சேவையுடன் பிரதான கும்ப வீதியுலா, கும்பபுரோட்சணம், சாற்றுமுறை, மகாதர்சனம்

**விகாரி வருடம் சித்திரை 07 ஆம் நாள் (20.04.2019) சனிக்கிழமை**

காலை 6.30 மணிக்கு அபிஷேகம், மாலை 5.00 மணி முதல் லக்சுமி நாராயணர் திருக் கல்யாணம்.

**தினமும் இரவு 6.00 மணி முதல் 7.00 மணிவரை இசையாராதனை, நாட்டிய சமர்ப்பணம் என்பன நடைபெறும்.**

077 725 2476
021 224 2300

(8476)

ஆலய தர்மகர்த்தா
ச.கணேசலிங்கம்.


# 11 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் உவர்நில, மேட்டுநிலப் பயிர்ச்செய்கை

## 275 பயனாளிகளைத் தெரிவு செய்ய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உவர்நில நெற்செய்கை மற்றும் மேட்டுநிலப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்க வடக்கு மாகாண விவசாய அமைச்சால் சுமார் 11 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உவர் நிலங்களில் நெற்செய்கையை ஊக்குவிப்பதற்கு நல்லூர், சண்டிலிப்பாய், மருதங்கேணி, புங்குடுதீவு, கரவெட்டி ஆகிய பிரதேசங்களில் இத்திட்டம் செயற்படுத்தப்படும். இத் திட்டத்திற்கென மாகாண விவசாய அமைச்சால் 5இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதுடன் குறித்த பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து 75 பயனாளிகள் தெரிவு செய்யப்படுவர். 50வீத மானிய அடிப்படையில் விதை நெல் மற்றும் உமி கருக்கும் உபகரணம் வழங்கப்படும். இதன் மூலம் யாழ்.மாவட்ட நெற்செய்கையாளர்களையும் நெல் உற்பத்தியையும் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. மேலும் கைவிடப்பட்ட மேட்டு நிலங்களைப் பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு உட்படுத்தும் நோக்கில் 6 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 200 பயனாளிகள் தெரிவு செய்யப்படுவர்.

இவர்கள் கரவெட்டி மருதங்கேணிப் பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்படுவதுடன் மேட்டு நிலப் பயிர்ச் செய்கைக்கான மிளகாய் விதை, நிலக் கடலை மற்றும் மழை நீர் சேமிப்புத் தொட்டி என்பன 50வீத மானிய அடிப்படையில் வழங்கப்படும். இத் திட்டத்தில் இணைய விரும்பும் பயனாளிகள் யாழ் மாவட்ட விவசாய திணைக்கள அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.(இ-10)

## வடமாகாண விவசாய அமைச்சால் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் யாழ். மாவட்ட விவசாய வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்ட விவசாயத்துறையை ஊக்குவிப்பதற்கு பயனாளிகளுக்கு ஆலோசனை வழிகாட்டல்கள் வழங்குவதற்காக தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்களுக்கு இவ்வாறு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளின் உற்பத்திப் பிரதேசங்களுக்கு நேரில் சென்று அவர்களின் பயிர்ச் செய்கை தொடர்பான குறைநிறைகளை அவதானித்து வழிகாட்டல்களை வழங்க முடியும் என எதிர்பார்க்கப் படுகின்றது. (இ-10)


**பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**வாடியடி, பூநகரி.**

**பதவிவெற்றிடம்**

**01.பதவி :- எரிபொருள் நிரப்புநர் வெற்றிடம் -05**

*சம்பள குறி இல :-313/16*

*சம்பள அளவுத்திட்டம் :-15135-120X10-135X10 -17685(04/2018இன்படி)*

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ. கூட்டுறவுப்பணியாளர் 17 ஆவது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஒரு (01) வருடத்திற்கு குறையாத அனுபவம்.

ஆ. 08 ஆம் வகுப்பு கல்விச்சான்றிதழ்

பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஆளணி அங்கீகாரப்படி மேற்படி பதவிகளுக்கு வெளிவாரியாக சங்க எல்லைப் பரப்பிற்குள் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். வயது 18 தொடக்கம் 45 வரை . சங்கப்பணியாளர்களுக்கு வயது எல்லை கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. சங்கப்பணியாளர்கள் தங்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். கூட்டுறவுச்சங்கத்தின் சேவை அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தகுதியானவர்கள் தங்கள் விண்ணப்பப்படிவங்களை சுயமாக தயாரித்து 30.04.2019ஆம் திகதிக்கு முன்னர் தலைவர் , பூநகரி ப.நோ.கூட்டுறவுச் சங்கம், வாடியடி, பூநகரி என்னும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்
பூநகரி ப.நோ.கூ.சங்கம்,
வாடியடி, பூநகரி.
தொலைபேசி இல-021 206 0952

(சி-6096)



**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்:அனுசம் செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:M.ScIT, அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/9587 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை 2<br>கி.பா: 22 ¼செவ் 7 இல்<br>உயரம்: 164cm<br>தகைமை/தொழில்:B.Sc,ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, உள்நாடு<br>தொ.இ: G/3949 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம் 2<br>கி.பா: 69செவ் 4 இல்<br>உயரம்: 163cm<br>தகைமை/தொழில்:A/L,Germany<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு<br>*ஆண் பதிவு திருமணம் செய்து விவாகரத்தானவர்<br>தொ.இ: B/9590 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம் 4<br>கி.பா: 78செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை தொழில்:சித்தமருத்துவம், சித்த மருத்துவவைத்தியர்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்,உள்நாடு<br>தொ.இ: G/3953 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம் 3<br>கி.பா: 22 ¾<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:O/L,சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு: A/L.உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: B/9591 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>கி.பா: 95செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்M.Sc,Engineer,Germany<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, Engineer. உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: G/3975 |
| பிறப்பு: 1980கிறிஸ்தவம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L, HND, UK<br>எதிர்பார்ப்பு: படித்த வெளிநாடு Visa உள்ளபெண்<br>தொ.இ: B/9592 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 13 ½சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:B.Sc, M.Sc, Project Officer<br>எதிர்பார்ப்பு: Engineer, Accountant, உள்நாடு<br>தொ.இ: G/3980 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது தனித்துவம், பாரம்பரியங்களை இளைஞர்களே பாதுகாக்க வேண்டும்

## சிறீதரன் எம்.பி.கோரிக்கை

(கண்டாவளை)

எமது பாரம்பரியங்களை இளைஞர்களே பாதுகாக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பளை மாசார் வளர்மதி விளையாட்டுக்கழகம் நேற்று நடத்திய கலைஞர்களை மதிப்பளித்தல் மற்றும் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.





மேலும் இங்கு அவர் கருத்துக்களை வழங்கும்போது எமது இனத்தின் இருப்பு என்பது நிலம், கலை கலாசாரம், பண்பாடு விழுமியங்கள் போன்ற தனித்துவங்களிலே தங்கியுள்ளது. எனவே எமது இனத்தை அழிக்க வேண்டுமானால் எமது தனித்துவமான அடையாளங்களை அழிக்கவேண்டும்.

இது தொடர் ச்சியாக சிங்கள அரசுகளால் இடம்பெற்று வருகின்றது.

ஆகவே இவற்றைப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு இளைஞர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது என்றார்.

இந்நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், உபதவிசாளர் கஜன், கிளிநொச்சி மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர்கள், பளை பொலிஸ் பொறுப்பதிகாரி, பிரதேச கலைஞர்கள், கிராம அலுவலர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (7-315)

# முன்னாள் எம்.பி.சந்திரகுமாரின் தந்தை காலமானார்



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவருமான சந்திரகுமாரின் தந்தையும் ஓய்வுபெற்ற வடக்கு-கிழக்கு மாகாணத்தின் மேலதிக மாகாண காணி ஆணையாளரும் வவுனியா செட்டிகுளம் பிரதேச உதவி அரச அதிபருமான கணபதி முருகேசு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவரின் இறுதிக் கிரியைகள் வவுனியா பூந்தோட்டம் மதீனா வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் இடம்பெற்று பொதுமக்கள் அஞ்சலிக்காக இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு கிளிநொச்சி இரத்தினபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் வைக்கப்பட்டு தகனக் கிரியைக்காக திருநகர் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். (7-312)

# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மன்னாரிலும் விசேட வழிபாடுகள்





(மன்னார்)

மன்னார் மாவட்ட மக்கள் பிறந்திருக்கும் விகாரி புத்தாண்டை சமய வழிபாடுகளுக்கு முதலிடத்தைக் கொடுத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடியுள்ளனர்.

புத்தாண்டை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தில் உள்ள பல்வேறு இந்து ஆலயங்களில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றுள்ளன. குறிப்பாக மன்னார் உப்புக்குளம், திருக்கேதீச்சரம் ஆகிய ஆலயங்களில்விசேட பூஜை இடம் பெற்றுள்ளது. (7-285)




# சத்தியமூர்த்தி அறக்கட்டளை ஊடாக முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவருக்கு உதவி

ஊடகவியலாளர் பு.சத்தியமூர்த்தியின் மகள் தனது 13 ஆவது பிறந்தநாளில் தாயகத்தில் வவுனியா பாலமோட்டையில் வசித்து வரும் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட யோ.சியந்தன் என்பவருக்கு சத்தியமூர்த்தி அறக்கட்டளை ஊடாக இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் (2,40,000/=) செலவில் கிணறு மற்றும் நீர்க்குழாய் பொருத்தி கடந்த வெள்ளிக்கிழமை கையளித்துள்ளார். (7-29)



# முல்லைத்தீவில் வரட்சியால் மக்கள் பாதிப்பு; குடிநீர் விநியோகத்திற்காக ஒரு மில்.நிதி

## அனர்த்த முகாமைத்துவ நிலையம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் வரட்சி காரணமாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான குடிநீர்விநியோகத்திற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊடாக ஒரு மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டின் பல பாகங்களிலும்நிலவும் தொடர் வரட்சியினால் முல்லைத்தீவு மாவட்டத்திலும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 18 கிராமங்கள் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் 1967 குடும்பங்களைச்சேர்ந்த 6296 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று ஏனைய பிரதேசங்களிலும் பாதிப்புக்கள் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கான குடிநீர் விநியோகத்திற்காக ஒரு மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் இதன்மூலம் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு குடிநீர் விநியோகத்தை மேற்கொள்ள உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-315)

# கும்பாபிஷேக சிறப்பு மலரான ஆதிவிநாயகம் நூல்வெளியீடு



(குருமன்காடு)

வவுனியா வைரவப் புளியங்குளம் அருள்மிகு ஆதி விநாயகர் திருக்கோவில் கும்பாபிஷேக சிறப்பு மலரான ஆதிவிநாயகம் நூல் நேற்றைய தினம் ஆதிவிநாயகர் ஆலய மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

வவுனியா பிரதேச இந்து கோவில்கள் ஒன்றியத்தின் செயலாளர் சிவ.திருக்கேதீஸ்பரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஆசியுரையினை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ இரகுநாத.கமலேஸ்வரக்குருக்களும் வாழ்த்துரையினை வவுனியா பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபனும் ஆலய பரிபாலன சபைத்தலைவர் க.சுமந்திரனும் வழங்கினர்.

செட்டிகுள பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எம்.சண்முகநாதன் நூலை வெளியிட்டு வைத்தார். அதனைத் தொடர்ந்து நூல் அறிமுகவுரையை தமிழருவி த.சிவகுமாரனும் ஏற்புரையை [illegible] வழங்கினர். (7-250)

# புத்தாண்டில் விபத்து மற்றும் வன்முறை; எட்டுப்பேர் வைத்தியசாலையில் அனுமதி

(கண்டாவளை)


கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் ஏற்பட்ட வன்முறைகள் மற்றும் விபத்துக்களால் எட்டுப்பேர் வரையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தர்மபுரம் பொலிஸ் நிலையத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் தர்மபுரம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் மாத்திரம் வன்முறைச்சம்பவங்களால் எட்டுப் பேர் வரையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதாவது, கல்லாறுப்பகுதிகளில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட விபத்துக்கள் மற்றும் வன்முறைச்சம்பவங்களால் இவ்வாறு எட்டுப்பேர் பாதிக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (7-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பீரமாக காட்சியளிக்கும் தாமரைக் கோபுரம்



(கொழும்பு)

கொழும்பில் சீனாவால் அமைக்கப்பட்ட தாமரைக் கோபுரத்தின் நிர்மாணப் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. சிங்கள- தமிழ் புத்தாண்டுக்கு முன்னதாக இந்தக் கோபுரம் திறக்கப்படும் என்று கூறப்பட்டது. எனினும், அடுத்த இரண்டு மாதங்களுக்குள் இது திறந்து வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# நாடளாவிய ரீதியில் 5 இலட்சம் மரக்கன்றுகளை நடத் திட்டம்

## அமைச்சர் தயா தகவல்



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் சுமார் 5 இலட்சம் மரக்கன்றுகளை நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக ஆரம்ப தொழில்துறை சமூக மேம்பாட்டுத்துறைஅமைச்சர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

சித்திரைப் புத்தாண்டு காலத்தின் சுபவேளையில் மரக்கன்றுகளை நடுவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் சுமார் 5 இலட்சம் மரக்கன்றுகளை நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல, சுகுறுபாய வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டில் ஏற்றுமதிப் பயிர்களுக்கான 70 இலட்சம் மரக்கன்றுகளும் 2016 ஆம் ஆண்டில் 170 இலட்சம் மரக்கன்றுகளும் கடந்த வருடம் 250 இலட்சம் மரக்கன்றுகளும் நாடளாவிய ரீதியில் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்த மரக்கன்றுகள் மூலம் பெறப்படும் பயிர்கள் மற்றும் பழங்கள் ஏற்றுமதிக்காக பயன்படுத்தப்பட்டன. இவற்றின் மூலம் கணிசமான அளவு ஏற்றுமதி வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாக ஆரம்ப தொழில்துறை சமூக மேம்பாட்டுத்துறை அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மக்கள் எதிர்ப்பைக் கட்டுப்படுத்தவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்!

## அரசின் சூழ்ச்சியை தோற்கடிக்க அனைத்துக் கட்சி கலந்துரையாடல்



(கொழும்பு)

அரசாங்கத்தால் கொண்டுவருவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை தோல்வியடையச் செய்வதற்காக அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுடனும் கலந்துரையாட எதிர்பார்ப்பதாக தேசிய தொழிற்சங்க மத்திய நிலைய ஒருங்கிணைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த கலந்துரையாடலுக்கான சந்தர்ப்பத்தை வழங்குமாறு கட்சித் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உலகத்திற்கு ஜனநாயகம் குறித்து பெருமை பாராட்டும் இலங்கை அரசாங்கம், தனக்கு எதிராக ஏற்பட்டுள்ள மக்கள் எதிர்ப்பைக் கட்டுப்படுத்தவே இவ்வாறான தொரு சட்டமூலத்தை கொண்டு வருகின்றது.

இந் நிலையில், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களிடம் இது குறித்து தெளிவுபடுத்த திட்டமிட்டுள்ளதாக தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த சமரசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டிற்கான கலாபூஷண அரச விருதுக்காக விருது பெறுபவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 35 ஆவது முறையாக இடம்பெறும் இத்தேசிய அரச விழாவுக்கு, 60 வயதுக்கு மேற்பட்ட சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய மூவினத்தையும் சார்ந்த கலைஞர்கள் விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு சமயத்தவர்களும் அந்தந்த சமய திணைக்களங்களில் தமது விண்ணப்பங்களை உரியவாறு பூர்த்தி செய்து வழங்க வேண்டும். அந்த வகையில் முஸ்லிம் கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்களை முஸ்லிம்சமய பண்பாட்டலுவல்கள்திணைக்களம் கோருவதாக அந்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.ஆர்.எம். மலிக் தெரிவித்துள்ளார். அதே போன்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் அல்லது அதன் இணையத்தளத்தில் (www.hindu dept.gov.lk) முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் (www.muslimaffairs.gov.lk) விண்ணப்பங்களை பதிவிறக்கிக் கொள்ளலாம்.

அதற்கமைய குறித்த பிரதேசத்தில் தற்போது நிரந்தரமாக வசித்து வருபவரும், 2018 டிசெம்பர் 15 ஆம் திகதி 60 வயதைப் பூர்த்தி செய்த கலைஞர்களின் விண்ணப்பங்களை மேற்படி விருது வழங்குவதற்கு சமர்ப்பித்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கலாபூஷண அரச விருது விழா சம்பந்தமாக குறித்த துறையில் சிரேஷ்டத்துவ அடிப்படையில் ஒரு பிரதேச செயலகத்திலிருந்து மூன்று பேரின் பெயர்கள் சிபாரிசு செய்யப்பட்டு, அந்தந்த பிரதேச கலாசார அதிகார சபையின் சிபாரிசுடன், கலாசார உத்தியோகத்தர்/ கலாசார அபிவிருத்தி உத்தி யோகத்தர்/ அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சிபாரிசுடன், பிரதேச செயலாளரின் அனுமதியுடன் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

நாட்டின் கலைத்துறைக்கு உன்னத பங்காற்றியவர்களை கௌரவிப்பதற்காக இந்த விருது வழங்கல் விழா ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்று வருகின்றது. இவ்வாறு விருதுக்காக தெரிவு செய்யப்படும் கலைஞர்கள் விசேட அரச நினைவுச் சின்னம், பொற்கிழி மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சாரதி தூக்கம்; ஆட்டோ குடைசாய்ந்தது; ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயம்!



(கொட்டகலை)

நுவரெலியாவிலிருந்து காலி பகுதியிலுள்ள உறவினர்கள் வீட்டுக்குச் சென்றவர்கள் பயணித்த ஆட்டோ ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

நுவரெலியா - அட்டன் பிரதான வீதியில் கொட்டகலை பொரஸ்கிறிக் பகுதியில் குறித்த ஆட்டோ மண்மேட்டில் மோதுண்டு பிரதான வீதியில் குடைசாய்ந்து விபத்துக் குள்ளாகியுள்ளது.

நேற்றுக்காலை 7 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக திம்புள்ள பத்தனை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதிக்கு தூக்கம் ஏற்பட்டதன் காரணமாக ஆட்டோவை கட்டுப்படுத்த முடியாததனால் இவ் விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸாரின் விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.

ஆட்டோ சாரதியும் அவரின் மனைவி மற்றும் இரண்டு சிறு பிள்ளைகளும் பயணித்துள்ளதாகவும் நான்கு பேரும் காயங்களுக்குள்ளாகி கொட்டகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)

# ஈழத்தின் தமிழிசை அரங்கேற்ற விழா

(யாழ்ப்பாணம்)

குரலோசை நுண்கலைகளின் தாயகம் அமைப்பின் ஏற்பாட்டில் ஈழத்தின் தமிழிசை- அரங்கேற்று விழா எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக இசைத் துறையின் முதுநிலை விரிவுரையாளர் தவநாதன் றொபேட்டின் நெறிப்படுத்தலில் நிகழவிருக்கும் இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக தமிழிசை வாக்கேயக் காரர் பொன்.ஸ்ரீவாமதேவன், சிறப்பு விருந்தினராக கலைஞர் வேல்.ஆனந்தன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இதில் நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், திருமறைக்கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகள், தென்கயிலை ஆதீன குரு முதல்வர் அகத்தியர் அடிகள் ஆகியோர் ஆசி வழங்குவர். (இ-5-102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 14.04.2019-14.05.2019



விகாரி வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே அதிசார கதியில் தனுசு இராசியில் சஞ்சரிக்கும் குரு பகவான் உங்கள் இராசியைப் பார்க்கிறார். அவரது பார்வையால் உங்கள் இராசி புனிதமடைகிறது. அதோடு சகாய ஸ்தானம் என்னும் 3 ஆம் இடத்தையும் பாக்கிய ஸ்தானம் எனப்படும் 5 ஆம் இடத்தையும் குரு பார்ப்பதால், இந்த மாதம் உங்களுக்கு இனிய மாதம் தான். பொன், பொருள் சேர்க்கை, பூமி சேர்க்கை என்று பல வழிகளிலும் நன்மைகள் நடைபெறும்.

உங்கள் இராசிநாதன் செவ்வாய், தன ஸ்தானத்தில் சுக்கிரன் வீட்டில் பலம்பெற்றுச் சஞ்சரிக்கிறார். உங்களுக்கு அஷ்டமாதிபதியாகவும் விளங்குபவர் செவ்வாய். அவரது பார்வை விருச்சிக இராசியில் அவரது வீட்டிலேயே பதிவது யோகம்தான். உடல் ஆரோக்கியம் சீராகும். குடும்ப நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தொழிலில் கூடுதல் இலாபம் வந்து கொண்டேயிருக்கும். இடம் வாங்க வேண்டும், வீடு கட்ட வேண்டும், விவசாயம் செய்யவேண்டும் என்றெல்லாம் திட்டமிட்டிருந்தவர்களுக்கு யோகமான நேரம் இது.

மாதத் தொடக்கத்தில் 6 இற்கு அதிபதியான புதன், நீச்சம் பெறுகிறார். எனவே எதிரிகளின் பலம் குறையும். வீண்பழிகள் அகலும். உத்தியோகம் சம்பந்தமாக ஏதேனும் புது முயற்சிகள் எடுத்திருந்தால் அதில் அனுகூலம் கிடைக்கும். கடன் சுமை குறையும். பூர்வீகச் சொத்து பிரச்சினை சுமுகமாகும். வழக்குகள் சாதகமாகும்.

இந்த மாதம் சித்ரா பௌர்ணமியன்று சித்ரகுப்தர் வழிபாட்டை மேற்கொள்வதோடு, அட்சய திருதியை அன்று விஷ்ணு, இலட்சுமி வீற்றிருக்கும் ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு வாருங்கள்.

### உச்ச சுக்கிரனின் சஞ்சாரம்

ஏப்ரல் 16 ஆம் திகதி மீன இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். மீனம் சுக்கிரனுக்கு உச்ச வீடாகும். தன சப்தமாதிபதியான சுக்கிரன் உச்சம் பெற்றிருக்கும் இது, மிகவும் யோகமான நேரமாகும். தொழிலில் இலாபம் இருமடங்காகும். வங்கி சேமிப்பு அதிகரிக்கும். கொடுக்கல்-வாங்கல் திருப்திகரமாக இருக்கும்.

ஏற்கனவே மீனத்தில் நீச்சம் பெற்றிருக்கும் புதனோடு, சுக்கிரன் இணைவதால் புத-சுக்கிர யோகமும் நீச்சபங்க இராஜயோகமும் ஏற்படுகிறது. எனவே பொருளாதார முன்னேற்றம் மட்டுமின்றி, புதிய பொறுப்புகளும் கிடைக்கும். மே 11 ஆம் திகதி மேஷ இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். தனாதிபதி சுக்கிரன் உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது, வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள்.

### பொன்னான புதன் சஞ்சாரம்

ஏப்ரல் 26 ஆம் திகதி மேஷ இராசியிலும் மே 12 ஆம் திகதி ரிஷப இராசியிலும் புதன் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதி புதன் ஆவார். எனவே சகாய ஸ்தானம் பலப்படுகிறது. இந்த நேரத்தில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உத்தியோக உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். புதிய முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும்.




### மிதுன செவ்வாய் சஞ்சாரம்

## குரு பார்வையால் செல்வநிலை உயரும்

உங்கள் இராசிநாதன் செவ்வாய், 8 ஆம் பார்வையாக சனியைப் பார்க்கிறார். மே 7 ஆம் திகதி மிதுன இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். அங்கிருந்தபடியே சப்தம பார்வையாக சனி யைப் பார்க்கிறார். இதுபோன்ற செவ்வாய் - சனி பார்வை காலங்களில் ஆரோக்கியத் தொல்லை உருவாகும். எதிரிகளின் பலம் கூடும். மன நிம்மதி குறையும். எதைச் செய்தாலும் குடும்ப உறுப்பினர்களை கலந்து ஆலோசித்துச் செய்வது நல்லது.

இந்த மாதம் சித்ரா பௌர்ணமியன்று மலைவலம் வருவது நல்லது. செவ்வாய் தோறும் முருகப்பெருமானை வழிபடுவது சிறப்பு.

### பெண்களுக்கான பலன்கள்

தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும் மாதம் இது. துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். மாதத் தொடக்கத்தில் மீன சுக்கிரனின் சஞ்சாரத்தால் பயணங்கள் அதிகரிக்கும். தங்கம், வெள்ளி வாங்கும் யோகம் உண்டு. கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். தாய் மற்றும் சகோதரர்கள் கேட்ட உதவிகளைச் செய்வார்கள். குரு பார்வை இருப்பதால் திருமண முயற்சிகள் வெற்றி பெறும். பணிபுரியும் பெண்களுக்கு மேலிடத்து ஆதரவு கிடைக்கும். வீடு கட்டவும் வாகனம் வாங்கவும் விண்ணப்பித்திருந்தால், உங்களின் அந்த விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும். சரியான நேரத்தில் சலுகைகள் கிடைக்கும். வர வேண்டிய சம்பளப் பாக்கிகள் தானாக வந்து சேரும். செவ்வாய் தோறும் முருகப் பெருமானையும், சித்ரா பௌர்ணமி அன்று சித்ர குப்தனையும் வழிபட்டு வருவது நல்லது.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



விகாரி வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே விரயாதிபதி செவ்வாய் உங்கள் இராசியில் சஞ் சரிக்கிறார். விரய ஸ்தானத்தில் சுகாதிபதியான சூரியன் உச்சம்பெற்று விளங்குகிறார். எனவே குடும்பச் சுமை கூடும். கொள்கைப் பிடிப்போடு செயற்பட இயலாது. இடமாற்றம், ஊர் மாற்றம், இலாகா மாற்றம் என்று ஏதேனும் ஒரு மாற்றம் வரலாம்.

இது தவிர சனி, குரு, கேது ஆகிய மூன்று கிரகங்களும் 8 ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றன. தனாதிபதி புதன் நீச்சம் பெற்றிருக்கிறார். எனவே மாதத் தொடக்கத்தில் மன நிம்மதி குறையும். எதிர்பாராத விரயங்களால் இயல்பான வாழ்க்கை பாதிக்கும். எந்தக் காரியத்திலும் தடுமாற்றம் வந்து சேரும். ஆரோக்கிய அச்சுறுத்தல்கள் அகல, உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது.

குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிவதால் பணத்தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும். காரியத்தை தொடங்கி விட்டால், எப்படியாவது தொகை கிடைத்து காரியம் முடிந்து விடும். சனி, குரு ஆகிய இரண்டு கிரகங்களும் இம்மாதத்தில் வக்கிரம் பெறுவது நன்மை தான். சனி வக்கிரம் பெறுவதால், ஆரோக்கியத் தொல்லையில் இருந்து விடுபட்டு உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். அதற்கு ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துங்கள். பயணங்கள் அதிகரிக்கும் மாதம் இது.

2 இல் ராகுவும் 8 இல் கேதுவும் இருக்கிறது. அவற்றின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கும் பொழுது ஏற்றமும் இறக்கமும் கலந்த சூழ்நிலை ஏற்படும். ஒரு சமயம் பணப் புழக்கம் அதிகமாக இருக்கும். மற்றொரு சமயம் மனக்குழப்பம் அதிகமாக இருக்கும். நட்பு திடீரென பகையாகலாம். நாகசாந்திப் பரிகாரங்களை செய்துகொள்வதோடு, ராகு-கேதுக்களுக்கு முறையான வழிபாடுகளையும் செய்யவேண்டும்.

இந்த மாதம் சித்ரா பௌர்ணமி வருவதால் சித்ரகுப்தனை வழிபட்டு வாருங்கள். அட்சய திருதியை அன்று அஷ்ட லட்சுமியை வழிபட்டால் செல்வ வளம் பெருகும்.

### உச்ச சுக்கிரனின் சஞ்சாரம்

ஏப்ரல் 16 ஆம் திகதி மீன இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். இராசிநாதன் உச்சம் பெறும் இந்த நேரம், ஒரு யோகமான நேரமாகும். செய்யும் புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வியாபார விரோதங்கள் விலகும். சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்து உருவாகும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். வழக்குகள் சாதகமாகும். பெண் வழிப் பிரச்சினை அகலும். மே 11 ஆம் திகதி மேஷ இராசிக்கு சுக்கிரன் வருகிறார். அங்குள்ள சூரியனோடு அவர் இணையும் பொழுது சுபச் செலவு அதிகரிக்கும்.

### பொன்னான புதன் சஞ்சாரம்

ஏப்ரல் 26 ஆம் திகதி மேஷத்திற்கும் மே 12 ஆம் திகதி ரிஷபத்திற்கும் புதன் செல்கிறார். இதன் விளைவாக பல நற்பலன்கள் உங்களுக்குக் கிடைக்கும். மறைந்த புதனால் நிறைந்த தனலாபமும் உண்டு. நிறைவான வாழ்க்கையும் அமையும். புதன் உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். தன பஞ்சமாதிபதி, இராசியில் சஞ்சரிக்கும் நேரத்தில் பிள்ளைகளால் உதிரி வருமானம் வந்து சேரும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும்.




## தன்னம்பிக்கையைத் தளரவிட வேண்டாம்

### மிதுன செவ்வாய் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு சப்தம விரயாதிபதியான செவ்வாய், தன ஸ்தானத்திற்கு மே 7 ஆம் திகதி வருகிறார். இந்த நேரத்தில் குடும்பச் சுமை அதிகரிக்கும். கூடுதல் விரயம் ஏற்படும். இடமாற்றங்கள், வீடுமாற்றங்கள் வருவதற்கான அறிகுறிகள் தென்படும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். இல்லத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும். பிறருக்குப் பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். அரசியல் களத்தில் இருப்பவர்களுக்கு, தொண்டர்களின் ஆதரவு பெருகும்.

இம்மாதம் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வர செவ்வாய் தோறும் முருகப்பெருமானை வழிபடுங்கள். பௌர்ணமி அன்று கிரிவலம் வருவது அதிக பலன் தரும்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் குடும்பச்சுமை கூடுதலாகவே இருக்கும். 'நினைத்த காரியத்தை செய்ய முடியவில்லையே' என்று கவலைப்படுவீர்கள். கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் அகன்று இணக்கம் ஏற்படும். விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. தாய் மற்றும் உடன்பிறப்புகளின் ஆதரவு எதிர்பார்த்த அளவிற்குக் கிடைப்பது அரிது. ஒரு சிலர் உங்களை விட்டு விலகவும் நேரிடலாம். சனியின் வக்கிர காலத்தில் ஓரளவு நன்மைகள் கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். கடன் சுமை கருதி உங்கள் பெயரில் உள்ள சொத்துக்களை விற்க நேரிடலாம். பணிபுரியும் பெண்களுக்கு திடீர் இடமாற்றங்கள் வந்து சேரலாம்.

மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. வர வேண்டிய பாக்கிகள் தாமதப்படும். குல தெய்வ வழிபாடும், குமரக் கடவுள் வழிபாடும் எதிர்பார்த்த நற்பலன்களை வழங்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மீள்குடியேற்ற வீட்டுத் திட்டங்கள் வழங்கல்

## கிளிநொச்சி அரசாங்க அதிபர் தகவல்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறியுள்ள குடும்பங்களுக்கான வீட்டுத்திட்டங்கள் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருவதாக மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளை இழந்த குடும்பங்களுக்கான நிரந்தர வீடுகள் கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கிளிநொச்சி மாவட்டத்தில் மீள் குடியேறி மக்களுக்கான நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கின்ற பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது தேசிய கொள்கைகள் பொருளாதார அலுவல்கள் மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாக 670 மில்லியன் ரூபாய் நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் 134 மில்லியன் ரூபாய் நிதி வீட்டுத்திட்டங்களுக்காக வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து 536 மில்லியன் ரூபாய் நிதி கிடைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் எமது மாவட்டத்திற்கு 14 ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகளை கட்டி வழங்க வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது. தற்போது மேற்படி மீள்குடியேற்ற அமைச்சு 670 வீடுகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

அதேபோல தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வெள்ளத்தினால் பாதிப்பிற்குள்ளான வீடுகளில் 1291 அமைக்கப்பட்டு வருகின்றன.

மேலும் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 4 ஆயிரம் குடும்பங்களுக்கான வீடுகளை வழங்க உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மாதிரி வீட்டுத்திட்டங்கள் ஊடாக 1104 வீடுகள் அமைக்கப்படுகின்றன.

அத்துடன், ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்படவேண்டிய 880 வீடுகளில் 524 வீடுகள் அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (7-315)

## ஆன்மீக அருளுரை

கிளிநொச்சி சின்மயா மிஷன் ஏற்பாட்டில் கொழும்பு சின்மயா மிஷன் சுவாமி குணாதீதானந்த சரஸ்வதி வழங்கும் "வாழ நினைத்தால் வாழலாம்" ஆன்மீக அருளுரை எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (5-7)

# சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகள்






சித்திரைப் புத்தாண்டை சிறப்பிக்கும் முகமாக குமுழமுனை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினரால் இரு தினங்கள் விளையாட்டு நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டன.

குமுழமுனை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் சிறப்பான முறையில் மெதுவாக சைக்கிள் ஓடுதல், மெதுவாக மோட்டார் சைக்கிள் ஓடு தல், பலூன் ஊதி உடைத்தல், உழவு இயந்திரம் பெட்டி கொழுவி பின் பக்கமாக செலுத்துதல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. இதில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர். (7-250)

# மழை காலத்திற்கு முன்னர் வீதியைப் புனரமைக்குமாறு கரைச்சி மக்கள் கோரிக்கை





(கரைச்சி)

கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட ஊரியான் தட்டுவான் கொட்டி விவசாய வீதி பல வருடங்களாக புனரமைக்கப்படாமல் உள்ளதாகப் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த வீதியானது அப் பகுதி மக்களின் ஜீவனோபாயத் தொழிலான நெற்செய்கை வயல்களுக்குச் செல்லும் பிரதான வீதியாகும்.

மழை காலங்களில் இவ் வீதியைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே இவ் வருடம் மழை காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த வீதியை புனரமைத்துத் தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (7-10)

# பார்வையாளர் மண்டபம் திறப்பு




(குருமன்காடு)

வவுனியா, வேலங்குளம் கோவில் மோட்டை நியூலைன் இளைஞர் கழகம் மைதானத்தில் பார்வையாளர் மண்டபம் கழகத்தின் தலைவர் இ.சதீஸ்குமார் தலைமையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சிரமசக்தி செயற்றிட்டத்தின் கீழ் நியூலைன் இளைஞர் கழகத்திற்கு வழங்கப்பட்ட நான்கு இலட்சம் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட பார்வையாளர் மண்டபம் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களால் திறந்து வைக்கப்பட்டது. (7-250)

# சாவகச்சேரி நகர எல்லைக்குள் அபிவிருத்தித் திட்டம் ஆரம்பம்

(சாவகச்சேரி)

மக்களின் பங்கேற்புடனான அபிவிருத்தித் திட்ட செயற்றிட்டம் சாவகச்சேரி நகரசபையினரின் ஏற்பாட்டில் ஆரம்பமாகி இடம் பெற்று வருகிறது.

அந்தவகையில் சாவகச்சேரி நகரசபையின் மண்டுவில், சாவகச்சேரி வடக்கு, கல்வயல் ஆகிய வட்டாரங்களுக்கான கலந்துரையாடல்கள் நிறைவு பெற்றுள்ளன.

அதனைத் தொடர் ந்து இன்று 16ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 10மணியளவில் கோவிற்குடியிருப்பு கடல் வட்டாரத்திற்கான கலந்துரையாடல் புனித லிகோரியார் தேவாலய மண்டபத்திலும், கோவிற்குடியிருப்பு தரை வட்டாரத்திற்கான மக்கள் சந்திப்பு பிற்பகல் 2மணியளவில் ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய மண்டபத்திலும் இடம் பெறவுள்ளன.

19ஆம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நகர மக்களுடனான சந்திப்பு முற்பகல் 10 மணியளவில் சங்கத்தானை மக்களுடனான சந்திப்பு பிற்பகல் 2 மணியளவில் சாரதா சனசமூக நிலைய மண்டபத்திலும் ,நுணாவில் மேற்கு வட்டார மக்களுட னான சந்திப்பு 20ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் கலைமகள் சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 2மணியளவில் நுணாவில் கிழக்கு, மத்தி மக்களுடனான சந்திப்பு சர்வசாதனா சங்க சனசமூக நிலைய மண்டபத்திலும் இடம்பெறவுள்ளன.

21ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் மீசாலை கிழக்கு மக்களுடனான சந்திப்பு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்திலும்,பிற்பகல் மீசாலை மேற்கு மக்களுடனான கலந்துரையாடல் மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்திலும் இடம்பெறவுள்ளன. (இ-5-30)

# கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடான அபிவிருத்தி வேலைகளுக்கு கடந்த ஆண்டு 128 மில்லியன்ரூபாய் நிதி ஒடுக்கீடு கிடைக்கப்பெற்று அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கமநல அபிவிருததி உதவி ஆணையாளர் வே.ஆயகுலன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் இவ்வாண்டுக்கான முதலாவது ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இதில் கமநல அபிவிருத்தி தொடர்பாக கருத்துத் தெரிவித்த உதவி ஆணையாளர், கடந்த ஆண்டில் 128 மில்லியன் ரூபாய் நிதி அபிவிருத்தி வேலைகளுக்காக கிடைத்திருந்தது.

அதன்மூலம் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அதாவது, ஆறு நிதிமூலங்கள் ஊடாக கிடைக்கப்பெற்ற இந்த நிதியின் மூலம் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழுள்ள பல்வேறு அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-350)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிச் சூட்டுக்கு காரணமானவர்களை ஆட்சியிலிருந்தே அகற்ற வேண்டும்

## பிரசாரத்தில் கமல் காட்டம்



(தூத்துக்குடி)

மத்திய, மாநில அரசுகள் திட்டமிட்டே நடத்திய துப்பாக்கி சூட்டுக்கு காரணமானவர்களை ஆட்சியில் இருந்து அகற்றவேண்டும் என்று நெல்லை, தூத்துக்குடியில் கமல்ஹாசன் பிரசாரம் செய்தார்.

நெல்லை, தூத்துக்குடி தொகுதிகளில் போட்டியிடும் மக்கள் நீதி மய்ய வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சியின் தலைவர் கமல்ஹாசன் நேற்று முன்தினம் பிரசாரம் செய்தார். தூத்துக்குடி ஏ.வி.எம். கமலவேல் மகாலில் நடந்த பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் உரையாற்றியதாவது,

தூத்துக்குடி என்றால் துப்பாக்கி சூடும், அரசின் அராஜகமும் தான் நினைவுக்கு வருகிறது. தூத்துக்குடியை பொறுத்தவரை ஆலை வேண்டாம் என்று கூறவில்லை. ஆனால் மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகள் வேண்டாம். இங்கு மக்களுக்கு வந்த நோய்கள் அரசின் அஜாக்கிரதையால் வந்தது.

மக்களுக்கு பிரச்சினை ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று ஒரு கட்சி அனுமதி வழங்கியது. மற்றொரு கட்சி விரிவாக்கம் செய்ய மாசுகட்டுப்பாட்டு வாரியம் அனுமதி இல்லாமல் தொழிற்சாலையை இயங்க அனுமதித்தது. யார் பிரதமராக வந்தாலும் தமிழகத்தை நசுக்க முடியாது. 1,000 பேர் இறப்பதை தடுக்க 13 பேர் இறந்துள்ளனர் என்று கூறுகிறார்கள். அவர்களை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும். மத்திய, மாநில அரசுகள் திட்டமிட்டே துப்பாக்கிச்சூட்டை நடத்தியது. என்னை போன்றவர்கள் 20 ஆண்டுகளுக்கு முன்பு வந்து இருந்தால் இந்தச் சம்பவம் நடந்து இருக்காது.

நம் நாட்டின் காவல் தெய்வங்கள் இராணுவத்தினரை வாக்குகளுக்காக அடையாளம் காட்டுகிறார்கள். அவர்களின் இரத்தத்தை வைத்து பிரதமர் வாக்கு கேட்கிறார். அரசியல் மாண்பை மீட்டெடுக்க வந்த கட்சி மக்கள் நீதி மய்யம். எனக்கு பல சவால்கள் உள்ளன. எனக்கு ஓய்வு என்பதில் நம்பிக்கை இல்லை. நான் உழைத்தால் பார்ப்பதற்கு நீங்கள் இருக்கிறீர்கள். எனது எஞ்சிய வாழ்க்கை மக்களாகிய உங்களுக்காகத்தான் என் வாழ்வை ஏற்றுக் கொள்ளுங்கள். அது உங்களுடையதாகட்டும்.

இந்த தேர்தல் இந்திய நாட்டின் பிரதமரை தேர்வு செய்யும் தேர்தல் ஆகும். இதில் நெல்லை பாராளுமன்ற தொகுதியின் நிலை என்ன? டில்லிக்கு சென்று கேள்வி கேட்கும் ஒரு பிரதிநிதியை நீங்கள் தேர்வு செய்ய வேண்டும். தூத்துக்குடியில் துப்பாக்கிச்சூட்டில் இறந்தவர்களின் குடும்பத்தினர் என்னோடு பிரசாரம் நடந்த இடத்துக்கு வந்திருந்தனர். அவர்கள் மக்கள் நீதிமய்யத்தை தத்தெடுத்து இருக்கிறார்கள்.

நமது மக்களுக்கு தேசிய வியாதியாக மறதி உள்ளது. இன்று நடக்கும் பெரிய பிரச்சினைகளை நாளை மறந்து விடுகிறார்கள். அது அரசியல்வாதிகளுக்கு வசதியாக போய் விடுகிறது. பிள்ளையை கிள்ளிவிட்டு தொட்டிலையும் அவர்கள் ஆட்டுகிறார்கள்.

மற்றொரு கழகம் ஸ்டெர்லைட்டுக்கு எதிராக சத்தம் போட்டால் வாயிலே சுடுமாறு கூறியுள்ளது. தேவைப்பட்டால் இராணுவத்தை அனுப்புவதாகவும் கூறியிருக்கிறார்கள். இந்த நிலை நெல்லைக்கும் வந்து விடக்கூடாது.

இந்த தேர்தலில் புரட்சிக்கு பெயர் பெற்ற பாளையங்கோட்டை மக்கள் மீண்டும் ஓர் அமைதி புரட்சியை ஏற்படுத்த வேண்டும். எதிர்வரும் 18 ஆம் திகதி டோர்ச்லைட் சின்னத்தை வெற்றி பெறச்செய்யுங்கள். முதன் முறையாக வாக்கு போடும் இளைஞர்கள் நல்ல திசையை நோக்கி தமிழகத்தை நகர்த்த வாக்கு போடுங்கள். மக்கள் நீதி மய்யத்தை வெற்றி பெறச்செய்ய புறப்படுங்கள். இதைச் செய்தால் நாளை நமதே, வெற்றியும் நமதே என மேலும் தெரிவித்தார். (7)

# லண்டனிலுள் உளவு மையய

(லண்டன்)

லண்டனிலுள்ள ஈக்குவடோர் தூதரகத்தை, உளவு பார்ப்பதற்கான மையமாக விக்கிலீக்ஸின் இணை நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே பயன்படுத்தியதாக ஈக்குவடோர் ஜனாதிபதி லெனின் மொரெனோ குற்றம்சாட்டியுள்ளார்.

தூதரக விதிகளை மீறிய காரணத்தினாலேயே அசாஞ்சேவின் அகதி அந்தஸ்து மீளப்பெறப்பட்டதாகவும், எந்த நாட்டின் தலையீடும் அதில் இல்லையென்றும் அவர் கூறியுள்ளார்.

எதேச்சதிகார செயற்பாட்டிற்கு ஈக்குவடோர் எதிரானதென குறிப்பிட்ட ஜனாதிபதி லெனின்,

# மகளின் திருமணத்திற்கு பரோல் நளினி தாக்கல் செய்த மனுவிற்கு தமிழக அரசு பதிலளிக்க வேண்டும்

## சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

(சென்னை)

மகளின் திருமணத்திற்காக 6 மாதம் பரோல் கேட்டு நளினி தாக்கல் செய்த மனுவிற்கு தமிழக அரசு பதிலளிக்கும்படி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள் கைதியாக வேலூர் சிறையில் 27 ஆண்டுகளாக தண்டனை அனுபவித்து வரும் நளினி, லண்டனில் இருக்கும் தனது மகள் ஹரிதாவின் திருமண ஏற்பாடுகளை கவனிக்க 6 மாதங்கள் பரோல் வழங்கக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். மேலும், இந்த மனு மீதான விசாரணைக்கு தானே நேரில் ஆஜராகி வாதிட அனுமதிக்க வேண்டும் எனவும் மனுவில் கோரியுள்ளார்.

நேற்று இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் சத்தியநாரயணன் மற்றும் நிர்மல்குமார் அடங்கிய அமர்வு, நேரில் ஆஜராகி வாதிட அனுமதிகோரிய மனுவுக்கு ஜூன்11ஆம் திகதிக்குள் பதிலளிக்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டது. தொடர்ந்து அவசரமாக பரோல் தேவைப்பட்டால் விடுமுறை கால நீதிமன்றத்தை அணுகி நிவாரணம் பெற்றுக் கொள்ளலாம் எனவும் நீதிபதிகள் அறிவுறுத்தினர். வழக்கின் அடுத்த விசாரணையை ஜூன் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர். (7)



# இந்தியா என்றால் மோடி அல்ல; மோடி என்பது இந்தியாவும் அல்ல; மெகபூபா முப்தி விளாசல்

(டில்லி)

இந்தியா என்றால் மோடியும் அல்ல, மோடி என்பது இந்தியாவும் அல்ல என்று ஜம்மு காஷ்மீர் மாநில முன்னாள் முதல்வரும், மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான மெகபூபா முப்தி காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீரின் கதுவா பகுதியில் நேற்று முன்தினம் தேர்தல் பிரசாரத்தில் பிரதமர் மோடி ஈடுபட்டார். அப்போது அவர் பேசுகையில், ஜம்மு காஷ்மீரை முப்தி, அப்துல்லா குடும்பங்கள் 3 தலைமுறைகளாக ஆண்டு விட்டன. நாட்டை துண்டாட நினைக்கும் அவர்களை அனுமதிக்கமாட்டோம் " என்று தெரிவித்தார்.

இதற்கு பதில் அளித்து மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும், முன்னாள் முதல்வருமான





மெகபூபா முப்தி பேசினார். அவர் தெரிவித்ததாவது,

பிரதமர் மோடி தன்னை நாட்டுக்கு ஒப்பாக, இணையாக வைத்துக்கொண்டு, மக்களை தவறாக வழிநடத்துகிறார். பிரதமர் மோடிக்கு மட்டும் நாட்டைப் பற்றிய சிந்தனை, தேசப்பற்று இல்லை. தேசத்தில் உள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் நாடு குறித்த தேசப்பற்றும், கடமையும் இருக்கிறது. இந்தியா என்பது மோடியும் அல்ல, மோடி என்பது இந்தியாவும் அல்ல.

மக்களிடம் இருந்து இரக்கத்தையும், அதிகாரத்தையும் பெறுவதற்காக, எதிர்க்கட்சிகளை அவதூறாக மோடி பேசுகிறார். இவ்வாறு எதிர்க்கட்சிகளை அவதூறு பேசும் மோடி சார்ந்திருக்கும் கட்சி ஏன் தேர்தலுக்கு முன் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பி கூட்டணி குறித்து பேச வேண்டும். கடந்த 1999ஆம் ஆண்டில் தேசிய மாநாட்டுக் கட்சியுடனும், கடந்த 2015 ஆம் ஆண்டில் பிடிபி கட்சியுடனும் ஏன் கூட்டணி அமைத்தீர்கள்.

அரசியலமைப்புச் சட்டம் 370பிரிவு தெரிந்துதானே ஆட்சி செய்கிறீர்கள். முஸ்லிம்களும், சிறுபான்மையினரும் நாட்டை துண்டாட நினைக்கிறார்கள் எனக் கூறிக்கொண்டு அவர்களை அழிக்கும் நச்சுத்திட்டத்துடன் பா.ஜ.க.செயற்படுகிறது " என மேலும் தெரிவித்தார். (7)

# செல்லப்பிராணியாக வளர்த்த பறவை தாக்கி ஒருவர் பலி

(வோஷிங்டன்)

உலகிலேயே ஆபத்தான பறவையான கசோவாரியை வளர்த்த நபர் ஒருவர் அந்த பறவையாலேயே தாக்கப்பட்டு அமெரிக்காவில் பலியாகியுள்ளார்

இதுகுறித்து ஊடகங்கள் தரப்பில்," அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தைச் சேர்ந்தவர் மார்வின் ஹாஜொஸ் . அவர் வித்தியாசமான செல்லப் பிராணிகளை வளர்ப்பதை வாடிக்கையாக கொண்டிருக்கிறார். இதில் கடந்த வெள்ளிக்கிழமை தான் வளர்க்கும் கசோவாரி பறவைக்கு உணவு வைப்பதற்காக சென்றிருக்கிறார் மார்வின். அப்போது எதிர்பாராமல் அவர் தடுக்கி விழுந்திருக்கிறார். அப்போது கசோவாரி பறவை தனது கூர்மையான நகங்களால் அவரை பலமாக தாக்கி உள்ளது. இதில் பலத்த காயமடைந்த அவர் வைத்தியசாலையில் "சிகிச்சை பலனின்றி மரணம் அடைந்தார்" என்று தெரியவந்துள்ளது. (7)

# வீதியில் அழுத உலக பத்திரி



(வோஷிங்டன்)

அமெரிக்க- மெக்ஸிக்கோ எல்லையில் சிறுமி அழுது கொண்டிருக்கும்

ஒளி பட ஜூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

ரகத்தை,
கிலீக்ஸின்
சே பயன்
லெனின்
னாலேயே
பெறப்பட்ட
ம் அதில்
குவடோர்
லெனின்,

பரோல்
வுவிற்கு
ண்டும்
த்தரவு

ம் பரோல்
கு தமிழக
நீதிமன்றம்
கைதியாக
ண்டனை
இருக்கும்
பாடுகளை
கக் கோரி
த தொடர்ந்
ன விசார
அனுமதி
ரியுள்ளார்.
நீதிபதிகள்
அடங்கிய
மதிகோரிய
திலளிக்க
தாடர்ந்து,
விடுமுறை
ம் பெற்றுக்
றுத்தினர்.
ன் 11 ஆம்
(7)

## ...ள்ள ஈக்குவடோர் தூதரகத்தை ...யமாக பயன்படுத்திய அசாஞ்சே



இறையாண்மையுடைய நாடு என்ற ரீதியில் ஏனைய நா்டுகளின் அரசியலு க்கு மதிப்பளிப்பதாக குறிப்பிட்டார். இந்நிலை யில், தமது நாட்டையோ அது தொடர்பான இடங்களையோ உளவுச் செயற்பாட்டு மையமாக இயங்க ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.எனினும், ஈக்குவடோரின் குற்றச்சாட்டுக்கள் யாவும் மூர்க்கத்தனமானதென்றும் அடிப்படையற்றவை என்றும் அசாஞ்சேவின் சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார்.அமெரிக்க அரசின் இராஜதந்திர இரகசிய ஆவணங்களை விக்கிலீக்ஸ் வெளியிட்டதால் சர்ச்சையில் சிக்கிய அசாஞ்சேவிற்கு, ஈக்குவடோரின் கடந்த அரசாங்கம் அகதி அந்தஸ்து வழங்கியது. அதனைப் பயன்படுத்தி லண்டனிலுள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் தங்கியிருந்த அசாஞ்சேவின் அகதி அந்தஸ்தை ஈக்குவடோர் 7 வருடங்களின் பின்னர் கடந்த வாரம் மீளப்பெற்றுக்கொண்டது. அதனைத் தொடர்ந்து, அவர் பிரித்தானிய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

அவரை தம்மிடம் ஒப்படைக்குமாறு அமெரிக்கா கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## சூடான் முன்னாள் அரச அதிகாரிகள் இராணுவச்சபையால் அதிரடிக்கைது



(கார்டூம்)

சூடான் முன்னாள் அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளை இடைக்கால இராணுவச் சபை அதிரடியாக கைதுசெய்துள்ளது.

அத்தோடு, இடைக்கால இராணுவச் சபையின் தலைவராக ஒருநாள் மத்திரம் பதவி வகித்து விலகிய பாதுகாப்பு அமைச்சர் அவாட் இபினையும் பதவியிலிருந்து நீக்கியுள்ளது. புதிய பாதுகாப்பு அமைச்சராக புலனாய்வு பிரிவின் தலைவர் நியமிக்கப்பட்டுள்ளதாக இராணுவச் சபையின் பேச்சாளர் லெப். ஜெனரல் ஷாம்ஸ் எல் கெபஷி தெரிவித்துள்ளார்.

சூடானில் விரைவாக மக்கள் மயப்படுத்த ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென மக்கள் கோரி வருகின்றனர். இந்நிலையில், மக்களின் போராட்டத்தை கலைக்க மாட்டோம் என்றும் மக்கள் தெரிவு செய்யும் புதிய பிரதமரை ஆட்சியில் அமர்த்துவோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சூடானில் கடந்த மூன்று தசாப்தகாலமாக நீடித்த ஒமர் அல் பஷீரின் ஆட்சியை கடந்த வாரம் கவிழ்த்த இராணுவம், தற்போது இடைக்கால இராணுவ சபையொன்றை அமைத்துள்ளது. ஒமரின் அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை கொண்டவர்கள் இராணுவ சபையில் உள்ளதாக மக்கள் குற்றஞ்சாட்டியதைத் தொடர்ந்து, இராணுவச் சபையில் உடன் அமுலுக்கு வரும் வகையில் தலைவர் மற்றும் பிரதி தலைவர்கள் பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அத்தோடு, அரசாங்கத்தின் முன்னாள் அதிகாரிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், முழுமையாக மக்கள்மயப்படுத்தப்பட்ட ஆட்சியை உறுதிப்படுத்தும்வரை வீதிகளை விட்டு செல்லமாட்டோம் என மக்கள் தொடர்ச்சியாக போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## அமைதியும் நம்பிக்கையும் அடுத்தகட்ட தேர்தல்களிலும் தொடரட்டும்!



பதினேழாவது மக்களவைக்கான முதல் கட்ட வாக்குப் பதிவு 91 தொகுதிகளில் பெரும்பாலும் அமைதியாகவும் வாக்காளர்களின் உற்சாகப் பங்கேற்புடனும் முடிந்திருக்கிறது. ஏழு கட்டங்களாக நடைபெறும் இத்தேர்தலில் இன்னும் ஆறு பாக்கியிருக்கின்றன. எஞ்சியுள்ள கட்டங்களில் கொஞ்சமும் வன்முறைக்கு இடம் தராமல் நேர்மையாகவும் சுயேச்சையாகவும் வாக்குப் பதிவு நடைபெறுவதைத் தேர்தல் ஆணையம் உறுதிப்படுத்த வேண்டும்.

ஆந்திரம், அருணாசல பிரதேசம், சிக்கிம், ஒடிஷாவில் சட்டமன்றத்துக்கும் சேர்த்தே வாக்குப் பதிவு நடந்திருக்கிறது. திரிபுராவில் 81.8வீதம், வங்கத்தில் 81வீதம், ஜம்முவில் 72வீதம், காஷ்மீர் பள்ளத்தாக்கில் உள்ள பாரமுல்லாவில் 35வீதம் என வாக்குகள் பதிவாகியுள்ளன. ஒப்புகைச் சீட்டு இணைக்கப்பட்ட வாக்குப் பதிவு இயந்திரங்களில் 1.7வீதம், வாக்குப் பதிவு இயந்திரப் பகுதியில் 0.73வீதம், கட்டுப்பாட்டுப் பிரிவுகளில் 0.61வீதம் பழுதடைந்து உடனே மாற்றப்பட்டுள்ளன. ஆந்திரத்திலும் ஜம்மு-காஷ்மீரிலும் அங்கும் இங்குமாக வன்செயல்கள் நடந்துள்ளன.

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தின் நம்பகத்தன்மை மீது கிட்டத்தட்ட எல்லா எதிர்க்கட்சிகளும் சந்தேகம் கிளப்பியதால் எல்லா வாக்குப் பதிவு இயந்திரங்களுடனும் ஒப்புகைச் சீட்டுப் பிரிவு இணைக்கப்பட்டுவிட்டது. வாக்களித்தபடிதான் பதிவாகியிருக்கிறதா என்று பரிசோதிக்க ஒரு மக்களவைத் தொகுதி, ஐந்து சட்டமன்றத் தொகுதிகளில் தலா ஒரு இயந்திரம் வீதம் ஒப்புகைச் சீட்டை எண்ணி சரிபார்க்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. வாக்காளர்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் தேர்தல் நடைமுறை மீது நம்பிக்கை தொடர இத்தகைய நடவடிக்கைகள் அவசியம்.

ஆணையத்தின் 'பறக்கும் படைகள்' நாடு முழுவதும் இதுவரையில் ரூ.2,426 கோடி மதிப்புள்ள ரொக்கம், மதுபானம், போதை மருந்து ஆகியவற்றைக் கைப்பற்றியுள்ளன. நரேந்திர மோடியின் வாழ்க்கை வரலாற்றுத் திரைப்படத்துக்கும் 'நமோ டிவி' என்ற பெயரில் அவருக்கு ஆதரவான கருத்துகளை ஒளிபரப்பும் தனி அலைவரிசைக்கும் தேர்தல் ஆணையம் தடைவிதித்திருப்பது சரியான நடவடிக்கை. எனினும், தேர்தல் பரப்புரையில் இராணுவத்தின் சாதனைகள் தொடர்பாகப் பேசக்கூடாது என்ற நடத்தை நெறிமுறையைப் பிரதமரே மீறியிருப்பதாக வரும் புகார்கள் மீது தேர்தல் ஆணையம் மௌனம் சாதிப்பது, அதன் நடுநிலையில் விழுந்திருக்கும் கறைதான்.

பறக்கும் படையினர் பணத்தைக் கைப்பற்றுவதும், வருமான வரித்துறை நடத்தும் திடீர் சோதனைகளும் எதிர்க்கட்சிகளை மட்டுமே குறிவைத்து நடப்பதாகப் புகார்கள் வருகின்றன. தேர்தல் நடத்தை நெறிகள் மீறப்படுவதாக வரும் புகார்கள் மீது தேர்தல் ஆணையம் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும், அரசும் தன் பங்கைச் செவ்வனே ஆற்ற வேண்டும்.

**த ஹிந்து ஆசிரியர் தலையங்கம்**

## ...ழுத சிறுமியின் படத்திற்கு ...ரிகை ஒளிப்பட விருது



ஒளிப்படத்திற்கு உலக பத்திரிகை ஒளிப்பட விருது கிடைத்துள்ளது. கடந்த வருடம் ஜூன் மாதம் 12 ஆம் திகதி, மெக்ஸிக்கோ-அமெரிக்க எல்லைக்குள் சட்டவிரோதமாக ஊடுரு வியதாக அமெரிக்க எல்லைப் பாதுகாப்பு படை வீரர்கள் சிலரைக் கைது செய்தனர்.

கைதான பெண் ஒருவர் தன் மகளை அங்கேயே விட்டுவிட்டு அமெரிக்க எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்களின் வாகனத்தில் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அதன் பின்னர் அக்குழந்தை இரவு முழுவதும் அதே இடத்தில் அழுது கொண்டு இருந்தது. இக்காட்சியை அந்நாட்டு ஒளிப்பட கலைஞர் ஜோன் தன் கமராவில் படமாக்கினார். உலகெங்கிலுமிருந்து சுமார் 4738 கலைஞர்கள் தாங்கள் எடுத்திருந்த 78,801 ஒளிப்படங்களை உலக பத்திரிகை ஒளிப்பட விருதுக்கு அனுப்பி வைத்தனர். (7)

## செவ்வாய்க்கிரக பாறையில் துளையிட்டது ஆய்வுக்கலம்



(வோஷிங்டன்)

செவ்வாய்க்கிரத்தின் நிலத்தடி பாறையில் துளையிட்டு, அதன் மாதிரிகளை முதன் முறையாக அமெரிக்காவின் கியூரியாசிட்டி ஆய்வுக் கலம் சேகரித்துள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசாவினால் வெளியி[illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், செவ்வாய்க்கிரகத்தில் ஆய்வுகள் மேற்கொண்டு வரும் கியூரியா சிட்டி ஆய்வுக் கலம், அண்மையில் நிலத்தடிப் பாறையொன்றில் துளையிட்டு அதன் மாதிரிகளை சேகரித்துள்ளது.

அந்த கிரகத்தில் தரையிறங்கிய 2,370 ஆவது செவ்வாய் கிரக நாளில் (2,244 பூமி நாள்), அதாவது கடந்த 6ஆம் திகதி இந்த சாதனையை கியூரியா சிட்டி செய்துள்ளது.

ஷார்ப் மலைப் பகுதியில், களிமண் பிரிவு என்றழைக்கப்படும் இடத்தில், அபெர்லேடி என்று பெயரிடப்பட்ட நிலத்தடிப் பாறையில் துளையிடப்பட்டு ள்ளது.

அருகிலுள்ள வேரா ரூபின் ரிட்ஜ் என்ற பகுதியில் பாறையில் துளையிடுவது மிகவும் கடினமாக இருந்தது. ஆனால், இந்தப் பாறையில் வெற்றிகரமாகத் துளையிட்டு, உட்பொருட்களை கியூரியாசிட்டியிலுள்ள கருவி மிக எளிதில் உறிஞ்சி எடுத்துள்ளது.

சேகரிப்பட்ட மாதிரிகள், கியூரியாசிட்டிக்குள் அமைக்கப்பட்டுள்ள ஆய்வகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த மாதிரிகளின் தன்மைகள் குறித்து அந்த ஆய்வகம் சோதனைகளை மேற் கொள்ளும். துளையிடும் கருவியை மட்டும் பயன்படுத்தி, செவ்வாய் கிரக மாதிரிகளை கியூரியாசிட்டி ஆய்வுக் கலம் சேகரித்துள்ளது.இதுவே முதல் முறையாகும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கு புதிய பிரதமர் ஒருவரை நியமிக்கும் அதிகாரம் இப்போதும் உண்டு

## குமார வெல்கம சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு புதிதாக பிரதமர் ஒருவரை இப்போதும் நியமிக்கும் அதிகாரம் உண்டு எனவும் அவ்வாறு நியமித்ததன் பின்னர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் எனவும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

மீண்டும் அரசியல் புரட்சியொன்று இடம்பெறப் போவதாக பல தரப்புக்களிலும் கூறப்படும் கருத்துக் குறித்து வினவிய போதே குமார வெல்கம மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 113 பெரும்பான்மைப் பலம் இருக்குமானால், அரசியல் புரட்சியொன்றை மேற்கொள்ளலாம். அவ்வாறில்லாமல் செய்வதில் எந்தவிதப் பயனும் இல்லை. கடந்த காலத்தில் அவ்வாறான ஒரு நடவடிக்கையின் பெறுபேற்றைக் கண்டுகொண்டோம்.

பிரதமர் பொறுப்பை ஏற்க வேண்டாம் என கடந்த காலத்திலும் நான் மகிந்த ராஜபக்ஷவிடம் கூறினேன். மீண்டும் ஒரு முறை மகிந்த அந்தக் குழியில் விழமாட்டார் என தான் நம்புவதாகவும் குமார வெல்கம எம்.பி. மேலும் தெரிவித்தார். (இ-7)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை எதிர்ப்பதற்கான முன்னெடுப்புக்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஜனநாயக ரீதியிலான கோரிக்கைகளை முன்வைத்து இடம்பெறுகின்ற மக்களுடைய போராட்டங்களை ஒடுக்குகின்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் (CTA) அமுலுக்கு வருவதைத் தடுப்பதற்கான முன்னெடுப்புக்களை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை மாலை 5 மணியளவில் கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம் பெறும்.

இதில் அனைத்து அரசியல் கட்சிகள், வெகுஜன அமைப்புகள், சமூக மட்ட அமைப்புகள், இளைஞர் மற்றும் மாணவர் அமைப்புக்கள், சமூக அரசியல் செயற்பாட்டாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. (இ-7)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்

(கொழும்பு)

கோனகங்ஆர பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 17 ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த நபர் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக மொனராகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் இருவர் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட துப்பாக்கிகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் கோனகங்ஆர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# தனியார் வைத்தியசாலைகளைக் கட்டுப்படுத்தும் சட்டம் விரைவில் வர்த்தமானியில்-அரசாங்கம்

(கொழும்பு)

தனியார் வைத்தியசாலைகளைக் கட்டுப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வரும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மருந்து வகைகள் 27 இற்கான கட்டுப்பாட்டு விலை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதன் பின்னர் தனியார் வைத்தியசாலைகளை கட்டுப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதாகவும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (இ-7)

# புதிய பிரதம நீதியரசரை நியமிப்பதற்கு ஜனாதிபதியின் பரிந்துரை கிடைக்கவில்லை



(கொழும்பு)

புதிய பிரதம நீதியரசர் நியமனத்துக்கான பரிந்துரைகள் எதுவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இருந்து இது வரை அரசியலமைப்பு சபைக்குக் கிடைக்கவில்லை என்று, அரசியலமைப்பு சபையின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

"கடந்த 6 ஆம் திகதி அரசியலமைப்புச் சபை கூடியபோது, புதிய பிரதம நீதியரசர் நியமனத்துக்கான பரிந்துரை முன்வைக்கப்படவில்லை.

எனினும், அரசியலமைப்பு சபையின் அடுத்த கூட்டம் இம் மாத இறுதியில் நடக்கும் போது, ஜனாதிபதியின் பரிந்துரை அனுப்பி வைக்கப்படலாம்" என்றும் அந்த உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் நளின் பெரேராவின் பதவிக்காலம் எதிர்வரும் 29 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மருந்தில் கவனம்

எனக்குத் தெரிந்த ஒருத்தர். பொட்டுக் கடலை சாப்பிடுவது போல மருந்து மாத்திரைகள் சாப்பிடுவார். ஏழெட்டு விதமான மாத்திரைகளை உள்ளங்கையிலே எடுத்து அப்படியே வாயில் போட்டு தண்ணீரை ஊற்றி முழுங்கிடுவார். மருந்து மாத்திரை பெயரெல்லாம் இவருக்கு மனப்பாடமாகத் தெரியும். கடைக்குப் போய் கடலை மிட்டாய் வாங்குவது போல மருந்து வாங்கிட்டு வருவார்.

இது நல்ல பழக்கம் என்றா நினைக்கிறீர்கள்? விபரத்துடன் சாப்பிடும் மருந்து வியாதியைப் போக்கும். விபரமில்லாமல் சாப்பிடும் மருந்து வியாதியை உண்டாக்கும். நாம் சாப்பிடும் மருந்துகள் பற்றி இரண்டு விடயங்களை முக்கியமாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

முதல் விடயம் Side effects. அதாவது மருந்தினால் ஏற்படக் கூடிய தீங்கான விளைவுகள். பொதுவாக பலருக்கு ஒவ்வொரு மருந்தும் ஏதாவது தீயவிளைவை கொஞ்சமாவது ஏற்படுத்தியே தீரும். வீரியம் குறைந்த மருந்துகளைக் கூட தவறான முறையிலோ, நீண்டகாலத்திற்கோ, அளவுக்கு மீறி அதிகமாய் சாப்பிட்டால் தீய விளைவுகள் உண்டாகி விடும்.

அதுமட்டுமன்றி ஒரு மருந்து வெவ்வேறு மனிதர்களுக்கு வெவ்வேறு விதமான தீய விளைவுகளை ஏற்படுத்தும். இது நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டிய ஒரு முக்கியமான விடய மாகும்.

இரண்டாவது என்னவென்றால் வைத்தியர்கள் சொல்லும் ஆலோசனையை சரியாகக் கேட்டு கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். பலர் எப்படி என்றால்... வைத்தியரிடம் போவார்கள். மருந்துச் சீட்டு எல்லாம் வாங்குவார்கள். ஆனால் எந்த மருந்தை எந்த அளவு சரியாகச் சாப்பிட வேண்டும் என்று வைத்தியர் சொல்லுவதைக் காதில் வாங்குவது இல்லை!

சிலர் இரண்டு மாத்திரை சாப்பிட வேண்டியதற்கு பதிலா நான்கு மாத்திரை சாப்பிட்டால் விரைவில் நோய் தீர்ந்துவிடும் என நினைக்கிறார்கள். இன்னும் சிலர் உடம்பு கொஞ்சம் சரி யானதும் மருந்து சாப்பிடுவதை நிறுத்தி விடுவது. இது மிகவும் ஆபத்தான விடயம். அதனால் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

நாம் சர்வசாதாரணமாக வாங்கிச் சாப்பிடும் சில மாத்திரைகள் பற்றி கொஞ்சம் தெரிந்து வைத்திருப்பது நல்லது. அஸ்பிரின் சம்பந்தப்பட்ட மாத்திரைகள் சாலிசிலிக் அமிலத்தினுடைய ஒரு வேதி விளை பொருள் இது. ஜீரம், வீக்கம், தலைவலி, மூட்டு வலி, உடல்வலி இவற்றைத் தணிக்கின்ற குணம் இதற்கு உண்டு. இரத்தத்தில் கட்டி உண்டாவதை இது தடுக்கும். அதனால் இதயத் தாக்குதல் ஏற்படக்கூடிய வாய்ப் புக்கள் குறைவு.

எல்லாம் சரி. இருந்தாலும் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வைத்தியர் கண்காணிப்பு இல்லாமல் அஸ்பிரின் மருந்துகளை கொடுக்கக் கூடாது. பெரியவர்களுக்குக்கூட இது வேண்டாத விளைவுகளை ஏற்படுத்த முடியும். வயிற்று வலி, வாந்தி, சிலவேளை வயிற்றுப்புண் எல்லாம் உண்டாகும். இதைத் தவிர்க்க வேண்டுமென்றால் வெறும் வயிற்றில் அதைச் சாப்பிடக் கூடாது. அதை சாப்பிடும் போது பெரிய டம்ளர் தண் ணியும் தாராளமாய் குடிக்க வேண்டும்.

அளவுக்கு மீறி அஸ்பிரின் சாப்பிடுபவர்கள் காதில் கிர்...கிர் என ஒரு சத்தம் வரும். மருந்தை நிறுத்தினால் அது நின்று விடும்.

இதனால் ஒவ்வாமை (அலர்ஜி) கூட வரலாம். தோல் தடிக்கும், தும்மல், நெஞ்சிலே இறுக்கம் இவை வரலாம். சாதாரண தலைவலிக்கெல்லாம் ஆறு மணி நேரத்திற்கு ஒரு தடவை 600 மில்லிகிராம் அளவுக்கு அஸ்பிரின் சாப்பிடலாம். இது மாதிரி தொடர்ந்து 10 நாட்களுக்கு மேல் சாப்பிடக் கூடாது. காய்ச்சலுக்கு மூன்று நாட்கள் வரைக்கும் சாப்பிடலாம்.

அஸ்பிரின் சாப்பிட்ட பின் வேறு ஏதாவது மருந்து சாப்பிட வேண்டியிருந்தால் அல்லது அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியிருந்தால் அஸ்பிரின் சாப்பிட்ட விடயத்தை வைத்தியரிடம் சொல்ல வேண்டும்.

பரசிட்டமோல் (Paracetemol) இதுவும் சுலபமாக வாங்கிச் சாப்பிடும் ஒரு மருந்து. சின்னச் சின்ன வலிகள், வேதனைகள் இவற்றுக்கு நிவாரணம் கொடுக்கும். காய்ச்சலையும்கூட நீக்கும். ஆனால் அஸ்பிரினுக்கு இருக்கிற வீக்கம் தணிக்கும் குணம் இதற்கு இல்லை. ஆறு மணி நேரத்திற்கு ஒரு தடவை 500 மில்லிகிராம் அளவுக்கு சாப்பிடலாம்.


இதை அதிகமாய் சாப்பிட்டால் என்ன ஆகும் தெரியுமா? கடுமையான ஈரல் சேதம் ஏற்பட்டு உயிருக்கே ஆபத்து ஏற்படும். அஸ்பிரின், பரசிட்டமோல் இது இரண்டும் கலந்த மருந்தை சாப்பிட்டால் சிறுநீரக நோய் ஏற்படும்.

அடுத்து Antibiotics நுண்ணுயிர்க் கொல்லிகள். இது கொஞ்சம் தாமதமாக செயல் புரிய ஆரம்பிக்கும். இதைப் பாதியில் நிறுத்தக் கூடாது. சிலவற்றை வெறும் வயிற்றிலும் சிலவற்றை சாப் பிட்ட பின் சாப்பிட வேண்டும். மருந்து சாப்பிட்ட பின் மதுவை அருந்தக்கூடாது. கருவுற்ற பெண்கள் வைத்தியரைக் கேட்காமல் எந்த மருந்தையும் சாப்பிடக் கூடாது. மருந்தை விலை கொடுத்து வாங்கலாம். வியாதியை விலை கொடுத்து வாங்கலாமா? சேர்! ஒருவர் அப்படித்தான் எல்லாவற்றிற்கும் தானே வைத்தியம் செய்வார். அவருக்கு ஒரேநேரத்தில் ஏகப்பட்ட கோளாறு வந்து விடும். உடனே கடைக்குப் போய் காய்கறி வாங்குவது போல மருந்துகளை வாங்கிற்று வந்திடுவார்.

என்னாங்க இவ்வளவு மாத்திரை இருக்கே இதை எப்படி சாப்பிடுவது உணவுக்கு முன்னரா பின்னரா என ஒருத்தர் கேட்டார்.

அதைப் பற்றி கவலை இல்லை சேர். ஏனென்றால் எனக்கு உணவே இதுதான் என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. பக்தர் ஒருவர் நேர்த்திக் கடனை நிறைவேற்ற பறவைக்காவடி எடுப்பதையும் படத்தில் காணலாம். (படங்கள்:- தாவடி செய்தியாளர்)

# உலகம் முழுவதும் உள்ள தமிழர்களை மோடியால் தான் பாதுகாக்க முடியும்

## பொன்.இராதா நம்பிக்கை

(நாகர்கோவில்)

உலகம் முழுவதும் உள்ள தமிழர்களை இந்தியப் பிரதமர் மோடியால் தான் பாதுகாக்க முடியும் என கன்னியாகுமரி மக்களவைத் தொகுதி பா.ஜ.க. வேட்பாளர் மத்திய இணை அமைச்சர் பொன்.இராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நாகர்கோவிலில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை ஊடக வியலாளருக்கு கருத்துத் தெரிவிக் கும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

சட்டமேதை அம்பேத்கர் எந்த மாதிரியான இந்தியாவை உரு வாக்க நினைத்தாரோ, அதன்படி அவரது வழியில் பா.ஜ.க.தலை மையிலான மத்திய அரசு பயணி த்து வருகிறது. கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை மத்தியில் ஆட்சியில் இருந்த காங் கிரஸ் தமிழகத்துக்கு என்ன செய்தது.

10 ஆண்டுகள் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோதுதான் இலங் கையில் சுமார் ஒன்றரை இலட் சம் தமிழர்கள் படுகொலை செய் யப்பட்டனர்.

இலங்கை உள்ளிட்ட உலகம் முழுவதும் உள்ள தமிழர்களை



பிரதமர் மோடியால்தான் பாதுகா க்க முடியும். தமிழர்கள் தங்களது தாய்மொழியை மறவாத வகை யில் பயிற்சியளிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)



கிறிஸ்தவர்களின் தவக்கால வழிபாட்டில் நேற்று முன்தினம் குருத்தோலை ஞாயிறு வழிபாடு இடம் பெற்றது. (படம்:-ஈச்சமோட்டை செய்தியாளர்)

## சிறைச்சாலைக்குள் ஹெரோயினுடன் இளைஞன் கைது!

(கொழும்பு)

மகசின் சிறைச்சாலைக்குள் ஹெரோயின் கொண்டு சென்ற இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறைச்சாலை அதிகாரிக ளுக்கு கிடைத்த தகவல் ஒன் றுக்கமைய மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த சந்தேக நபரி டமிருந்து 44 கிராமிற்கும் அதி களவான ஹெரோயின் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ள தாக பொலிஸ் ஊடகப் பேச்சா ளர் அலுவலகம் தெரிவித்துள் ளது.

சிறைக்கைதியொருவரை குறித்த சந்தேக நபர் பார்க்க வந்த வேளையே இவ்வாறு ஹெரோயினுடன் கைது செய் யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள வர், மாளிகாவத்தை பகுதி யைச் சேர்ந்த 24 வயது இளை ஞர் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. (இ-7)

## பாதாள உலகத் தலைவன்

# மதூஷுக்கு எதிராக குற்றப் பத்திரத்தை தாக்கல் செய்ய அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

டுபாயில் கைது செய்யப்பட்ட பாதாள உலகக் குழுத் தலைவ னான மாகந்துரே மதூஷ்க்கு எதிராக குற்றப் பத்திரத்தை தாக் கல் செய்ய சட்டமா அதிபர் திணை க்களம் எதிர்பார்ப்பதாக அதன் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித் துள்ளார்.

மதூஷ்க்கு எதிராக கிடைக் கப் பெற்றுள்ள சாட்சியங்களின் அடிப் படையில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளது.

டுபாயில் இடம்பெற்ற விருந்து பசார நிகழ்வு ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்டு, இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டவர்கள் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்குத் தொடர்ந்து குற்றப் பத்தி ரம் தாக்கல் செய்வது குறித்து அதிக கவனம் செலுத்தப்படுவதாக சட்



டமா அதிபர் திணைக்களம் தெரி வித்துள்ளது.

சாட்சிகள் தொடர்பான ஆவ ணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதைய டுத்து, மாகந்துரே மதூஷ்க்கு எதி ராக குற்றப் பத்திரம் தாக்கல் செய் யப்படவுள்ளது.

மாகந்துரே மதூஷை இலங் கைக்குக் கொண்டு வருவதற்காக டுபாய் அரசாங்கத்துடன் இணை ந்து கடந்த வாரம் முதல் செயற் பாடுகளை முன்னெடுத்திருப்ப தாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேநேரம், மதூஷ்க்கு 1000 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் மற்றும் சொத்துகள் உள்ள தாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் 5 ஆம் திகதி பாணந்துறை - வாழைத் தோட்டத்தில் வைத்து கைது செய் யப்பட்ட மதூஷின் நண்பரான கெவுமா என அறியப்படும் கெலும் இந்திக்கவிடம் மேற்கொள்ளப் பட்ட விசாரணைகளின் அடிப்ப டையில் இந்தத் தகவல் கிடைத் துள்ளதாக பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி டுபாயில் இடம்பெற்ற பிறந்தநாள் நிகழ்வு ஒன்றில் வைத்து, பாதாள உலகக் குழுத் தலைவனான மாகந்துரே மதூஷ், பாடகர் அமல் பெரேரா, நடிகர் ரயன் உள்ளிட்ட 31 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 15 பேர் இதுவரையில் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டுள்ளனர்.

அவர்களுள், நடிகர் ரயன் வென் நோயன், முன்னாள் சிறைச் சாலை கட்டுப்பாட்டாளர் லலித் குமார, பாதாள உலகக் குழுத் தலைவன் கஞ்சிபான இம்ரான், பாதாள உலகக் குழு உறுப்பின ரான ரொடும்ப அமில் என அறி யப்படும் அமில சம்பத் மற்றும் ஜங்க எனப்படும் அனுஷ்க கௌஷால் ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (இ-7)

# தலைக்கு எண்ணெய் வைக்கும் தேசிய நிகழ்வு நாளை களுத்துறையில்

(களுத்துறை)

சித்திரை புத்தாண்டில் பௌத்த சம்பிரதாயங்களுக்கு அமைவாக தலைக்கு எண்ணெய் வைக்கும் தேசிய நிகழ்வு நாளை காலை 7.40 மணிக்கு இடம்பெறும்.

இந்தத் தேசிய நிகழ்வு களுத் துறை ஸ்ரீ சுபோதிராஜ ராம மஹா விஹாரை வளாகத்தில் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெறும். பிரத மர் ரணில் விக்கிரமசிங்கவும் இந் நிகழ்வில் கலந்து கொள்வார்.

கிழக்கு நோக்கிய பார்வை யுடன் பச்சை நிற வஸ்து அல்லது அதற்கு சமமான ஆடை அணி ந்து தலைக்கு எண்ணெய் வைக் கும் நிகழ்வில் கலந்து கொள்ள லாம்.

இதேவேளை பௌத்த சம்பிர தாயங்களுக்கு அமைவாக நாளை மறுதினம் 18 ஆம் திகதி காலை யில் சுபவேளையான அதிகாலை 4.52 மணிக்கு புத்தாண்டில் தொழிலுக்குச் செல்லும் நேரம் உதயமாகிறது.

தொழிலுக்குச் செல்வோர் பச்சை நிறம் அல்லது அது சார்ந்த வர்ணத்தைக் கொண்ட ஆடை அணிந்து கிழக்கு நோக்கிய பார் வையுடன் செல்லலாம் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச காணிகளின் முகாமைத்துவம் சார்பான சட்டங்களும் அவை செயற்படும் படிமுறைமைகளும் பகுதி-II

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் எல்லை நிர்ணய ஆணைக்குழு
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

02



அரச காணியை பாதுகாப்பதற்கு அரச காணிகளை அடையாளங் காண்பது எவ்வாறு? என்பது முக்கியமான ஒரு அம்சமாகும். காணி உரிமை நிர்ணயம் செய்யப்பட்ட பிரதேசங்களிலிருந்து இறுதிக் கிராம வரைபடங்கள், இறுதி குடியேற்றத்திட்ட வரைபடங்கள் அல்லது கிராம வரைபடங்கள் அமைக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து அரச காணிகளை அடையாளம் காணுவது இலகுவானது.

> காணி வளத்தை எதிர்கால அபிவிருத்தி தேவைகளுக்கும் பாதுகாப்புத் தேவைகளுக்கும் பேணும் பொறுப்பு பிரதேச செயலாளர்கள் மீது சுமத்தப் பட்டுள்ள விசேட பொறுப்பாகும்.

காணி உரிமை நிர்ணய உத்தியோகத்தர்களால் உரிமை நிர்ணயம் செய்யப்பட்ட அரசாங்கக் காணிகளின் வரைபட இலக்கங்களும் காணித்துண்டு இலக்கமும் உரிமை நிர்ணய உத்தியோகத்தரால் விபரமாக அடையாளம் காணப்பட்டுள்ளதோடு அவை உரிமை நிர்ணய கட்டளையின் கீழ் அரச காணிகளாக வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளன. அதேசமயம் இவ் அரச காணிகளின் பரப்பளவும் அவற்றின் பெயர்களும் உரிமை நிர்ணய கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இக்காணிகளைப் பாதுகாக்கும்போது அவற்றை அளவை செய்து வேறாக பிரித்திருக்கும் காரணத்தைப் பற்றி கவனமாக ஆராய்ந்து பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்க அதிபர்களைச்/பிரதேச செயலாளர்களைச் சாரும். மேலே குறிப்பிட்டவாறு வரைபடங்களாக்கப்பட்ட பிரதேசங்களின் காணிகளைப் பாதுகாக்கும் போது மேற்படி ஒவ்வொரு காணியும் எல்லைக்கற்கள் மூலம் பிரிக்கப்பட்டுள்ள காரணத்தால் அவற்றின் எல்லைகள் பற்றிய ஐயப்பாடு ஏதும் ஏற்படமாட்டாது. (land manual)

அரச காணிகளின் நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக அரசாங்க அதிபரிடம் / பிரதேச செயலாளரிடம் பாரிய அதிகாரங்களும் பொறுப்புகளும் ஒப்படைக்கப் பட்டுள்ளன. இவ் அதிகாரங்களும் பொறுப்புக்களும் அரச காணிகளின் கட்டளைச் சட்டத்தில் தனித்தனியாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது. இவற்றை செயற்படுத்துவதில் நேரடியாக அரசாங்க அதிபருக்கு / பிரதேச செயலாளருக்கு உதவும் உத்தியோகத்தர்களாக காணி உத்தியோகத்தர்கள் முதலிடம் வகிக்கின்றனர். இதற்கு மேலதிகமாக கிராமசேவை உத்தியோகத்தர்களிடமும் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்களிடமும் அரசாங்க அதிபரிடம்/ பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் காணி நிர்வாகத்தின் பாதுகாப்பு தொடர்பான கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (land manual)

6. அத்துமீறி அரச காணிகள் கைப்பற்றப்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள்.

அத்துமீறி ஆட்சி புரிவது அல்லது வசிப்பது எனக் கருதப்படுவது எதுவெனில் சட்டத்திற்குட்பட்டு அரசு மூலம் அளிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் அல்லது வேறு எழுத்து மூலமாக அதிகாரத்துடன் காணியை ஆட்சி புரிவது அல்லது வசிப்பது தவிர்ந்த வேறெந்த விதத்திலும் ஆட்சி புரிவது அல்லது வசிப்பதையும் அரச காணியில் நீதியற்று (சட்டபூர்வமற்று) உட்புகுந்து ஆட்சி புரிவதையும் அல்லது வசிப்பதையும் குறிப்பதாகும்.

> அரச காணிகள் அத்துமீறி கைப்பற்றப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கான அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்வது அரசாங்க அதிபரினதும் / பிரதேச செயலாளரினதும் ஏனைய ஏற்புடைய உத்தியோகத்தர்களினதும் கடமையாகும். சகல கிராமசேவை உத்தியோகத்தர்களும் அத்துமீறிய அரச காணி கைப்பற்றல் சம்பந்தமான பதிவேட்டை பராமரித்தல் வேண்டும்.

எதிர்காலத்தில் அரச காணிகள் அத்துமீறி கைப்பற்றப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கான அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்வது அரசாங்க அதிபரினதும் / பிரதேச செயலாளரினதும் ஏனைய ஏற்புடைய உத்தியோகத்தர்களினதும் இன்றியமையாக் கடமையாகும். சகல கிராம சேவை உத்தியோகத்தர்களும் அத்துமீறிய அரச காணி கைப்பற்றல் சம்பந்தமான பதிவேட்டை பராமரித்தல் வேண்டும்.

7. அத்துமீறியோரை அப்புறப்படுத்துவதற்கும் அரச காணிகளின் ஆட்சியை மீளப் பெறுவதற்குமான சட்டம்.

இச் சட்டம் பற்றி சென்ற கட்டுரையில் எழுதப்பட்டிருந்தது. இக் கட்டுரையில் இது விரிவாக அலசப்படுகிறது. அரச காணிகளில் அத்துமீறிக் குடியேறியவர்களை மிக இலகுவான சட்ட நடவடிக்கைகள் மூலம் காலந்தாழ்த்தாமல் அப்புறப்படுத்தும் நடவடிக்கைக்காக அரச காணிகளின் ஆட்சியை மீளப் பெறுவதற்கான சட்டம் உருவாக்கப் பட்டது. இச் சட்டம் 1979 இன் 7ஆம் இலக்க அரச காணகளின் (ஆட்சியை மீளப் பெறல்) சட்டம் என அழைக்கப்படுகிறது. இச் சட்டம் பலமுறை திருத்தத்திற்குள்ளானது.

அத்துமீறிக் குடியிருப்பவர்கள் இச் சட்டத்தின் கீழ் மூன்று படிவங்களை உபயோகித்து அப்புறப்படுத்தப்படுபவர். இப் படிவங்கள் சட்டத்தின் உப அட்டவணையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன. (land manual).

1.'அ' படிவம் (காணியிலிருந்து அப்புறப் படுத்தும் அறிவித்தல்)

2.'ஆ'படிவம் (வெளியேற்றுவதற்கான கோரிக்கை)

3.'இ' படிவம் (சத்தியப்பிரமாணம்)

இப் படிவங்களைத் தயாரிக்கும்போது. சட்டத்தில் கூறியவாறு சரியான முறையில் படிவத்தை நிரப்புவது மிக முக்கியமான தொன்றாகும். தகுதி வாய்ந்த அதிகாரியினால் 'இ' படிவம் மூலம் நீதிமன்றத்திற்கு சத்தியப்பிரமாணம் ஒன்று செய்யப்படுவதால் சகல சந்தர்ப்பங்களிலும் தகுதி வாய்ந்த அதிகாரி திருப்தி அடையும் வகையில் கொடுக்கப்படும் விபரங்கள் பூரணமாக இருத்தல் வேண்டும். படிவம் நிரப்பும்போது தவறுகள் இருப்பின் அதனைக் காரணமாகக் காட்டி வழக்குகள் தள்ளுபடியாகலாம்.

இச் சட்டத்தின் தகுதி வாய்ந்த அதிகாரி என்ற வரைவிலக்கணத்திற்குள் காணி நிர்வாகத்திற்குப் பொறுப்பான வேறு பல நிறுவனங்களின் தலைவர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். அரசாங்க அதிபர்/ மேலதிக அரசாங்க அதிபர்/ பிரதேச செயலாளர் அல்லது அரசாங்க அதிபர்/ பிரதேச செயலாளரால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஆகியோர் தகுதி வாய்ந்த அதிகாரியாக செயற்படுவது பிரதேச செயலாளரின் பொறுப்பிலுள்ள அரச காணிகள் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு மாத்திரமேயாகும். (land manual).

இச் சட்டத்தின் கீழ் ஓர் அத்துமீறியவரை வெளியேற்றுமாறும் இக் காணியின் உரிமையை தகுதி வாய்ந்த அதிகாரிக்கு மீள ஒப்படைக்குமாறும் நீதிமன்ற நீதவான் பிஸ்கால் உத்தியோகத்தருக்கு அல்லது விசேட உத்தியோகத்தர் ஒருவருக்கு உரிய கடமையைச் செய்வதற்கு அவசியமான ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். (land manual).

அத்துமீறியவர்களை வெளியேற்றுவதற்கு கோரிக்கை விடுவிக்கப்பட்டு நீதிமன்றத்தின் சட்ட நடவடிக்கைகளில் பங்குபற்றும் உத்தியோகத்தர்கள் இச் சட்டத்தை நன்கு கற்றறிந்து அதுபற்றி உரிய விளக்கத்துடன் நீதிமன்றம் முன் தோற்ற வேண்டும். (land manual).

8. அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் அரச காணிகளை வழங்குவதற்கு தத்துவம் பெற்றவர்கள்.

> அரச காணிகளை பல விதத்தில் கையுதிர்க்கும் தத்துவங்கள் ஜனாதிபதியிடம் அரச காணி கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் வழங்கப்பட்டுள்ளன. இத் தத்துவங்களில் பெரும்பாலானவை தற்பொழுது அமைச்சரிடமும் காணி ஆணையாளரிடமும் வேறு அலுவலர்கள் சிலரிடமும் ஜனாதிபதியினால் கையளிக்கப்பட்டுள்ளன.

அரச காணிகளை பல விதத்தில் கையுதிர்க்கும் தத்துவங்கள் ஜனாதிபதியிடம் அரச காணி கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் வழங்கப்பட்டுள்ளன. இத் தத்துவங்களில் பெரும்பாலானவை தற்பொழுது அமைச்சரிடமும் காணி ஆணையாளரிடமும் வேறு அலுவலர்கள் சிலரிடமும் ஜனாதிபதியினால் கையளிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு கையளிக்கப்பட்ட சட்டத்தின் கீழுள்ள ஒழுங்கு விதிகளும் கட்டளைகளும் கீழே தரப்பட்டுள்ளன. (land manual).

(1)1949 செப்டெம்பர் 2 ஆம் திகதியின் 10013 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1949 ஓகஸ்ட் 2 ஆம் திகதியிடப்பட்ட கட்டளை.

(2)1950 ஜூலை 21 ஆம் திகதியின் 10127 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.

(3)1962 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 19 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்.

(4)1965 கார்த்திகை 26 ஆம் திகதி 14569 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.

> தம் பொறுப்பிலுள்ள அரச காணிகளை தனிப்பட்டவருக்கோ, நிறுவனத்திற்கோ வேறு ஒரு திணைக்களத்திற்கோ கையுதிர்க்கும் அல்லது அவற்றில் விளையும் விளைபொருட்களைப் பெற்றுக் கொள்ளும் உரிமை மற்றும் குத்தகைக்கு விடும் தத்துவம் பொதுவாக ஒரு திணைக்களத்தின் தலைவர்களுக்கு இல்லை.

அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் அரச காணிகளை வழங்குவதற்கு தத்துவம் பெற்றவர்கள் யாவர் என்பதை அறிந்து கொள்ளவும். அவர்களின் தத்துவ எல்லையைத் தெரிந்து கொள்ளவும் இக் கட்டளைகளை நுணுக்கமாக வாசித்தல் வேண்டும்.

1979 இன் 7ஆம் இலக்க அரச காணகளின் (ஆட்சியை மீளப் பெறல்) சட்டத்தின் கீழ் தொடரப்படும் வழக்குகளில் தத்துவம் பெற்ற அலுவலர் யாரென்பதைச் சரியாக பெயரிடப்படாத காரணத்தால் பல வழக்குகள் தோல்வியைக் கண்டிருப்பதோடு காணியின் ஆட்சியை மீளப்பெற முடியாமல் போயுள்ளது.

அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சி சபைகளுக்கு தத்துவம் அளிக்கப்பட்டிருப்பது போன்று இக் கட்டளைச் சட்டத்தில் வேறு பிரிவுகளினால் திட்டவட்டமாக தத்துவமளிக்கப்பட்டிருந்தாலன்றி. ஜனாதிபதியான அமைச்சரும் மேலே குறிப்பிட்ட கட்டளையில் இடம் பெற்ற அலுவலர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆளுக்கு இக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அரச காணியைக் கையுதிர்க்கும் தத்துவமில்லை.

பொதுவாக அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் அரச காணிகளை வழங்க தத்துவம் பெற்ற அலுவலர்கள் இவர்களாவர்.

(அ)காணி உரிமை நிர்ணய அலுவலர் - தம் பொறுப்பிலுள்ள முடிக்குரிய காணிகள் சம்பந்தமானவற்றிற்கு (எனினும் இக் காணிகளை அவர் விற்பனை செய்யவோ 05 வருடத்துக்கு மேற்பட்ட காலத்திற்கு குத்தகை வழங்கவோ முடியாது).

(ஆ) அரசாங்க அதிபர்/ பிரதேச செயலாளர்

(இ) புகையிரத பொது முகாமையாளர்

(ஈ)துறைமுக அதிகார சபை

(உ)முப்படைத் தலைவர்கள்

இவ்வாறு அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருப்பினும் அரச காணி கட்டளைச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் பாராளுமன்ற சட்டங்களினால் கூட்டிணைக்கப்பட்ட நியதிச் சட்ட முறை சபைகள், கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள் போன்ற நிறுவனங்கள் தம் பொறுப்பிலுள்ள அரச காணிகளை கையுதிர்ப்பதற்கு அவை தொடர்பான சட்டங்களின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு உதாரணங்களாக மகாவலி அதிகாரசபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, கைத்தொழில் அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள கூட்டுத்தாபனங்கள் போன்ற சில நிறுவனங்களைக் குறிப்பிடலாம்.

(3)தம் பொறுப்பிலுள்ள அரச காணிகளை தனிப்பட்டவருக்கோ, நிறுவனத்திற்கோ திணைக்களத்திற்கோ கையுதிர்க்கும் அல்லது அவற்றில் விளையும் விளைபொருட்களைப் பெற்றுக் கொள்ளும் உரிமை மற்றும் குத்தகைக்கு விடும் தத்துவம் வேறு திணைக்களத் தலைவர்களுக்கு இல்லை. அத்தகைய சந்தர்ப்பங்களில் காணிகளை வழங்க வேண்டியவர் அரசாங்க அதிபர் / பிரதேச செயலாளர் மாத்திரமே. இது தொடர்பான நடவடிக்கைகளுக்கு திணைக்களத் தலைவர் அரசாங்க அதிபரை/பிரதேச செயலாளரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

(4)தம் பொறுப்பிலுள்ள அரச காணிகளை ஐந்து வருடத்திற்கு வேறு ஆட்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள தத்துவங்களைப் பெற்ற அலுவலர்கள் அத் தத்துவங்களுக்கு வெளியே காணிகளை வழங்கக் கருதுமிடத்து அவர்கள் அரசாங்க அதிபரைத் / பிரதேச செயலாளரைத் தொடர்பு கொள்ள வேண்டும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

222

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)



சேர். பொன். இராமநாதன்

இதன்மூலம் அயராது ஐந்து தசாப்தங்கள் தேசத்துக்குச் சேவை யாற்றுவதற்கான ஆரம்பத்தை இராமநாதனுக்கு நாவலர் வழங்கியிருந்தார். அரசியல் அரங்கில் தனது பணிவான ஆரம் பத்தை உணர்ந்திருந்த இராம நாதன் முன்மாதிரியாக விள ங்கிய பெருமைமிகு குடும்பம் ஒன்றின் வம்சத்திற்கு இருக்கக் கூடிய நன்றி மறவாப் பண் பின் காரணமாக 1884 பெப்ர வரி 11 ஆம் திகதி சட்ட நிரு பண சபையில் நாவலரை இந் துக்களின் சீர்திருத்த நாயகன் என விபரித்தார்.

இங்கு எமது நோக்கம் என்ன வெனில், முதலாவதாக நாவல ரும் மக்களும் என்ன காரணங்க ளுக்காக இராமநாதனை ஆதரி த்தனர் என்பதையும் இரண்டா வதாக தமிழ்மக்கள் மீது இந்த நிகழ்வுகள் ஏற்படுத்திய தாக் கத்தையும் மூன்றாவதாக இந் நிகழ்வுகளில் மக்களின் வெகு சன ரீதியான பங்குபற்றல், அவர் களது அரசியல் எதிர்காலத்தில் என்ன விளைவுகளை ஏற்படுத்தி யது என்பவற்றை அடையா ளம் காண்பதுமாகும்.

இவற்றில் முதலாவது விடயத்தைப் பொறுத்தவரை, பிறிற்றோதான் அப்பதவிக்கு மிகப் பொருத்தமான வேட்பா ளர் என்பதனை நாவலர் தெளி வாகத் தெரிவித்தார். 1876-1877 இல் யாழ்ப்பாணத்தில் நிலவிய வரட்சி, கொலரா கொள்ளை நோய் ஆகியவற்றின் போது பிறி ற்றோ நாவலருடன் நெருக்கமா கப் பணிபுரிந்த போது அவரு டைய தனித்துவமான தகைமை களும் அனுபவமும் அவரது சமூ கப் பணிகளும் ஆர்வங்களும் வெளிப்படையாகத் தெரிந்திரு ந்தன.

தமிழரும் சிங்களவரும் இலங்கையின் பெரும்பான்மைச் சமூகங்கள் என்பதுடன் அவர் களது சமய, கலாசார, பாரம்ப ரிய விழுமியங்களை சைவ, பௌத்த பிரதிநிதிகளினால் மட்டுமே பாதுகாக்கப்படும் என நாவலர் நம்பியதனாலேதான் கிறிஸ்தவரான பிறிற்றோவின் வேட்பு மனுவை நாவலர் புறந்தள்ளினார்.

எனவே நாவலர் தனது இந்த நம்பிக்கையை முன்னிறு த்தி அதைத் தனது பேச்சுக்களி லும் கூற்றுக்களிலும் தெளிவா கக் குறிப்பிட்டார். இராம நாதன் பிறிற்றோவை விடப் பலவீனமான வேட்பாளராக இருந்தபோதிலும் முத்துக் குமாரசுவாமியின் தனித்துவ மான புகழைப் பிரயோகித்து இராமநாதனுடைய குறையை நிரப்பி தமிழ் மக்களினதும் தேசாதிபதியினதும் மனங்களில் இராமநாதனையிட்டு உயர்வான மதிப்பு ஏற்படும் வண்ணம் நாவலர் முயன்றார்.

நாவலரின் பார்வைக் கோண த்தைப் பார்க்கையில் தமிழ்ச் சமூகத்தின் பெரும்பான்மை யினர் சைவர்களாக இருந்தமை யால் அவர்களின் பிரதிநிதி அவர்களின் விழுமியங்களுட னும் ஆர்வங்களுடனும் பரீச்சய மிக்க சைவனாக இருத்தல் வேண் டும் என்ற அவரது நோக்கு நியாயமானதாகும்.

சட்ட நிருபணசபையில் ஏற்கனவே ஐரோப்பிய, பறங்கிய சமூகங்களைச் சேர்ந்த கிறிஸ்த வர்கள் இருந்தமையால் கிறிஸ் தவ சமயத்தின் நலன்களைக் கவனிக்க அவர்கள் இருந்தனர் எனவும் வாதிடக்கூடியதாக இருந்தது.

இதே அடிப்படையில் சட்ட நிருபண சபையில் சிங்கள இன த்தினரின் நலன்களைப் பாது காக்க ஏற்கனவே பௌத்த பிர திநிதி ஒருவர் இருந்தார்.

பிறிற்றோ தெரிவு செய்ய ப்படும் பட்சத்தில் சைவ சமூ கத்தைப் பிரதிநிதித்துவப்படுத் தும் வகையில் எவரும் இருக்க மாட்டார்கள்.

எனவே ஒரு சைவராகவிரு ந்து சைவப்பாரம்பரியங்களுக் கேற்ப வாழ்ந்த இராமநாதனை நாவலர் ஆதரித்தமை புரிந்து கொள்ளக்கூடியதாகும்.

ஒட்டுமொத்தமாக தமிழ் இந் துச் சமூகத்தின் நலன் கருதுமிட த்து இராமநாதனை ஆதரிப்பதை விட நாவலருக்கு வேறு வழி யிருக்கவில்லை. உண்மையில் இன ரீதியாகப் பிரதிநிதிகளை நியமித்த குடியேற்ற அரசாங்க த்தின் நடைமுறையிலிருந்த நோக்கமும் இதுவேயாகும்.

இதில் சம்பந்தப்பட்ட இன்னுமோர் விடயம் என்ன வெனில் நாட்டினது அரசியல் முறைமையுடன் தமிழர் பரீச் சயப்பட ஆரம்பித்தனர் என்பதா கும். வளர்ந்து வந்த இந்த விழி ப்புணர்வு இலங்கையின் அரசி யல் நிலைமையையிட்டுச் சிந்தி க்கத் தூண்டியதுடன் மேலும் இதனால் அவர்கள் தமது எதிர்கால அரசியல் தேர்வுகளை யும் அந்தஸ்தையும் கற்பனை செய்ய ஆரம்பித்திருந்தனர்.

இதைவிட இந்த வளர் நிலைகள் அவர்களது சமய, கலா சார, பாரம்பரிய, சமூக, அரசி யல் பந்தங்களை மேலும் பலப் படுத்தின. இது அவர்களது எதிர் கால அரசியல் முன்னெடுப்புக் களுக்கு அவர்களைத் தயார் செய்வதற்கான தமிழ்ச் சமூ கத்தின் ஒன்றிணைப்பை உருவா க்கப் பெருமளவு உதவியது.

இராமநாதன் 1879 தொடக் கம் 1892 வரை சட்ட நிருபண சபையில் பிரதிநிதியாக இருந்துள் ளார். அவர் தனது 28 வயதில் அர சியல் வாழ்க்கையைத் தொடங் கியவர். செல்வம் படைத்த கொழும்பு வாழ் தமிழர். இலங்கையில் அரசியல் விழிப் புணர்ச்சி ஏற்பட்ட ஒரு முக்கி யமான காலகட்டத்தில் சட்ட நிருபண சபையில் அங்கம் வகித்தவர்.

சிங்களத் தேசியவாதம் முனைப்புடன் எழுச்சி பெற்ற காலத்தில் பதவி வகித்தவர். சட்ட நிருபண சபையில் தபாலகம், வங்கி, ரயில்வே போன்ற பாரிய பொது வேலைக் கட்டமைப்பு க்கள் வடபிரதேசத்தில் அபி விருத்தி செய்யப்படவேண்டும் எனத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டபோது பதவியில் இருந்தவர்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.(படங்கள்:-ஈச்சமோட்டை செய்தியாளர்)

# மகிந்தவைக் காண மக்கள் படையெடுப்பு

## உணவு வழங்கி உற்சாகப்படுத்தினார்





(தங்காலை)

மகிந்தவின் கோட்டையான தங்காலை பகுதியில் திடீரென மக்கள் ஒன்றுகூடியமையால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தங்காலை கால்ட்ன் வீட்டிற்கு அருகில் பெருமளவு மக்கள் கூடியமையால் பாரிய நெரிசல் ஏற்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக் கூற வந்த மக்கள் கூட்டம் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை வருகை தந்த மக்களுக்கு மகிந்தவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

மகிந்தவைக் காண வந்த அனைவருக்கும் உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-7)

# மீண்டும் சந்தை வாயிலைத் திறக்க வர்த்தகர்கள், மக்கள் கோரிக்கை



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச் சந்தையில் நெடுங்காலம் பாவனையில் காணப்பட்ட சந்தைக்கு தெற்குப் புறமாக உள்ள வாயில் கதவினை மக்கள் பாவனைக்காக மீண்டும் திறந்து விடுமாறு வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது. வருடக்கணக்கில் பாவனையில் காணப்பட்ட குறித்த சந்தை வாயிற் கதவு அண்மையில் சாவகச்சேரி நகரசபையினரால் மூடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-5-30)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1695

Search for people, places and things


### பாண்டி

எப்படி கடனை அடைப்பது என்று யோசிப்பவன் முட்டாள்... எப்படி பொய்கள் சொல்லி கடன் வாங்குவது என்று யோசிப்பவனே இன்றைய திகதியில் அறிவாளி



### சரண்

அம்மா நான்கு நாட்டுக்கோழி முட்டை வாங்கிட்டு வரச் சொன்னாங்க எந்த நாடுன்னு கேட்டதுக்கு இங்க உட்கார வச்சிட்டாங்க



### கிசோர்

நீங்க என்னதான் பிரிட்ஜ்ல வச்ச தண்ணி குடிச்சாலும் இந்த மண் பானை தண்ணில இருக்கிற குளிர்ச்சிக்கும் ருசிக்கும் ஈடாகுமா?



### ஸ்ரீராம்

பணத்துக்காக மனிதன்தான் இதை இழந்துவிட்டான் பறவைகளாவது இதை அனுபவிக்கட்டுமே... மரங்களை வெட்டாதீர்கள்



### ப்ரித்விராஜன்

மனமும் கண்ணாடியைப் போல்தான் உடையும் வரை யாரையும் காயப்படுத்துவதில்லை



### ரவி அகமட்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைக் கைது செய்ய முன்னர் 50 இலட்சம் ரூபா கப்பம் கோரினர்

## கோத்தாவுக்கு எதிராக வழக்குத் தொடுத்த றோய்

(லண்டன்)

என்னைக் கைது செய்வதற்கு முன்னர் எனது வீட்டுக்கு வந்து என்னிடம் 50 இலட்சம் ரூபாய் வரை கப்பம் கோரினர் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது அமெரிக்காவில் வழக்குத் தாக்கல் செய்துள்ள றோய் சமாதானம் என்ற புலம்பெயர் தமிழர் தெரிவித்துள்ளார்.



ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் கோத்தபாய ராஜபக்ஷ மீது வழக்குத் தாக்கல் செய்ததும் என்னைச் சுற்றியிருந்த அனைவரும் இது நடக்காத காரியம் எனத் தூற்றினர்.

நான் கைது செய்யப்பட்டிருந்த சமயம் வெலிக்கடை மகசின் சிறைச்சாலைகளில் உள்ள பெருமளவான தமிழ்க் கைதிகள் இறந்து போனார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஊர்காவற்றுறை பிரதேச சபையால் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித்திட்டம்

உள்ளூராட்சி மன்றங்களால் நான்காண்டுக்கொரு முறை தயாரிக்கப்படுகின்ற மக்களால் மக்களுக்கான அபிவிருத்தித்திட்டங்களை வாக்களிப்பு முறை மூலம் இனங்காணும் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித்திட்டம் (2019-2022) ஆண்டுக்காக ஊர்காவற்றுறை பிரதேச சபையால் தனது ஆளுகைக்குட்பட்ட 8 வட்டாரங்களிலும் சபையின் தவிசாளர் ம.ஜெயகாந்தன் மற்றும் வட்டாரத்திற்கான உறுப்பினர்களின் தலைமையில் கூட்டங்கள் நடத்தி தயாரிக்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக இன்று 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை வட்டாரமாகிய ஜே/49 -ஊர்காவற்றுறை, ஜே/50- பருத்தியடைப்பு, ஜே/51 - கரம்பொன் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த பொதுமக்களுக்கு காலை 8.30 மணிக்கு பருத்தியடைப்பு கதிரேசன் கோவில் பொதுமண்டபத்திலும் பிற்பகல் 2.30 மணிக்கு நாரந்தனை வடக்கு வட்டாரமாகிய ஜே/55 - நாரந்தனை வடக்கு, ஜே/56 - நாரந்தனை வடமேற்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த பொதுமக்களுக்கு தம்பாட்டி அம்மன் கோவிலுக்கு முன்னுள்ள பொதுமண்டபத்திலும் இடம் பெறவுள்ளதுடன் நாளை 17 ஆம் திகதி புதன்கிழமை எழுவைதீவு வட்டாரமாகிய ஜே/39 -எழுவைதீவு கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த பொதுமக்களுக்கு பிற்பகல் 1.30 மணிக்கு எழுவைதீவு பொதுமண்டபத்திலும் இடம்பெறும். மேலும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை புளியங்கூடல் வட்டாரமாகிய ஜே/59 -சுருவில், ஜே/60- புளியங்கூடல் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த பொதுமக்களுக்கு பிற்பகல் 3.30 மணிக்கு புளியங்கூடல்-நெசவு நிலையத்திலும் மக்கள் பங்கேற்புத்திட்டம் தயாரிப்பதற்கான கலந்துரையாடல் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

எனவே குறித்த வட்டாரப் பிரிவுக்குட்பட்ட மக்கள் அனைவரும் பங்குபற்றி தமது அபிவிருத்தி தேவைகளுக்கு அதிகளவான வாக்குகளைச் செலுத்தி தமது தேவைகளை முன்னுரிமைப்படுத்துமாறும் திட்டத்தை சிறப்புற நிறைவேற்ற பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் தவிசாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-7)

# விமானத்தில் களைகட்டிய கொண்டாட்டங்கள் தமிழர்களுக்கு கிடைத்த இன்ப அதிர்ச்சி






(கொழும்பு)

இலங்கையில் தமிழ், சிங்கள புத்தாண்டு கொண்டாட்டங்கள் களை கட்டியுள்ளன.

இந்நிலையில் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குப் பயணித்த விமானத்திலும் புத்தாண்டு கொண்டாட்டங்கள் களை கட்டியிருந்தன.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் பல்வேறு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதில் தமிழ்ப் பயணிகள் உட்பட அனைவருக்கும் அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டதுடன், கலாசார உணவுகளும் வழங்கப்பட்டன.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நடைபெற்ற புத்தாண்டு கொண்டாட்டங்களில் பெருமளவு வெளிநாட்டுப் பயணிகள் கலந்து கொண்டனர்.

விமானம் பறந்து கொண்டிருக்கும் போதும் ஸ்ரீலங்கன் விமான சேவை ஊழியர்களால் புத்தாண்டு கொண்டாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பங்கேற்ற வெளிநாட்டுப் பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளதுடன், இலங்கை மக்களுக்கு தமது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

பெருமளவு சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் ஈர்க்கும் வகையில் சமகால அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மதுபோதையில் தேரரை தாக்கிய சகோதரர்கள்

(ராஜாங்கனை)

மதுபோதையில் விகாரைக்குள் நுழைந்து தேரர் ஒருவரைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். ராஜாங்கனை - சுதர்ஸனாராம விகாரையைச் சேர்ந்த தேரரே [illegible] இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலை மேற்கொண்ட இருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் என்பதுடன், மதுபோதையில் விகாரைக்குள் நுழைய வேண்டாம் என தேரர் எச்சரித்துள்ளதால் கோபமடைந்து இருவரும் தேரரைத் தாக்கியுள்ளனர். இதனைத் தடுக்க முயன்ற [illegible] ஒரு நபரையும் அவர்கள் தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# செய்தித்துளிகள்

## ஜூன் முதலாம் திகதி முதல் வர்ண குறியீட்டு முறை அமுல்

திட உணவு மற்றும் அரை திட உணவிற்குமான வர்ண குறியீட்டு முறை ஜூன் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இது குறித்த வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படவுள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக பிஸ்கட் மற்றும் இனிப்பு உணவு உற்பத்தியாளர்கள் சங்கங்களின் ஆதரவும் கிடைத்துள்ளது. தற்போது மென் பானங்களில் அடங்கியுள்ள சீனியின் அளவிற்கமைய வர்ண குறியீடுகள் அமுல் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 48 மரங்கள் பராமரிப்பு

யாழ்.மருத்துவ பீடத்தைச் சூழவுள்ள பகுதிகளில் நிழல்தரும் மரங்கள் 48 நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. நல்லூர் பிரதேச சபையால் தனது ஆளுகைக்குட்பட்ட பகுதியில் இடம்பெறும் இத்திட்டத்தில் புங்கை, சமண்டலை, மருது, வேம்பு, வாகை போன்ற மரங்கள் நடப்பட்டு கூடுகள் அடைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. (இ-10-272)

## விபத்தில் இளைஞன் உயிரிழப்பு! மூவர் வைத்தியசாலையில் அனுமதி

மொனராகலை - வெதிகும்புர பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் 27 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளான். விபத்தில் காயமடைந்த மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## பெறுமதிவாய்ந்த மாணிக்கக்கல்லை கொள்ளையிட்ட நால்வர் சிக்கினர்

பெறுமதிவாய்ந்த மாணிக்கக்கல்லை கொள்ளையிட்ட நான்கு சந்தேகநபர்களை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பிலுள்ள ஹோட்டலொன்றிலிருந்த குறித்த மாணிக்கக் கல்லை கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய நால்வரையே பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இரண்டரைக் கோடி ரூபாவிற்கும் அதிக பெறுமதியான மாணிக்கக் கல்லை கொள்ளையிட்ட சந்தேகத்தின் பேரிலேயே குறித்த நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார் மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 130 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 90 | 160 |
| தக்காளி | 80 | 100 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 80 |
| கோவா | 80 | 80 | 100 |
| கரட் | 120 | 70 | 200 |
| பூசணி | 50 | 30 | 40 |
| புடோல் | 120 | 70 | 80 |
| வாழைக்காய் | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 70 | 120 |
| பெரிய வெங்காயம் | 90 | 65 | 100 |
| பாகற்காய் | 180 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 40 | 100 |
| பயற்றங்காய் | 160 | 80 | 80 |
| லீக்ஸ் | 100 | 70 | 200 |
| பீற்றூட் | 80 | 40 | 120 |
| கறிமிளகாய் | — | 80 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 400 |
| போஞ்சி | — | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 30 | — |
| கீரை - 1பிடி | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 180 | 170 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 150 | 110 | 120 |
| வெங்காயப்பூ | — | 250 | — |
| முள்ளங்கி | 100 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 |
| வல்லாரை | 60 | 20 | 20 |
| ஈரப்பலா | — | 110 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செல்லாத காசுகள்



நாணயங்களைச் சேகரிப்பதில் மணிவண்ணனுக்கு மிகுந்த ஆர்வம். வெளிநாட்டில் இருந்து யார் வந்தாலும் அவர்களைப் போய் சந்திப்பான். புன்னகை மாறா முகத்துடன் அவர்களுடன் பேசுவான். அவர்களில் சிலரை நண்பராக்கிக் கொள்வான். அவரும் நாணயம் சேகரிப்பவராய் இருந்தால் தன்னிடம் உள்ள பழங்கால நாணயங்களை அவரிடம் காட்டுவான். தன்னிடம் உள்ள மிகுதியான நாணயங்களை அவருக்குக் கொடுப்பான்.

மணிவண்ணன் முதியவர்களைக் கண்டால் மரியாதையுடன் பேசுவான். அவர்களுக்கு உதவி தேவையானால் தன்னால் முடிந்ததைச் செய்வான். பழங்கால நாணயங்களைப் பற்றி அவர்களிடம் பேசுவான். தற்போது புழக்கத்தில் இல்லாத, ஆனால் எளிதில் கிடைக்கிற நாணயத்தை அவர்கள் வழங்கினாலும் நன்றியுடன் பெற்றுக் கொள்வான்.

நாணயம் சேகரிக்கும் வெளியூர்வாசிகளுடன் அவன் அஞ்சல் தொடர்பு கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந். தான். அவனிடமிருந்த நல்ல பண்புகளாலும் அயராத முயற்சியாலும் பழங்கால நாணயங்கள் பல அவனிடம் சேர்ந்தன. மிகமிக அரிதான ஓரிரு நாணயங்களும் அவன்வசம் இருந்தன! ஒரு சில நாணயங்களில் எழுத்து, குறி, எண் எதுவும் இருக்காது. அவற்றையும் அவன் பாதுகாத்து வைத்தான். புளி, சாம்பல், திருநீறு போன்ற பொருட்களைப் பயன்படுத்தி பல நாட்கள் விளக்கியும், துலக்கியும் துப்புரவாக்கினான்.

ஓரிரு குறிகள் தெரியும் வரை முயற்சி செய்து இறுதியில் வெற்றியும் பெற்றான். உறுதியான, சிறிய, பிளாஸ்ரிக் பைகளைத் தயார் செய்தான். ஒவ்வொரு பையிலும் ஒரு நாணயத்தைப் போட்டு, வாய்ப்புறத்தைத் தீயினால் சுட்டு மூடினான். பின்னர் அவற்றை தடிமனான அட்டையில் ஒட்டி வைத்தான். ஒவ்வொரு நாணயத்தின் அருகிலும் அதுபற்றி அவன் அறிந்த செய்திகளை அழகாய் எழுதி வைத்தான்.

அரிதான, பழங்கால நாணயமானால், அது எங்கே, எப்போது, எப்படிக் கிடைத்தது என்ற குறிப்புகளையும் வண்ணமையினால் எழுதி வைத்தான். ஒரு சமயம் தொல்பொருள் துறையினால், மாவட்டத் தலைநகரில் ஒரு கண்காட்சி நடத்தப்பட்டது. மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் சேர்த்து ஓர் அரங்கம் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த மாவட்டம் முழுவதிலும் இருந்து ஐந்து பாடசாலைகள் மட்டுமே அதில் கலந்து கொண்டன.

மணிவண்ணனைப் பாடசாலையின் சார்பாக கண்காட்சியில் கலந்து கொள்ளவேண்டும் என்று தலைமை ஆசிரியர் கேட்டுக் கொண்டார். பாடசாலையிலிருந்த சில பொருட்களையும் கொடுத்து உதவினார். நான்குபாடசாலைகள் ஒரு சில படங்களை மட்டும் தொங்கவிட்டன. அவ்வரங்கத்தில் இருந்த மீதி இடத்தைத் தடுத்து அவன் நான்கு அறைகளை அமைத்தான். ஒவ்வொரு அறையிலும் ஒரு காட்சியை ஏற்பாடு செய்திருந்தான்.

முதல் அறையில், நாணயம் ஒட்டிவைக்கப்பட்டிருந்த பெரிய பெரிய அட்டைகளை, சுவர்களில் வரிசைப்படுத்தி அழகாய் அமைத்தான். மக்கள் இவற்றை விரும்பிப் பார்த்தனர். அதில் எழுதப் பெற்ற குறிப்புகளை ஆர்வமுடன் வாசித்தறிந்தனர். இரண்டாம் அறை ஒரு ஒப்பாய்வுபோல் அமைந்தது. நாணயங்களின் வகைகளைப் பிரித்துக் காட்டி இருந்தான். உலோக வகை நாணயங்கள், தோல் மற்றும் காகித வகை பற்றி விரிவான செய்திகளை விளக்கி இருந்தான். 'முகம்மது பின் துக்ளக்' என்ற மன்னரின் நாணய மாற்றுத் திட்டத்தைப் படங்களுடன் கதை போல் விபரித்திருந்தான்.

நாசிக் நாணயத் தொழிற்சாலை மற்றும் காகித நாணயம் தயாராகும் இடங்கள் பற்றி விரிவாய் எழுதிய அட்டைகளைத் தொங்கவிட்டிருந்தான். மக்கள் இந்தச் செய்திகளைப் பொறுமையாய் வாசித்தனர். மூன்றாம் அறையில் கிரேக்கர், ரோமானியர், குப்தர், சோழர், மற்றும் பாண்டிய மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களின் பிரதிகள் வைக்கப்பட்டிருந்தன. பாடசாலைத் தலைமை ஆசிரியர் வழங்கிய பொருட்களும் சீராய் அடுக்கப்பட்டிருந்தன. மூன்று அறைகளையும் மூன்று மாணவர்களின் பொறுப்பில் ஒப்படைத்தான்.

நான்காவது அறையை மணிவண்ணன் தன்து பொறுப்பில் வைத்துக் கொண்டான். ஒவ்வொரு முறையும் அவனது அறையில் ஒரு கூட்டம் நின்றது. சிலவேளைகளில் வரிசையாக மக்கள் காத்து நின்றனர். அந்தச் சந்தர்ப்பங்களில் பத்து பேரை மட்டும் உள்ளே அனுமதித்தான். அவனது பிரிவுக்கு 'செப்படி வித்தை' என பெயர் எழுதப் பெற்றிருந்தது. ஒரு சிறிய மேசையின் மேல் சில தாள்கள் விரிக்கப்பட்டிருந்தன. அதன்மீது சில நாணயங்கள் பரவலாய் வைக்கப்பட்டிருந்தன. அவை ஒரு துணியால் மூடப்பெற்றிருந்தன.

மணிவண்ணன் கேட்டுக் கொண்டபடி ஒரு பார்வையாளர் மூடப்பட்ட துணியினுள் கையை நுழைத்து ஒரு நாணயத்தை கையினுள் அழுத்தி மூடியபடி எடுத்தார். கையைக் கண் அருகில் கொண்டு சென்று விரித்தார். அந்நாணயத்திலுள்ள ஆண்டைப் பார்த்துவிட்டு அதை மீண்டும் அழுத்தி மூடியபடி துணியினுள் வைத்தார். இப்போது மணிவண்ணன் தனது கையை துணியினுள் நுழைத்து ஒரு நாணயத்தை வெளியே எடுத்தான். அதை அவரிடம் காட்டி, "ஐயா, நீங்கள் எடுத்த நாணயம் இதுதானா?" என்று கேட்டான்.

அவர் மிகவும் வியப்படைந்தார்! ஏனென்றால் அந்த நாணயத்தில் 1937 என்ற ஆண்டு தெளிவாய்த் தெரிந்தது. ஒவ்வொரு நாள் மாலையிலும் இதைப் பார்ப்பதற்குப் பெருங்கூட்டம் கூடியது. கண்காட்சி நிறைவு நாளின்போது மணிவண்ணன் பயிலும் பாடசாலைக்கு முதல் பரிசும் பாராட்டும் கிடைத்தது. அவன் அந்தப் பரிசை வாங்கி பாடசாலைத் தலைமை ஆசிரியரிடம் வழங்கியபோது மாணவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

மணிவண்ணனுக்கு நற்சான்றிதழும், 'மாநில நாணயம் சேகரிப்போர் குழு'வில் உறுப்பினர் பதவியும் வழங்கப்பட்டன. அவனுக்கு உதவியாகச் செயற்பட்ட மூன்று மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவர்கள் விரும்பிக் கேட்டபோது 'செப்படி வித்தை' இரகசியத்தை அவன் விளக்கிக் கூறினான்.

நாட்டின் விடுதலைக்கு முன்னர் வெவ்வேறு ஆண்டுகளில் வெளியிடப்பட்ட ஆறு செம்பு நாணயங்களைத் தேடி எடுத்தேன்.

அவை ஒரேவடிவம் உடைய நாணயங்கள். செம்பு(தாமிரம்) வெப்பத்தை எளிதில் ஈர்த்துக் கொள்ளும் பண்புடையது. எனவே, பார்வையாளரின் கையிலுள்ள வெப்பத்தை ஈர்த்துக் கொண்ட நாணயம் மட்டும் வெதுவெதுப்பாய் இருக்கும் வெப்ப நிலையில் அது வேறுபட்டுத் தெரியும்.

எனவே அதைத் தேடி எடுத்துக் காட்டி விடுவேன் என்றான். மாணவர்கள் மகிழ்ந்தனர்.

'செல்லாத காசு' என்று நாம் தூக்கி எறியும் நாணயங்களைச் சேகரித்த மணிவண்ணன், செயற்கரிய செயலைச் செய்தான் என மாணவர் உலகம் அவனைப் பாராட்டியது.

## அறிந்து கொள்வோம்

- ஒரு குதிரையையே அதிர்ச்சியடைய வைக்கும் அளவு மின்சாரத்தை எலக்ட்ரிக் ஈல்கள் உருவாக்குகின்றன.
- ஒட்டகத்தைக் காட்டிலும் சில எலிகளால் அதிக நாட்கள் நீரின்றி வாழ முடியும்.
- கிளியின் அறிவு 5 வயது குழந்தைக்கு ஒப்பானது!
- காகங்கள் தங்களை தொந்தரவு செய்யும் மனித முகங்களை நினைவு வைத்துக் கொள்ளும்!
- மேன்டிஸ் பூச்சியினால் அதன் தலையை அனைத்துப் பக்கங்களிலும் திருப்ப முடியும்
- எலிகள் ஓராண்டில் 105 குட்டிகள் வரை இனப்பெருக்கம் செய்யும்.
- காட்டுத்தீ பள்ளமான பகுதிகளை விடவும் விரைவாக மேல்நோக்கிப் பரவும்.

## விடுகதைகளும் விடைகளும்

- ஓவென்று உயர்ந்த மலை, நடுவே உடன் பிறப்பு இருவர்! ஒருவரை மற்றவர் பார்ப்பதுமில்லை பேசுவதும் இல்லை. அவர்கள் யார்?

**கண், மூக்கு**

- கறுப்பர்கள் மாநாடு போட்ட இடத்தில் கண்ணீர் பிரவாகம். அது என்ன?

**மேகம், மழை**

- காட்டிலே பச்சை கடையிலே கறுப்பு வீட்டிலே சிவப்பு. அது என்ன?


**மரம்-கரி-நெருப்பு**

- கிட்ட இருக்கும் பட்டணம் எட்டித்தான் பார்க்க முடியவில்லை. அது என்ன?

**முதுகு**

- குண்டுச் சட்டியில் கெண்டை மீன். அது என்ன?

**நாக்கு**



**அம்மா :** எதுக்குடா, குளிக்கும்போது முதல் செம்புத் தண்ணீரை கீழே ஊத்தறே?

**மகன்:** முதல்செம்பு தண்ணீரை ஊத்தும் போதுதான் ரொம்பக் குளிரும்னு நீங்க தானே மம்மி சொல்வீங்க... அதான் கீழே ஊத்தறேன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட
கொஞ்ச நேரம்தான் வாழ்க்கை.

- யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## போர்க்குற்றக் கொடுமை தென்பகுதியில் எதிரொலிக்கும்

இந்தப் பிரபஞ்சத்தின் தோற்றமும் முடிவும் கணக்கிட்டுக் கூறுவதற்குரியதன்று.

இப்பூமியில் வாழுகின்ற ஜீவராசிகளின் ஆயுட்காலம் மிகவும் சொற்பமானது.

அதிலும் சொற்பமான ஆயுட்காலத்தைக் கொண்டிருக்கக்கூடிய மனிதன் தன் ஆயுட் காலத்துக்குள் எல்லாவற்றையும் முடித்துவிட வேண்டும் என்று நினைக்கின்றான்.

ஆனால் இயற்கையின் படைப்பில் மனிதன் தான் நினைத்ததை செய்துவிட முடிவதில்லை. அவ்வாறு செய்வதற்கு அவனது ஆயுட்கால மும் போதாது என்பதுடன் சக மனிதர்களின் மனநிலையும் ஒத்ததன்மையைக் கொண்ட தன்று.

இதனால், என் காலத்துக்குள் செய்து முடிக்க முடியவில்லையே என்ற கவலை மனி தர்களை வருத்தவே செய்கிறது.

ஆனால் நடக்க வேண்டியது எதுவோ அது நடந்தே தீரும். இங்கு நடக்க வேண்டியது நடக்க வேண்டிய காலத்திலும் நடந்தாகும்.

இதுவே உண்மையும் இந்தப் பிரபஞ்சத்தின் இரகசியமுமாகும். ஆக, நடக்க வேண்டிய காலத்துக்கும் நம் ஆயுட்காலத்துக்கும் இடைப் பட்ட பகுதிதான் சிக்கல், பிரச்சினை, இன்பம், துன்பம் என அனைத்துமாகும்.

ஆம், சிவபூமி என்று போற்றப்பட்ட இந்த நாட்டில் பிரித்தானியக் குடியேற்றவாதம் ஏற் பட்டபோது சைவ சமய மக்கள் பெருங் கஷ்டங் களை அனுபவித்தனர்.

வாழையிலையில் சாப்பிடுவதைக் கூட மிகப் பெரும் மோசமான செயலாக அந்நியர் கள் கருதினர். இதனால் அப்போது வாழ்ந்த சைவ மக்கள் மிகப் பெரும் வேதனைப்பட்டது டன் எங்கள் சைவ சமயத்துக்கு ஏற்பட்ட இந் தப் பேரிடி நீங்காதா என்று ஏங்கினர்.

ஆனாலும் அவ்வாறு ஏங்கி அழுது மனம் வருந்திய அந்த மக்களின் ஆயுட்காலத்துக் குள் குடியேற்றவாதம் முடிவுக்கு வரவில்லை.

மாறாக 1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்த பிற்பாடுதான் நிலைமை மாற்றமடை கிறது.

இந்த மாற்றம் இலங்கையில் சைவ அனுட் டானங்களையும் சைவ மரபுகளையும் பேணக் கூடிய - பின்பற்றக்கூடியதான ஒரு சூழமைவு மீள ஏற்படுகிறது.

இதற்குப் பிற்பாடு ஈழத் தமிழ் மக்கள் பிரித் தானியா உட்பட மேற்குலக நாடுகளுக்குச் செல்கின்றனர். அவ்வாறு சென்றவர்கள் அங்கு சைவக் கோயில்களைக் கட்டுகின்றனர்.

சில கிறிஸ்தவ தேவாலயங்களைக் குத் தகைக்கு எடுத்து அவற்றை சிவாலயங்க ளாக மாற்றுகின்றனர்.

இப்படியொரு நிலைமை வரும் என்று அன் றைய குடியேற்றவாதிகளும் நினைத்திருக்க மாட்டார்கள். எம் சைவ மக்களும் கற்பனை செய்திருக்க மாட்டார்கள். எவ்வளவோ ஆண்டு கள் கடந்த பிற்பாடு பிரித்தானிய வீதியில் தேரோட்டமும் ஆலய மண்டபத்திலிருந்து வாழை யிலையில் உணவு உண்ணவும் சைவ அனுட் டானத்துடன் நம் சைவத் தமிழ் மக்கள் இலண் டன் வீதியில் வலம் வரவும் முடிகிறது எனும் போது, அழிப்புகளையும் அடக்குமுறைகளை யும் இயற்கை ஒருபோதும் அங்கீகரிப்பதில்லை என்பது புரிகிறது.

இந்த அடிப்படையில் இலங்கையின் ஆட்சி என்பது என்றோ ஒரு காலத்தில் மீண்டும் தமிழனின் கையில் இருக்கும் இது சத்தியம்.

இதன் அறிகுறியாக இப்போது போர்க்குற் றம் பற்றி தென்பகுதி பேசத் தலைப்பட்டுள்ளது. போர்க்குற்றவாளிகள் என்று தென்பகுதியாரின் சுட்டுவிரல்கள் நீளத் தொடங்கியுள்ளன.

# 2020ஆம் ஆண்டு வரை ஜனாதிபதி பதவியை நீடிப்பதற்கு மைத்திரிக்கு கடுமையான எதிர்ப்பு

2020ஆம் ஆண்டு வரை பதவிக் காலத்தை நீடிப்பதற்கான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முயற்சிக்கு பொதுஜன பெர முன மற்றும் மக்கள் விடு தலை முன்னணி ஆகிய இரு கட்சிகளும் கடுமை யான எதிர்ப்பை வெளியிட் டுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2020ஆம் ஆண்டு வரை தனது பதவிக்கான காலவரையறை நீடிப்பதற் கும் அதன்மூலம் ஜனாதி பதித் தேர்தலை தள்ளிபோடு வதற்குமான முயற்சியை தாம் எதிர்ப்பதாக ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த நடவடிக் கையை தடுத்து நிறுத்த நாடு முழுவதும் இல்லையென் றால் சர்வதேச அளவிலும் அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் இல்லாவிடின் உயர் நீதிமன்றத்திற்கு சென்று தீர்வினை பெற்றுக் கொள்ளுவோம் என ஜி.எல். பீரிஸ் கூறினார்.

அத்தோடு ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் தயாசிறி ஜய சேகர, ஜனாதிபதி சிறிசேன, 21ஜூன் 2020ஆம் ஆண்டு வரை தனது பதவியை நீடிப் பது தொடர்பாக புதிய பிரதம நீதியரசரின் ஆலோச னையை நாடுவார் என்று கூறியதையும் ஜி.எல்.பீரிஸ் சுட்டிக் காட்டினார்.

இருப்பினும் இது குறித்து ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்த தயாசிறி ஜய சேகர தனது அறிக்கை மூலம் தவறாகக் கூறியதாக தெரி வித்துள்ளார்.

இதேவேளை ஜனாதி பதியால் எடுக்கப்படும் இத் தகைய நடவடிக்கை அநீதி யும் சட்டபூர்வமற்ற முறை யில்தான் இருக்கும் என்றும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

ஐந்து ஆண்டுகளாக நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை கட்டுப் படுத்தும் ஒரு அரசியலமைப் பில் மாற்றத்தை கொண்டு வருவதன் மூலம் அப்பத வியை ரத்து செய்வதாக அறி வித்த ஒரு ஜனாதிபதியின் இந்த கால நீடிப்பு செயற்பாடு மிகவும் நியாயமற்றது என ஜே.வி.பி.யின் பாராளு மன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க தெரிவித்துள் ளார்.

மேலும் 19ஆவது அரசி யலமைப்பு திருத்தமானது ஜனாதிபதி ஒருவரின் பத விக்காலத்தை 6 இல் இரு ந்து 5 ஆண்டுகளாக மட்டுப் படுத்தியதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்த னிடம் வினவியபோது அவர் உச்ச நீதிமன்றம் அதன் தீர்ப்பை அறிவிக்கும்வரை இவ்விடயம் தொடர்பாக பேசுவதற்கு மறுப்பு தெரிவித் துள்ளார்.

இதேவேளை உச்சநீதி மன்றம் தீர்ப்பை வழங்குவ தற்கு முன்பு தான் எந்த கருத்தையும் தெரிவிக்க விரும்பவில்லை என்றும் எப்படியிருந்தாலும் ஜனநாய கம் மீறப்படக்கூடாது என்ற நிலைப்பாட்டில் தாம் இருப்ப தாகவும் எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளார். (ம-3)

# பொலிஸ் அதிகாரிகள் இருவர் உட்பட 10 பேரை தாக்கிய குற்றச்சாட்டில்

## பிரதேச சபை உறுப்பினர் கைது

(கொழும்பு)

கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் கடமை புரி யும் பொலிஸ் அதிகாரிகள் இருவர் உட்பட 10 பேரை தாக்கி காயங்களுக்கு உள் ளாக்கிய சம்பவம் தொடர் பில் கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தளாய், பட்டஹதர பகுதியில் உள்ள குளத்தில் நீராடிக் கொண்டிருந்த சிலரை குடிபோதையில் வந்த சிலர் தாக்கிவிட்டு அங்கிருந்த பெண் ஒரு வரையும் கற்பழித்துள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற் றும் பொலிஸ் பரிசோதகர் கள் இருவரின் குடும்பத்தி னர் மற்றும் உறவினர்களே இவ்வாறு நீராடிக் கொண்டி ருந்ததாக தெரிவிக்கப்படு கின்றது.

பின்னர் அவ்விடத் திடத்திற்கு வருகை தந்த பொலிஸ் பரிசோதகர்கள் இருவரையும் குறித்த நபர் கள் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது காயம டைந்த பொலிஸ் பரிசோதகர் கள் இருவர் உட்பட 10 பேர் கந்தளாய் வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டிருந்த தாக பொலிஸார் தெரிவிக் கின்றனர்.

சம்பவம் தொடர்பில் கந்த ளாய் பிரதேச சபை உறுப் பினர் ஒருவரும் அதே பிர தேசத்தை சேர்ந்த மற்று மொரு நபரும் கைது செய் யப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது. (ம-3)

### கடந்த 14 மாதங்களில்

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில்

## 34 ஆயிரத்து 916 நீரிழிவு நோயாளர்களுக்கு சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கடந்த 2018ஆம் ஆண்டு தொடக் கம் இவ்வருட மாசி மாதம் வரை 34 ஆயிரத்து 916 நீரிழிவு நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள் ளது.

பருத்தித்துறையையும் அதனை அண்டிய பிரதேச மக்களின் சுகாதாரத் தேவையைப் பூர்த்தி செய் யும் இவ் வைத்தியசாலை யில் ஒரு சில குறைபாடுகள் இருப்பதாகப் பொதுமக்கள் குற்றம் சாட்டினாலும் இவ் வைத்தியசாலைக்கு தின மும் அதிகளவான நோயா ளர்கள் வருகை தருவதால் நோயாளர்களுக்கான இரு க்கை வசதிகளை அதிகரிக்க வேண்டும் எனப் பொதுமக் கள் தெரிவித்தனர். (ம-10.114)

# வவுனியா கோவில்குளத்தில் இளைஞர் குழு மோதல்

## மூவர் பொலிஸாரால் கைது

(குருமன்காடு)

வவுனியா, கோவில் குளம், உமாமகேஸ்வரன் சந்திக்கு அருகாமையில் இளைஞர் குழு மோதலில் ஈடுபட்டமையால் இரு வாக னங்கள் சேதமடைந்துள்ள துடன், மூவர் கைது செய் யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, கோவில் குளம், உமாமகேஸ்வரன் சந்திக்கு அருகாமையில் இளைஞர் குழுக்களுக்கிடை யில் ஏற்பட்ட மோதல் காரண மாக கார் ஒன்றும் முச்சக்கர வண்டி ஒன்றும் அடித்து சேதமாக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் நின்றவர் கள் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பொலிஸார் சேத மாக்கப்பட்ட இரு வாகனங் களையும் மீட்டுள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பில் மூவரை கைது செய்துள்ள னர். மேலும் மூவரை தேடி வருவதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசார ணைகளை முன்னெடுத் துள்ள வவுனியா பொலி ஸார் கைது செய்யப்பட்டவர் களை வவுனியா நீதிமன் றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். ' (ம-250)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- தியாகம் செய்தால் மட்டுமே பிறரின் இதயத்தை வெல்ல முடியும். நாம் நம்மைப் பற்றி எண்ணாத நேரத்தில் மட்டுமே நன்மையும், உண்மையான வாழ்வையும் அனுபவிக்கிறோம்.
- எனக்கு எதுவும் தெரியாது என்ற மனநிலை இருக்கும் வரை, எதையும் வாழ்வில் சாதிக்க முடியாது.
- கோழையும், முட்டாளும் விதியை நம்புகிறார்கள். ஆனால், ஆற்றல் மிக்கவனோ என் விதியை நானே வகுப்பேன் என்று உறுதியைப் பெற்றிருப்பான்.
- சுதந்திரமான நிலையில் தான் அன்பு பிரகாசிக்க முடியும். அன்பின் வழியாக மட்டுமே நம் கடமையை இனிதாக நிறைவேற்ற முடியும்.
- எந்த வேலையாக இருந்தாலும், அதை ஒரு வழிபாடாக செய்யுங்கள். அதற்கு அப்பாலுள்ள எந்த விடயத்தைப் பற்றியும் சிந்தனை செய்ய வேண்டாம்.
- பலவீனத்திற்குப் பரிகாரம் பலத்தை சிந்திப்பதே. துன்பம் வந்த சமயத்தில் துணிவுடன் செயலாற்றுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.சி.சி.சி.வெற்றிக் கிண்ணம் 2வது சுற்றில் டிறைற்றோன் அணி



கே.சி.சி.சி.வெற்றிக் கிண்ணத்திற்காக கே.சி.சி.சி. விளையாட் டுக் கழகம் 26 ஆவது ஆண்டாக நடத்தும் 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் 1வது சுற்றில் 9வது போட்டி 7.4.2019 அன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் டிறைற்றோன் அணி டிறிபேக்ஸ்ரார் அணியை 2 இலக்குகளால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய டிறிபேக்ஸ்ரார் அணி 30 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றனர். லக்ஸன்-24,பிரவீன்-28, மார்சிங்-41, டர்ஸன் ஆட்டமிழக் காது-43, சுஜிந்தன் ஆட்டமிழக்காது-10 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் சேன்திரன்-1, நந்தகுமார்-2, ரவிராஜ்-1 இலக்கை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டிறைற்றோன் அணி 23.5 ஓவரில் 8 இலக்குகளை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றனர். டினோ-29, விஸ்வா-16,அரவிந்-27, டிநாளன்-42, ரவிராஜ்-13 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் றதீஸ்-2, லக் ஸன்-1 , மார்க்சில்-2 , சுகின்தன்-1, சங்கீதன்-1 இலக்கினை கைப் பற்றினர். இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் வருடா வருடம் நடத்தி வரும் தரவரிசை பட்டியலுக்கு டிறைற்றேன் அணி 5.41 புள்ளிகளையும் டிறிபேக்ஸ்ரார் அணி 2.59 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். (க)

# உலகக்கோப்பை பதினொருவர் அணியில் இடம்பிடித்த ஸ்மித்-வோர்னர்




12 ஆவது 50 ஓவர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் எதிர்வரும் மே 30 ஆம் திகதி முதல் ஜூலை 14 ஆம் திகதி வரை நடக்கிறது. இதில் நடப்பு சம்பியன் அவுஸ்திரேலியா, போட்டியை நடத்தும் இங்கிலாந்து, இந்தியா, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, பாகிஸ்தான், வங்களாதேஷ், இலங்கை, ஆப்கானிஸ்தான், மேற்கிந்திய தீவுகள் ஆகிய 10 நாடுகள் பங்கேற்கின்றன. இந்த போட்டிக்கான அவுஸ்திரேலியா அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான அணியில் இடம் பிடித்துள்ள வீரர்களின் விபரம் வருமாறு:

ஆரோன் பின்ஞ் (கப்டன்), ஜேசன் பெஹ்ரெண்டாப், அலெக்ஸ் கேரி (விக்கெட் கீப்பர்), நாதன் கோல்டர்-நைல், பேட் கம்மின்ஸ், உஸ்மான் கவாஜா, நாதன் லயான், ஷான் மார்ஷ், கிளென் மேக்ஸ்வெல், ஜிரிச் சர்ட்சன், ஸ்டீவ் ஸ்மித், மிச்செல் ஸ்டார்க், மார்க்ஸ் ஸ்டோனிஸ், டேவிட் வோர்னர், ஆடம் சம்பா. (க)

# கப்டன் கூல் என்றால் குழப்பமடையாதவர் இதுவே டோனியின் வெற்றியின் இரகசியம்

## ஸ்ரீகாந்த் புகழாரம்



சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தொடர்ந்து வெற்றிகள் குவித்து வருகிறது.

இதன்மூலம் புள்ளிப்பட்டியலில் தொடர்ந்து முதல் இடத்தில் இருக்கிறது சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் வெற்றிக்கு டோனியின் தலைமைப்பண்புதான் காரணம் என முன்னாள் கிரிக்கெட் வீரர் ஸ்ரீகாந்த் கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது, டோனி எல்லாவற்றையும் மிகவும் எளிமையாக வைத்துக் கொள்கிறார்.அவரது பலம் என்னவென்று அவருக்குத் தெரியும். அவர் என்ன நடந்தாலும் திட்டத்தின்படி செயற்படுவார். குழப்பமடையாத மனது தான் டோனியின் வெற்றிக்குக் காரணம் என்று ஸ்ரீகாந்த் கூறியுள்ளார். (க)

# தோல்விகளின் பின்பு வரும் வெற்றி உழைப்பிற்கு உந்து சக்தி தரும்

## டிவில்லியர்ஸ் தெரிவிப்பு



ஐ.பி.எல்.தொடரில் பெங்களூர் அணி முதலாவது வெற்றியைப் பெற்றது. இந்த வெற்றி தொடரும் என்று அந்த அணியின் அதிரடி ஆட்டக்காரர் டிவில்லியர்ஸ் கூறியுள்ளார்.

இந்த ஐ.பி.எல்.தொடரில் இது வரை ஒரு வெற்றிகூட பெறாத பெங்களூர் அணி, பஞ்சாப்பை வீழ்த்தி முதல் வெற்றியை பதிவு செய்தது. இதனால் பெங்களூா அணி வீரர்கள் மட்டுமின்றி, அந்தணியின் ரசிகர்களும் மிகுந்த மகிழ்ச்சியில் உள்ளனர்.

இந்நிலையில் இந்த வெற்றி குறித்து அந்தணியின் அதிரடி ஆட்டக்காரர் டிவில்லியர்ஸ் கூறுகையில், இந்த வெற்றிக்காக நீண்டகாலமாக காத்திருந்தோம். தற்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. இது சரியான திசையில் செல்வதற்கான முதல்படி.

இதே நிலையை வரும் போட்டிகளிலும் தொடர்வோம். இந்த வருடத்தில் 10-11 மாதங்கள் நான் கிரிக்கெட் ஆடவில்லை. இதன் காரணமாக முதல் சில போட்டிகளில் தடுமாற்றம் இருந்தது. அதனை வெளிக்கொணர முயற்சித்தேன். கடுமையான பயிற்சியால் இப்போது இது மீண்டும் சாத்தியமானது. இந்த வெற்றியை நிச்சயம் பராமரிப்போம் என்று கூறியுள்ளார். (க)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# டோனியின் ஆலோசனை சிறப்பாகச் செயற்பட உதவியது.



கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தில் 4 விக்கெட் வீழ்த்தி அசத்திய சென்னை அணி வீரர், தாஹிர் , அணித்தலைவர் டோனியின் அறிவுரையே தனது அபார பந்துவீச்சுக்கு காரணம் என தெரிவித்துள்ளார்.

இவ் வெற்றி சென்னை அணி பெற்ற 7ஆவது வெற்றியாகும். இந்நிலையில் ஆட்டநாயகன் விருது பெற்ற இம்ரான் தாஹிர் கூறுகையில், 'கப்டன் டோனியின் அறிவுரைப்படி தான் நான் பந்து வீசினேன்.

அவரது ஆலோசனை எப்போதுமே பலனை அளிக்கும். அவர் எனக்கு மிகவும் உதவியாக இருந்தார். இது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

நான் விக்கெட்டுகளை வீழ்த்துவதற்கான பாராட்டு எல்லாம் அவரைத் தான் சாரும்.எப்படி பந்து வீச வேண்டும் என்பது பற்றி ஆலோசனை வழங்குவார்.

கப்டனின் அறிவுரையை நான் அப்படியே பின் பற்றினேன். நான் பணியை நேசித்து செய்கிறேன். நாங்கள் சிறந்த கிரிக்கெட்டை உருவாக்கி வருகிறோம்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் வெற்றிக்கு ஒருவர் மீது மற்றவர் மதிப்பதே காரணம். எனது விருப்பத்துக்கு ஏற்றவாறு செயல்களை கப்டன் அனுமதிக்கிறார் என அவர் தெரிவித்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாயில்...

அவர்கள் வாள்வெட்டுக்குச் செல்லும் போது சுழியோடிகள் பயன்படுத்தும் கண்ணாடியை அணிந்தவாறு செல்வது அவர்களின் கைபேசியில் மீட்கப்பட்ட ஒளிப்படங்களின் மூலம் தெரியவந்துள்ளது. மேலும் வாள்களில் தமது பெயர்களைப் பொறித்து வைத்திருப்பதும் அந்த ஒளிப்படங்களில் காண முடிகிறது என்று பொலிஸார் கூறினர்.

மானிப்பாயில் அண்மைய நாள்களில் அடுத்தடுத்து வீடுகளுக்குள் புகுந்து வாள்வெட்டுக் கும்பல் ஒன்று அடாவடியில் ஈடுபட்டு வந்தது. கடந்த புதன்கிழமையும் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஒழுங்கை மற்றும் நகர்ப்பகுதியிலுள்ள வீடு என மூன்று வீடுகளுக்குள் 3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 9 பேர் கொண்ட கும்பல் தாக்குதல் நடத்தியது.

இந்த நிலையில் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்னாண்டோவின் பணிப்பில் சிறப்பு தேடுதல் நடவடிக்கை புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மானிப்பாய், கட்டுடைப் பகுதியில் 8 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். அத்துடன், கும்பலைச் சேர்ந்த நபர் ஒருவர் தலைமறைவாகியுள்ளார். அவரைக் கைது செய்வதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டமை தொடர்பில் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்து கண்காணித்ததுடன், சந்தேகநபர்களிடம் மீட்கப்பட்ட ஒளிப்படங்களில் உள்ள அனைவரையும் கைது செய்யுமாறு மானிப்பாய் பொலிஸாருக்குப் பணித்தார். (ம-101)

## புதுவருடத்தில்...

மணியில் இருந்து நேற்று நண்பகல் வரை இடம்பெற்ற கைகலப்பு மற்றும் விபத்துக்கள் காரணமாக காயமடைந்த 110 பேர் வவுனியா வைத்தியசாலையின் விபத்துக்கள் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் ஏற்பட்ட தகராறு, அடிதடி, குழுமோதல், வாள்வெட்டு, வாகன விபத்து என்பன காரணமாகவே காயங்கள் ஏற்பட்ட நிலையில் அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் புதுவருட தினமான நேற்று முன்தினம் காலை 6 மணியில் இருந்து நேற்று முன்தினம் இரவு 12 மணி வரை 62 பேரும், நேற்று அதிகாலை 12 மணியில் இருந்து நேற்று நண்பகல் வரை 48 பேரும் இச்சம்பவங்களால் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

காயமடைந்தவர்களில் சிறு காயங்களுக்கு உள்ளானோர் சிகிச்சை பெற்று வீடு திரும்பி வரும் நிலையில் ஏனையோர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் வவுனியா, கோவில்குளம் உமாமகேஸ்வரன் சந்திப் பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக கார் ஒன்றும், முச்சக்கரவண்டி ஒன்றும் சேதமடைந்த நிலையில் வவுனியா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. இக்குழு மோதல் தொடர்பில் மூவர் வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மூவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

மேலும், பிறிதொரு பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், புதுவருட தினத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவரும் வவுனியா போக்குவரத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவங்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதுடன் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-250)

## ராஜபக்ஷ ஆட்சி...

யாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். நேர்காணல் ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது அமெரிக்காவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டு வழக்குகள் தொடர்பில் தமது நிலைப்பாடு குறித்து தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

கோத்தபாய மீது அந்த நாட்டு சட்டதிட்டத்துக்கு ஏற்ப வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. மனித குலத்துக்கு எதிரான குற்றத்தில் ஒருவர் ஈடுபட்டிருந்தால் அவரை தண்டிப்பதற்கான உரிமை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு இருக்கின்றது.

அந்த அடிப்படையில் மிகப்பெரிய இன அழிப்புக்கு காரணமாக இருந்த கோத்தபாய ராஜபக்ஷவை இந்த வழக்குகளின் அடிப்படையில் விசாரிப்பது கட்டாயமாகும்.

இலங்கைத் தலைவர்கள் எவரும் தாங்கள் செய்த குற்றங்களை எந்த வேளையிலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதுவும் ராஜபக்ஷ குடும்பத்திடம் அதனை துளியளவேனும் எதிர்பார்க்க முடியாது.

மீண்டும் இந்த நாடு ராஜபக்ஷ குடும்பத்திடம் செல்லுமாகவிருந்தால் இன்னும் 20 வருடங்களுக்கு இந்த நாடு இருண்ட யுகத்திலேயே இருக்கும்.

அந்த அடிப்படையில் ஜனநாயகம் தெரியாத ராஜபக்ஷ குடும்பம் மீண்டும் ஆட்சிக்கு வருவதை இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்கள் எவரும் விரும்பவில்லை என குறிப்பிடுள்ளார். (ம-3)

## தீர்வு தர உத்தர...

ஜனாதிபதித் தேர்தல் குறித்து தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே சி.வி.விக்னேஸ்வரன் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தமிழரின் நீண்டகால பிரச்சினையை தீர்ப்பதற்கு மத்தியஸ்தர் ஒருவரின் ஊடாக உத்தரவாதம் அளித்தால் மாத்திரமே ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பது குறித்து சிந்திக்க முடியுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்களை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு அனுமதிக்கக்கூடாதென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ஜனாதிபதித் தேர்தல் இன்னும் அறிவிக்கப்படாத நிலையில் பெரும்பாலான கட்சிகள் அத்தேர்தல் குறித்து பல்வேறு விமர்சனங்களை முன்வைக்க ஆரம்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பிரதமர் பதவிக்...

ஐ.தே.கவிலிருந்து வேறு ஒருவரை பிரதமர் பதவிக்கு நியமிக்கப் போவதாக வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் செய்தியாளர் எழுப்பிய கேள்விக்குப் பதில் வழங்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன் போது பேசிய அவர்,

பிரதமர் பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் தற்பொழுதுள்ள தகுதியான ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே. ஐக்கிய தேசியக் கட்சியில் ஒரு தலைவர் தான் இருக்கின்றார். அவர் ரணில் விக்கிரமசிங்க மட்டும் தான். இதில் எந்தவித மாற்றமும் கிடையாது.

இதுபோன்ற பொய்யான செய்திகளை அவிழ்த்து விடுகின்றனர். இருப்பினும், கட்சியில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை. நான் மிகவும் பொறுப்புடன் கூறுகின்றேன்.

தாய் தந்தையர்களின் பெயரைக் காட்டி எமது கட்சியை முன்னுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய தேவை இல்லை என்றார். (ம-3)

## சுழற்சி முறையி...

யோகத்தை முன்னெடுப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல பகுதிகளிலும் மழை பெய்தாலும் மின் உற்பத்தி நிலையங்கள் அமைந்திருக்கும் நீரேந்து பிரதேசங்களில் மழை பெய்யவில்லை.

நீரேந்து பிரதேசங்களின் நீர் மட்டம் தற்சமயம் 30 சதவீதமாக காணப்படுகிறது. பண்டிகைக் காலத்தில் மின்சார தேவை அதிகரித்திருந்தாலும் நீர் மின்நிலையங்களிலிருந்து போதியளவிலான மின்சாரம் வழங்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை முதல் மின்சார துண்டிப்பு இடைநிறுத்தப்பட்டாலும் மின்சாரத்தை உற்பத்தி செய்வது தொடர்ந்தும் சவாலாகவே காணப்படுறது.

இந்நிலையில் எதிர்வரும் நாட்களில் மீண்டும் சுழற்சி முறையில் மின்சார விநியோகத்தை தடைசெய்ய தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அமைச்சின் ஊடகப் பேச்சாளர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த இரு வாரங்களாக 5 மணித்தியாலங்களுக்கு சுழற்சி முறையில் மின் விநியோகம் தடை செய்யப்பட்டது. இதன் காரணமாக நாடளாவிய ரீதியாக பல்வேறு தரப்பினரும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## உழவு இயந்திர...

மதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பழைய முறிகண்டிப் பகுதியிலிருந்து மன்னார் இலுப்பைக்கடவைக்கு நேற்றுக் காலை சென்ற உழவியந்திரமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.

துணுக்காய் சந்தியிலிருந்து கல்விளான் சந்தியூடாக இலுப்பைக்கடவை நோக்கிப் பயணித்த மேற்படி உழவியந்திரம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து கல்விளான் சந்திப் பகுதியில் உழவியந்திரப் பெட்டி தடம் புரண்டுள்ளது. இதில் பெட்டியில் இருந்து பயணித்த ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை இதில் படுகாயமடைந்த நால்வர் உடனடியாக மல்லாவி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு இரண்டு பேர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதுடன், இரண்டு பேர் மல்லாவி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவத்தின் போது பழைய முறிகண்டியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான புவனேஸ்வரநாயகம் நிசாந்தன் (வயது 27) என்பவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் மல்லாவி வைத்தியசாலையிலிருந்து மரண விசாரணைகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதுடன். இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை மல்லாவிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-286-315)

## தீர்வைப் பெற்று...

கம் என்று அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டிருந்த அவர், தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்குவது அரசாங்கத்தின் கடமையாகும் என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சி கடந்த காலங்களில் செய்த தவறுகளை சரிசெய்ய தற்போது நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அனைத்து வகைகளிலும் மக்களுக்கான சேவையை ஆற்றுவதே எமது பிரதான நோக்கமாகும். நாம் மக்களின் பயத்தை நீக்கியுள்ளோம். இதுவே எமது பாரிய வெற்றியாகத்தான் கருதப்படுகிறது.

கடந்த காலங்களில் கொடுத்த வாக்குறுதிகள் சிலவற்றை நிறைவேற்ற முடியாவிட்டாலும், மக்களுக்கான ஜனநாயக உரிமையை அவர்களுக்கு முற்றாக வழங்கியுள்ளோம்.

நாட்டிலுள்ள அனைத்து இன மக்களையும் அரவணைத்துக்கொண்டு, ஒற்றுமையாகவும் ஐக்கியமாகவும் வாழும் சூழலை நாம் உருவாக்கியுள்ளோம்.

இதனால், தேர்தல் தொடர்பில் நாம் அச்சப்படவில்லை. எமது கட்சி ஸ்திரமான நிலைப்பாட்டில் தான் இருக்கிறது. சிலர் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் பொய்யான கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள். இதுதொடர்பில் எல்லாம் நாம் அலட்டிக்கொள்ளப்போவதில்லை.

கட்சி ரீதியாக நாம் ஒற்றுமையுடன் தான் இருக்கிறோம். அத்தோடு, தமிழ் மக்களுக்கான பிரச்சினைக்குத் தீர்வை வழங்குவதும் எமது முக்கியமான பொறுப்பாக இருக்கிறது. இதனை நாம் தமிழர்களது பிரச்சினையாக அன்றி, தேசியப் பிரச்சினையாகத்தான் பார்க்கிறோம். இன்று வெள்ளை வான் கலாசாரமோ கடத்தல் பயமோ இல்லை.

இந்த நிலையில், நாம் சில விடயங்களில் தாமதம் காட்டுவது நாட்டின் ஐக்கியத்திற்காகவே அன்றி, தீர்வைப் பெற்றுக்கொடுக்கக் கூடாது என்றல்ல.

மேலும், இந்தப் பிரச்சினைக்கான தீர்வை நாம் இலங்கைக்குள் தான் பெற்றுக் கொள்ள வேண்டும். இதில், சர்வதேசத்தின் தலையீடு தேவையில்லை. இதனை நாம் சர்வதேசத்திடமே கூறிவிட்டோம் என்றார். (ம-3)

## தேர்தல் நடத்தப்பட்டவுடனே...

தங்கல்லை, கால்டன் இல்லத்தில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

இந்த அரசாங்கம் புதுவருடம் ஒன்று வரும் போது தெரிந்து தெரிந்து பொருட்களுக்கான வரியை அதிகரித்தது. எப்போது வரியை அதிகரிக்க வேண்டும் என்பதை இந்த அரசாங்கம் கருத்தில் கொள்வதில்லை.

எமது அரசாங்க காலத்தில் சிங்கள, தமிழ் புத்தாண்டு மற்றும் நத்தார் காலம் என்பவற்றில் பொருட்களின் வரிகளை அதிகரிக்கவில்லை எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ம-3)

# கிளிநொச்சி கல்லாறுப் பகுதியில் இரு குழுக்களிடையே வாள்வெட்டு

## நான்கு பேர் படுகாயம்

கிளிநொச்சி கல்லாறுப்பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் நான்கு பேர் காயமடைந்து கிளிநொச்சி பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி கல்லாறுப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலையடுத்து, இடம்பெற்ற வாள் வெட்டுச்சம்பவத்தில் நான்குபேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்த நால்வரும் தர்மபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தின் போது கந்தையா கருணானந்தன், கந்தையா இரத்தினசிங்கம், கருணானந்தன் குலோசன், செல்லா கிருசன், ஆகிய நால்வருமே காயமடைந்துள்ளனர்.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பில் ஒருவரை மாத்திரமே தர்மபுரம் பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் இச்சம்பவத்தில் பொலிஸார் ஏனைய சந்தேக நபர்களை கைது செய்வதில் பாரபட்சம் காட்டுவதாக தெரிவித்து பாதிக்கப்பட்டதரப்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் தமது முறைப்பாட்டை செய்துள்ளதையடுத்து, குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (ம-315)

# அரசியல் புரட்சியில்லை - அஜித்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்கு முன்னர் அரசியலில் மீண்டும் ஒரு புரட்சியை ஏற்படுத்தப் போவதாக கூறப்படும் செய்தியில் உண்மை எதுவும் இல்லையெனவும், ஜனாதிபதி மீண்டும் நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்ய விரும்பினால், அவ்வாறான ஒரு நடவடிக்கையில் ஈடுபடலாம் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி அமைப்பாளரும், அமைச்சருமாகிய அஜித் பீ. பெரேரா தெரிவித்தார்.

சட்ட ரீதியாக அனுமதிக்கப்பட்ட ஒரு முறைமையிலன்றி அரசியல் புரட்சியை ஏற்படுத்த முடியாது. பிரதமரை மாற்றுவதாயின் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் வேண்டும் என்றார். (ம-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விரைவு பொதிகள் சேவை

### விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK - 550 */=Kg
கனடா - 900 */=Kg
ஜேர்மனி - 700 */=Kg
நெதர்லாந்து - 700 */=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS (C-6058)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## வாடகைக்கு

மானிப்பாய் வீதி ஆறுகால் மடம் பிரதான வீதியில் கடையாக / களஞ்சியமாக பாவிக்கக் கூடிய கட்டடம் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
077 283 5005,
076 085 5501
(8479)

## அபிவிருத்தி அலுவலர் தேவை

வளர்ந்து வரும் ஒருங்கிணைந்த இயற்கை விவசாயப் பண்ணையில் சந்தைப்படுத்தல், மக்கள் தொடர்பு உட்பட வெளிக்கள வேலைகளைப் பொறுப்பேற்கவும், பண்ணையின் உள் வேலைகளை ஒருங்கிணைப்பதில் பங்கேற்கவும், தகுதி வாய்ந்த ஒருவர் தேவை.

பகுதி நேர வேலையை நாடுவோரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு :
077 172 6583

திருநாவுக்கரசு நினைவு மாதிரிப் பண்ணை
மாவிட்டபுரம்
(8478)

## பணிப் பெண் தேவை

வெள்ளவத்தையில், சிறிய குடும்பம் ஒன்றுடன் தங்கியிருந்து வேலை செய்ய பணிப்பெண் ஒருவர் உடனே தேவை.

தொடர்புகளுக்கு :
077 052 7090
(8479)

## தேவை

முறுகண்டியில் இயங்கும் P.P.T. Express உயர்தர சைவ உணவகத்திற்கு வேலையாட்கள் தேவை.

- மனேஜர் ஆண் / பெண்
- வெயிற்றர்
- காசாளர்
- ஐஸ்கிறீம் தயாரிப்பாளர்
- கணக்காளர்

தொடர்பு : 077 386 6250
(8480)

## தீக்கா...

யாணன் மேற்கு உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 17 வயதான யுவதி வீட்டாருடன் கருத்து மோதலில் ஈடுபட்டு தனக்குத் தானே தீ மூட்டியதாக கூறப்படுகிறது.

இதில் தீக்காயங்களிற்கு உள்ளான யுவதி பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா வைத் தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று திங்கட்கிழமை மதியம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,60)

## 29,461...

வரும் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி காலை 6.00 மணி தொடக்கம் நேற்று திங்கட்கிழமை காலை 6.00 மணிவரை நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே குறித்த 941 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் குறித்த தினத்திற்குள் வீதி விதி முறை மீறல் தொடர்பாக 29,461 வழக்குகள் தாக்கல் செய்துள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதேவேளை கடந்த 48 மணித்தியாலங்களுக்குள் ஏற்பட்ட விபத்துக்களினால் 413 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)




வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக் கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623
(8481)

## வீட்டுடன் சேர்ந்த கடை விற்பனைக்கு



சாவகச்சேரி, நுணாவில், பருத்தித்துறை வீதி (மட்டுவில் மகா வித்தியாலயம் அருகில்) வீட்டுடன் சேர்ந்த கடை விற்பனைக்கு. நல்ல குடிநீர் வசதியுடன் அருகில் பாடசாலைகள் மற்றும் கடை வசதிகளுடன் பிரதான பஸ் பயணிக்கும் பாதையில் அமைந்துள்ளது.

01. 37'x25' நீள அகலமுடைய 2 கடை தொகுதி (கீழ்மாடி) (ஹாட்வெயருக்கு உகந்தது)
02. 37' நீள 3 அறைகள் கொண்ட வீடு மேல்மாடி
03. இரண்டு பல்கனி
04. 43'x25' நீள அகலம் உடைய மொட்டை மாடி

தொடர்பு : ஆனந்தன்
078 615 5929, 077 416 3146
(C-6099)

# மரண அறிவித்தல்

## கணபதி முருகேசு

முன்னாள் உதவி அரச அதிபர் செட்டிகுளம், மேலதிக மாகாண காணி ஆணையாளர் வடக்கு, கிழக்கு மாகாண சபை)

தோற்றம் 13.05.1937 | மறைவு : 14.04.2019



மீசாலையை பிறப்பிடமாகவும் வவுனியா மற்றும் கிளிநொச்சியில் வசித்தவருமாகிய கணபதி முருகேசு (முன்னாள் உதவி அரச அதிபர் செட்டிகுளம், மேலதிக மாகாண காணி ஆணையாளர் வடக்கு, கிழக்கு மாகாண சபை) 14.04.2019 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி - அன்னப்பிள்ளை தம்பதிகளின் ஏக புதல்வனும், காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - நாகமுத்து தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற சின்னத் தங்கம் அவர்களின் மைத்துனரும், காலஞ்சென்ற முருகேசு ஆனந்தகுமார் (முன்னாள் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வவுனியா), கலாநிதி ஜெயக்குமார் (விரிவுரையாளர் சிட்னி பல்கலைக்கழகம்), சந்திரகுமார் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்), குமாரநந்தினி (ஆசிரியை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), ஆனந்தரஜினி (உதவி முகாமையாளர் தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், தேவகி (ஓய்வுபெற்ற ஆசிரியர் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), சுதாமதி (அவுஸ்திரேலியா), வானதி (ஆசிரியை - இங்கிலாந்து), வதனகுமார் (சிரேஸ்ட பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை - வவுனியா), குணசீலன் (பிரதம பொறியியலாளர் இலங்கை மின்சாரசபை - சுன்னாகம்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2019) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு இல.02, மதீனா வீதி, மகாறம்பைக்குளம் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் கிளிநொச்சி இரத்தினபுரம் பொது நோக்கு மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 4.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக திருநகர் பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
(C-6094)

இல.02, மதீனா வீதி, மகாறம்பைக்குளம். - குடும்பத்தினர்

## காசி யாத்திரை

ஆரம்பம் : 15.05.2019 | யாத்திரீகர் : 10 | நாள்கள் : 10

### தரிசிக்கும் இடங்கள் :

டெல்லி நாராயணர் கோயில் வேறு இடங்களும் காசியில் 15 இடங்கள், கங்காபூசை, கயா, புத்தகயா, அலகாபாத், (கங்கா, யமுனா, சரஸ்வதி திருவேணிசங்கமம், சீத்தாமடி, ஆக்ரா (தாஜ்மகால்), மதுரா கிருஷ்ண ஜென்ம பூமி, பிரேமந்திர், பிரமாண்டமான கிருஷ்ணர் கோயில், செங்கோட்டை, இராமேஸ்வரம், உத்திரகோசமங்கை, திருப்புலானி, நவபாஷானம், பஞ்சமுக ஆஞ்சநேயர், அப்துல்கலாம் மணிமண்டபம், மதுரை மீனாட்சி அம்பாளையும் தரிசிக்கலாம்.

ஒரு நாள் சென்னையில் சொப்பிங்
பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை

4 விமான பயணடிக்கட், மூன்று வேளை மடப்பள்ளி ஆள்கள் சமைத்த உணவு, காப்பி, ரீ, குடிநீர், 2 பேருக்கு வெஸ்ரன் கொமட், குளியலறை இணைந்த அறைகள், பயணம் முழுவதும் A/C வாகன வசதி, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரவும் திரும்ப யாழ் செல்லவும் வாகன வசதி ஒழுங்குகள் செய்து தரப்படும். பதிவு செய்யவும்.

"சென்றவர்களைக் கேளுங்கள் சென்று வரலாம் வாருங்கள்"

கலாநிதி. T.ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன்
59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11
077 768 0102 / 077 736 2154
Email : Sriranganathan2601@gmail.com
(C-6093)

இலங்கையின் முதல்தர 5 நட்சத்திர விருது வென்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்
எமரல்ட் ஐல் License No. 1162

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற முகவராக வழங்கும்

## மலேசிய வேலைவாய்ப்பு

2-3 வருட கம்பனி விசா

விசா, டிக்கட் கிடைத்த பின்னரே கட்டணம் அறவிடப்படும்!

| பொலியஸ்தர் தொழிற்சாலை | இறப்பர் தொழிற்சாலை | வீட்டுப் பணிப்பெண் | கோழிப் பண்ணை |
|---|---|---|---|
| ஃபோக்லிஃப்ட் டிரைவர் மெஷின் டெக்னீஷியன் எலெக்ட்ரீஷியன் தொழிற்சாலை பணியாளர் | உற்பத்தி உதவியாளர்கள் | முற்றிலும் பாதுகாப்பான வீடுகளில் பணி ஏற்பாடு | பண்ணை பணியாளர்கள் |
| ரூ.75,895/- (மேலதிக வேலைநேரக் கொடுப்பனவு உள்ளடங்கலாக) | ரூ.55,510/- (மேலதிக வேலைநேரக் கொடுப்பனவு உள்ளடங்கலாக) | ரூ.52,800/- | ரூ.55,510/- (மேலதிக வேலைநேரக் கொடுப்பனவு உள்ளடங்கலாக) தமிழ் உரிமையாளரின் பண்ணையில் பாதுகாப்பான வேலை |

முற்றிலும் இலவச பயணம்!

தங்குமிடம், மருத்துவம், போக்குவரத்து, விமானச்சீட்டு வழங்கப்படும். 8 மணி + OT வாரம் 6 நாள் வேலை. வயதெல்லை : 18 - 40

எமரல்ட் ஐல் License No. 2268
077 00 38 215
021 2219 221
077 55 46 956
221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம், The Loverக்கு அருகே
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk
(C-6097)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org